# வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000

## இரண்டாம் பாகம்

அருள்நிதி
மன்னார்குடி பானுகுமார்

**விஜயா பதிப்பகம்**
*20, ராஜ வீதி,*
*கோயம்புத்தூர் - 641 001.*
vijayapathippagam2007@gmail.com

© விஜயா பதிப்பகம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 - இரண்டாம் பாகம்** |
| ஆசிரியர் | : | மன்னார்குடி பானுகுமார் |
| முதல் பதிப்பு | : | ஆகஸ்ட் 2010 |
| வெளியீடு | : | **விஜயா பதிப்பகம்**<br>20, ராஜ வீதி,<br>கோயம்புத்தூர் - 641 001.<br>✆ 0422 - 2382614 / 2385614 |
| ஒளியச்சு / புத்தக வடிவமைப்பு | : | ஐரிஸ் கிராபிக்ஸ், கோவை. |
| அட்டை வடிவமைப்பு | : | ஆர்.சி. மதிராஜ், சென்னை. |
| அச்சாக்கம் | : | ஜோதி எண்டர்பிரைசஸ், சென்னை - 5. |
| பக்கம் | : | 160 |
| விலை | : | ரூ.75/- |

**ISBN - 81-8446-281-6**

**VEDHADHRI MAHARISHIYIN PONMOZHIGAL 5000 PART - II**

| | | |
|---|---|---|
| Author | : | Mannarkudi Banukumar |
| First Edition | : | August 2010 |
| Published By | : | **VIJAYA PATHIPPAGAM,**<br>20, Raja Street, Coimbatore - 641 001.<br>✆ 0422 - 2382614 / 2385614 |
| Layout & Laser type set | : | IRIS Graphics, Coimbatore. |
| Cover Design | : | R.C. Mathiraj, Chennai. |
| Printed At | : | Jothi Enterprises, Chennai - 5. |
| Pages | : | 160 |
| Price | : | Rs.75/- |

# ஞானப்பெட்டகம்

அறிஞர்களின் கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்வது பொன்மொழியாகும். அந்த வகையில் அருட்தந்தையின் உபதேசங்களை பொன்மொழிகளாகத் தொகுத்துள்ளார் நமது ஞானச்செல்வர் பானுகுமார்.

கடமையைக் கடவுள் பணியாக ஆற்றி வருபவர். செய்வன வற்றைத் திருந்தச் செய்யும் பண்பாளர். அவர் எண்ணத்தால், சொல்லால், செயலால், எழுத்தால் பலருக்கும் உதவிவரும் பெருந்த கையாளர். அருட்தந்தையின்மீது அளவற்ற குருபக்தி கொண்டவர். இவரது குடும்பமே அருட்தந்தையின் பணிக்கு அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. குருவின் நூறாவது பிறந்த நாளுக்கு, குருகாணிக் கையாக, அருட்தந்தையின் ஐயாயிரம் பொன்மொழிகளை ஐந்து தொகுப்பாக வடிவமைத்து உள்ளார்கள்.

இந்நூல் மாணவர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், சொற் பொழிவாளர்கள், வாழ்க்கைப் பிரச்சனைகளுக்கு விடைதேடுபவர்கள் - வாழ்க்கை கல்வி பயில விரும்புபவர்கள் ஆகிய பலதரப்பட்ட மக்களுக்கும் நண்பனாக நல்லாசிரியராக வழிகாட்டும்.

உலக வாழ்க்கை, ஞானவாழ்க்கை மட்டுமல்லாது அரசியல் முதல் ஆன்மீகம் வரை, அனைத்துத் துறைகளிலும் மானுடத்திற்கு இந்நூல் வழிகாட்டிக் கொண்டிருக்கும். இந்நூல் ஒரு ஞானக் களஞ்சியம்; ஞானப்பெட்டம்; ஞான அகராதி; ஞானப்பட்டறை. உலகம் உள்ளவரை மானுடத்தை வழிநடத்திச் செல்லும் என்பது உண்மை.

அன்புடன்
**புலவர். க. தியாகராஜன்**

அறிவுத்திருக்கோயில்
ஆழியார்.

# குரு காணிக்கை

***‘‘எந்தக் காட்சியை அகக்காட்சியாக, இறைவன் காட்சியாகக் கண்டேனோ, அந்த நிலைக்கு, என் அறிவைக் கொண்டு உங்களைத் தூக்கிக்கொண்டுபோய் அந்தக் காட்சியைக் கொடுக்கிறேன்’’***

*- அருள்தந்தை.*

*அண்மையில், ‘வேதாத்திரிய சிந்தனைகள்’ என்ற புத்தக வெளியீட்டு விழாவிற்குச் சென்றிருந்தேன். ‘வேதாத்திரியத்தின் பெருமை உலகுக்கு எப்போது புரியும்?’ என்று அப்புத்தகத்தில் ஆசிரியர் வினா எழுப்பி இருந்தார். புத்தகத்தின் சிறப்பினை பேசி முடித்தபின், ஆசிரியரின் வினாவுக்குப் பதிலளித்தேன். இதனை இங்கு உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.*

*‘‘ஒரு மகானின் பெருமையை அல்லது அவரது கருத்துக்களை உலகம் உணர வேண்டும் என்றால், அந்த மகானுக்கு திறமை வாய்ந்த சீடர்கள் அமைய வேண்டும். அவரைப் பற்றி மற்றவர்கள் அதிகமாகப் புத்தகங்கள் எழுதவேண்டும்’’.*

**இயேசுவிற்கு** *புகழ்பெற்ற 12 சீடர்கள் இருந்தனர்.* **ஸ்ரீராம கிருஷ்ணருக்கு** *விவேகானந்தர் உட்பட 16 சீடர்கள் இருந்தனர்.* **புத்தருக்கும்** *திறமை வாய்ந்த பல சீடர்கள் இருந்தனர். இந்த சீடர்கள் உலகம் முழுவதும் தங்கள் குருவின் கருத்துக்களை, பெருமைகளை பரப்பினார்கள். இந்தச் சீடர்களைப்போல் வேதாத்திரிய சீடர்களும் குருவின் கருத்துக்களை உலகம் முழுவதும் பரப்ப தன்னலமற்ற தொண்டு புரியவேண்டும்.*

*அடுத்து, ஒரு மகானின் பெருமையை உலகம் புரிந்துகொள்ள வேண்டுமாயின், அந்த மகானைப் பற்றிய நூல்கள் அதிகமாக வெளிவர வேண்டும்.*

மகாத்மா காந்தி எழுதிய புத்தகங்கள் குறைவு. ஆனால் அவரைப் பற்றி எழுதியவர்களின் புத்தகங்கள் அதிகம். இராமலிங்க வள்ளலார் எழுதிய நூல்களைவிட, அவரது நூல்களைப் பற்றி வெளிவந்த நூல்கள் அதிகம். திருவள்ளுவர் எழுதிய நூல்களைவிட, அவரது ஒரு குறள் பற்றி வெளிவந்த நூல்கள் ஏராளம்.

**வேதாத்திரியத்தைப் பற்றி அதிகளவு புத்தகங்கள் வெளிவர வேண்டும். இம்முயற்சிக்கு அருட்தந்தையின் சீடர்கள் ஆக்கமும் ஊக்கமும் தரவேண்டும். வேதாத்திரியத்தைப் பற்றி ஏராளமான நூல்கள் பல மொழிகளில் வரவேண்டும்.**

**புத்தகங்கள் மாமனிதர்களை உருவாக்கி இருக்கின்றன. பகவத்கீதை, அரிச்சந்திரன் கதை, ஜான் சங்கினின் 'அண்டு டு தி லாஸ்ட்' ஆகிய புத்தகங்கள்தான், காந்திஜி என்ற மகாத்மாவை உருவாக்கியது. விவேகானந்தரைப் பற்றிய ஒரு புத்தகம்தான், சுவாமி சத்பவானந்தரை உருவாக்கியது. இதைப்போல் அருட்தந்தையின் கருத்துக்கள் அடங்கிய புத்தகங்கள் அதிகளவில் வந்தால்தான் மாமனிதர்கள் தோன்றுவார்கள்.**

வேதாத்திரியத்தின் புகழ் விரைவில் உலகெங்கும் சென்று விடும். அவரது கருத்துக்களை உலகம் ஏற்றுக்கொள்ளும். அவரது இலட்சியக் கனவான உலக சமாதானம் நிச்சயம் வந்துவிடும்.

அன்று பேசிய கருத்துக்களின் தாக்கம்தான் இந்தப் புத்தகம். உலகெங்கும் புகழ்பெற்றுள்ள மகான்கள், அறிஞர்கள் - சான்றோர்கள் ஆகியோர்களின் பொன்மொழிகள் அடங்கிய புத்தகங்கள் வெளி வந்துவிட்டன. நமது ஞானத்தந்தையின், ஞானகுருவின், ஞானவழி காட்டியின் பொன்மொழிகள் மட்டும் இன்னும் வெளிவரவில்லையே என்ற ஏக்கம் என்னிடம் இருந்ததுண்டு. இப்பணியினை, என்னிடம் தான் குருநாதர் விட்டுச் சென்றுள்ளார் என்பதை இப்போது பெருமையாகக் கருதுகிறேன்.

சமய காழ்ப்புகள் மறைய, ஏற்றத்தாழ்வுகள் நீங்க, உயர்வு தாழ்வுகள் இல்லாத நிலை மலர, உலக சமாதானம் மலர்ந்திட, இறையை உணர்ந்து போற்றிய மகரிஷியின் மொழியும் அருளுரை களும் மானுடத்திற்குக் கிடைத்த பொற்குவியலாகும்.

குருவின் நூற்றாண்டு நினைவாக, குருவின் பொன்மொழிகளை தொகுத்து ஐந்து பாகமாக அருட்தந்தை வேதாத்திரி மகரிஷிக்கு இத்தொகுப்பினை அர்ப்பணிக்கிறேன்.

இந்நூல் பொன்மொழிகள் அடங்கிய பேழை மட்டுமல்ல; வேதாத்திரிய அறிவுக் களஞ்சியம், ஞானக் களஞ்சியம். வேதாத் திரியத்திற்கு ஒரு அகராதி. பொன்மொழிகளோடு கூடுதலாக இவற்றையும் சேர்த்திருப்பது இந்நூலுக்கு பெருமை சேர்க்கும் என்று நம்புகிறேன்.

இந்நூலை தொகுக்க அவ்வப்போது ஆலோசனை வழங்கிய புலவர் க. தியாகராஜன், அவ்வப்போது மலர்களைக் கொடுத்தனுப்பி வரும் அருள்நிதி தினகரன், வாழ்க்கைத் துணைவியார் அ.நி. பானுமதிகுமார், ஞானச்செல்வங்கள் - பிரம்மஞானிகள் நிவேதிதா, நரேந்திரன், தவமைய அன்பர்கள் மற்றும் ஆர்வத்துடன் இந்நூலை வெளியிட்ட பாசமிகு சகோதரர் திரு. மு. வேலாயுதம் ஆகியோர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குருவின் புகழை அவரது உபதேசங்களை உலகெங்கும் கொண்டு செல்வோம். குருவின் வாழ்த்தினைப் பெற்று வளமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

குருவின் தொண்டில்
**பானுகுமார்**

*பி.58, ஏழாவது குறுக்குத்தெரு,*
*அண்ணாநகர், செங்கற்பட்டு.*

E-mail: banukumar.v@gamil.com

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | சிந்தனை | 15 |
| 2. | சிந்தனையாளர்கள் | 16 |
| 3. | சினம் | 16 |
| 4. | சினிமா | 18 |
| 5. | சீதனம் | 19 |
| 6. | சீர்கேடு | 19 |
| 7. | சீர்திருத்தம் | 19 |
| 8. | சீவகாந்தம் | 20 |
| 9. | சீவஇனம் | 21 |
| 10. | ஜீவவித்துக் குழம்பு | 21 |
| 11. | சுத்தவெளி | 21 |
| 12. | சுதந்திரம் | 22 |
| 13. | சுருதி யுக்தி அனுபவம் | 23 |
| 14. | சூக்கும சரீரம் | 23 |
| 15. | சூரியன் | 23 |
| 16. | செத்தவர்கள் | 24 |
| 17. | செயல் | 24 |
| 18. | செயலும் கருத்தும் | 25 |
| 19. | செயலே விளைவு | 25 |
| 20. | செல்வம் | 26 |
| 21. | செல்வந்தர் | 27 |
| 22. | சொற்கள் | 27 |
| 23. | சேரமுடியாதது | 27 |
| 24. | சேவை | 27 |
| 25. | சோதிடம் | 27 |
| 26. | சோஷியலிசம் | 28 |
| 27. | தட்டுங்கள் | 28 |
| 28. | தன்முனைப்பு | 29 |
| 29. | தப்ப முடியாது | 30 |
| 30. | தடுமாற்றம் தடமாற்றம் | 30 |
| 31. | தத்துவம் | 31 |
| 32. | தத்துவ ஞானம் | 35 |
| 33. | தற்சோதனை | 35 |
| 34. | தற்சுழற்சி | 36 |
| 35. | தலையீடு | 36 |
| 36. | தலைவிதி | 37 |
| 37. | தவறு | 37 |
| 38. | தவமும் அறமும் | 37 |

39. தற்பெருமை 38

40. தர்மசங்கடம் 38

41. தவம் 38

42. தன்னிலை விளக்கம் 40

43. தன்னையறிதல் 40

44. தண்டனை 40

45. தம்பதிகள் நட்பு 41

46. தனிமம் 41

47. தாயன்பும் குரு அன்பும் 42

48. தாய் 42

49. தாய்சேய் 42

50. தாவரம் 42

51. திருமணம் 43

52. திருவிளையாடல் 44

53. திருத்தம் 44

54. திருட்டு 44

55. தியாகம் 45

56. தியாக ஜீவன் 45

57. தியானம் 45

58. திறமை 46

59. தீட்சை 46

60. தீங்கு 46

61. துறவறம் 46

62. துறவி 47

63. துரியம் 47

64. துரியாதீதம் 48

65. துவாத சங்கம் - துவாத சந்தம் 49

66. துன்பம் 50

67. தூரம் 52

68. தூக்கம் 52

69. தூய்மை 52

70. தூயநெறி 52

71. தெய்வம் 53

72. தெய்வநிலை 54

73. தெய்வீக நீதிமன்றம் 55

74. தெளிந்தோர் 55

75. தேவதை 55

76. தொழில் 55

77. தொண்டு 56

78. தொண்டு நிலையங்கள் 57

79. தேடலும் ஞானமும் 57

80. தேவை 57

81. தோல்வி 59

82. வசியம் 59

83. வடக்கு 59

84. வடிவம் 59

85. வறட்டு வேதாந்தம் 60

86. வல்லமை 60

87. வல்லவர்கள் 60

88. வலி 60

89. வரி 60

90. வருத்தம் 60

91. வறுமை 61
92. வர்மக்கலை 61
93. வரதட்சணை 62
94. வருங்காலம் 62
95. வளமான வாழ்க்கை 63
96. வஞ்சம் 63
97. வங்கிகள் 64
98. வாதம் 64
99. வாய்மை 64
100. வாழ்க வளமுடன் 64
101. வாழ்க்கை 66
102. வாழ்க்கைத்துணை 68
103. வாழ்த்து 68
104. வாழ்க்கைத்துணை 70
105. வாழ்க்கையின் வெற்றி 71
106. வாழ்வின் நோக்கம் 71
107. வாழ்வின் தத்துவம் 71
108. வாழ்வுப் பயணம் 72
109. வான்காந்தம் 72
110. வானியல் 73
111. வானப்பிரஸ்தம் 73
112. வித்து 73
113. விதி 73
114. விதி மதி 74
115. விடுதலை 74
116. விளைவு 74
117. விளங்காதது ஏன்? 74
118. விழிப்பு 74
119. விந்து சக்தி 75
120. விதி விவேகம் 75
121. விபத்து 76
122. வியாபாரி 76
123. விழிப்பு நிலை 76
124. விலங்குகள் 76
125. விலங்கினச் செயல் 76
126. வினைப்பதிவு 77
127. வினைத்தொடர் 77
128. வினைகள் 77
129. வினைப்பயன் 77
130. விஞ்ஞானம் 78
131. விஞ்ஞானிகள் 78
132. விருப்பம் 79
133. விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் 79
134. விண் 79
135. விண்துகள் 80
136. விநாயகன் 81
137. வீட்டோ பவர் 81
138. வீடுபேறு 81
139. வெட்டவெளி 81
140. வெளி 82
141. வெற்றி 82
142. வெறுப்பு 82
143. வேதம் 82
144. வேகம் 83

| | | | |
|---|---|---|---|
| 145. வேதாந்தம் | 83 | 171. நிஷ்காமிய கர்மம் | 90 |
| 146. வேதாந்தமும் சித்தாந்தமும் | 83 | 172. நீர் | 90 |
| 147. வேதமும் சாஸ்திரமும் | 84 | 173. நூல்கள் | 91 |
| 148. வேண்டுதல் | 84 | 174. நெசவு | 91 |
| 149. வேண்டாமை | 84 | 175. நேசித்தல் | 91 |
| 150. வேலைவாய்ப்பு | 84 | 176. நேர்மை | 92 |
| 151. வேற்றுமை | 84 | 177. நேர்நிறை உணர்வு | 92 |
| 152. வைசியர்கள் | 84 | 178. நேரம் பார்க்கலாமா? | 92 |
| 153. நட்பு | 85 | 179. நோய் | 92 |
| 154. நல்வழி | 85 | 180. நோயாளி | 93 |
| 155. நவக்கிரக தவம் | 85 | 181. நோயற்ற வாழ்வு | 94 |
| 156. நற்றொண்டு | 86 | 182. நோன்பு | 94 |
| 157. நன்றி | 86 | 183. பக்தன் | 94 |
| 158. நண்பர்கள் | 87 | 184. பக்தி | 95 |
| 159. நாகரிகம் | 87 | 185. பகை | 95 |
| 160. நாட்டுப்பற்று | 87 | 186. பசித்திரு - தனித்திரு - விழித்திரு | 95 |
| 161. நார்மடி | 87 | 187. பஞ்சபூத தவம் | 96 |
| 162. நாராயணன் | 87 | 188. பஞ்ச தன் மாத்திரைகள் | 96 |
| 163. நாமம் | 88 | 189. பணம் | 96 |
| 164. நான் யார்? | 88 | 190. பண்பு | 96 |
| 165. நிகழ்காலம் | 89 | 191. பண்பாடு | 97 |
| 166. நிலையாமை | 89 | 192. பணிவு | 97 |
| 167. நிறைமனம் | 89 | 193. பதவி | 98 |
| 168. நியதி | 90 | 194. பதிவுகள் | 98 |
| 169. நிழல் விண் | 90 | 195. பரமாணு | 99 |
| 170. நினைத்தலும் - மறத்தலும் | 90 | 196. பரிணாமம் | 100 |
| | | 197. பற்று | 100 |

198. பற்றற்ற வாழ்க்கை 100
199. பற்றற்ற நிலை 100
200. பற்றும் பாசமும் 101
201. பயிற்சி 101
202. பழக்கம் 101
203. பாசம் 101
204. பாடகன் 101
205. பாய்மப் பொருள் 101
206. பாலியல் வாழ்க்கை 102
207. பாலுறவு 102
208. பாலுறவு கல்வி 103
209. பாவம் புண்ணியம் 103
210. பாவப்பதிவுகள் 104
211. பாவாடையும் பூவாடையும் 104
212. பிச்சை 104
213. பிசாசு 105
214. பிணக்குகள் 105
215. பிடாரிக்கன் தவம் 105
216. பிரபஞ்சம் 106
217. பிரபஞ்ச இரகசியம் 106
218. பிரவிர்த்தி மார்க்கம் 106
219. பிரணவம் 106
220. பிரம்மஞானம் 106
221. பிரம்மம் 108
222. பிராம்மணீயம் 108
223. பிராமணன் 108
224. பிறப்புரிமை 108
225. பிறவி 108
226. பிறவிக்கடல் 109
227. பிறவித்தொடர் 109
228. பிறவியின் நோக்கம் 110
229. பிழைப்பு 110
230. புகழ் 110
231. புகைபிடித்தல் 111
232. புலனடக்கம் 112
233. புலன் அறிவு 112
234. புலன்கள் 112
235. புலன்கவர்ச்சி 113
236. புலால் 113
237. புராணம் 113
238. புறம்பேசுதல் 113
239. புண்ணியம் 113
240. பூரணம் 113
241. பூஜ்யம் 114
242. பெண் 114
243. பெரியோன் 115
244. பெருமை 116
245. பெற்றோர் 116
246. பேச்சும் எழுத்தும் 116
247. பேதமை 116
248. பேட்டர்ன் - பிரிசிசன் - ரெகுலாரிட்டி 116
249. பேரணு 117
250. பேரறிவு 117
251. பேராற்றல் 117

252. பேராசை 117
253. பேராசைக்காரர்கள் 118
254. பேரின்பம் 118
255. பேரியக்க மண்டலம் 118
256. பேரொழுக்கம் 119
257. பொங்கல் 119
258. பொய் 119
259. பொருள் 119
260. பொன் 120
261. பொருளாதாரம் 120
262. பொருந்தாத் திருமணம் 120
263. பொறாமை 120
264. பொறுமை 121
265. போகம் 121
266. போர் 121
267. போராட்டம் 122
268. யந்திரம் 122
269. யுக்தி 123
270. யுத்தம் 123
271. யோகம் 123
272. யோக சித்தி 124
273. யோக வாழ்க்கை 124
274. யோகான் 124
275. யோகி 125
276. யோசித்தல் - நேசித்தல் - யாசித்தல் 125
277. ராக்கிங் 125
278. லஞ்சம் 126
279. ராசி 126
280. ஞானம் 126
281. ஞானாசிரியர்கள் 128
282. ஞானவாழ்வு 128
283. ஞானயோகம் 129
284. ஞானவழி 129
285. ஞானநெறி - பக்திநெறி 129
286. ஞானி 130
287. மக்கட்பேறு 130
288. மக்கட் பேரின்பம் 130
289. மகிழ்போகம் 130
290. மதம் 131
291. மதகுருக்கள் 131
292. மரணம் 132
293. மரணதண்டனை 132
294. மறை 133
295. மறைபொருள் 133
296. மனம் 133
297. மன அமைதி 135
298. மனத்திண்மை 135
299. மனஇயக்கம் 136
300. மனித ஆற்றல் 136
301. மனித வாழ்வு 136
302. மனோதிடம் 137
303. மந்திரம் 137
304. மயக்கம் 137

305. மழை வாழ்த்து 137
306. மனவளம் 137
307. மனஅலைச்சுழல் 138
308. மனவளக்கலை 138
309. மனநிறைவு 139
310. மனிதன் 139
311. மனித இனம் 141
312. மனிதன் முழுமையாக 141
313. மனிதநேயம் 142
314. மன்னிப்பு 142
315. மனையடி சாஸ்திரம் 142
316. மறைபொருள் 143
317. மணமக்கள் 143
318. மாக்கோல கவிகள் 143
319. மாதவிடாய் 143
320. மாணா மனநிலை 144
321. மாயத்துணைவன் 144
322. மாயை 144
323. மரணம் 145
324. மான உவகை 145
325. மாணவர்கள் 145
326. மாமியார் - மருமகள் 147
327. மிலிட்டரி ஓட்டல் 147
328. முகப்பொலிவு 147
329. முக்தி 148
330. முதல் நூல் 148
331. முதலாளித்துவம் 148
332. முதுமை 148
333. முதுமை வாழ்வு 149
334. முழுமைப்பேறு 149
335. முனிவன் 149
336. முப்பாழ் 150
337. முறையற்ற பால் கவர்ச்சி 150
338. மூடப்பழக்கம் 150
339. மூடநிலை 150
340. மூவாசை 150
341. மூளை வளர்ச்சியற்ற குழந்தைகள் 151
342. மூளை வியாதி 151
343. மூலம் 151
344. மூலகங்கள் 151
345. மௌனம் 152
346. மெய்ப்பொருள் 152
347. மெய் உணர்தல் 153
348. மெய்யறிவு 154
349. மெய்ஞ்ஞானம் 154
350. மொட்டை 154
351. மேகநோய் 154
352. மோதுதல் 155

# வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 [இரண்டாம் பாகம்]

## 1. சிந்தனை

❀ சொல்லால் மட்டும் நம்பாதே சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய்.

❀ இறைவனை வணங்குவதைவிட சிந்திப்பதே மேல்.

❀ சிந்தனையுடன் செயலும், செயலுடன் சிந்தனையும் நிற்கப் பழகுதல் நற்பண்பு.

❀ எந்தக் குறையும் உங்கள் செயலின் பதிவே என்று உணர்ந்து ஏற்றுக்கொண்டு சிந்தனையாலும் அறவழியாலும் சீர்செய்ய முயலுங்கள். உங்கள் குறை தீர்க்க உங்களால் முடியாவிடில் வேறு யாராலும் முடியாது.

❀ தெய்வத்தைப் போற்றி வழிபட்டு வாழ்வோர் சிந்தனையும் மேற்கொண்டால் சிறந்துயர்வார்.

❀ சினம் அச்சம் ஒழியச் சிந்தனையை ஏற்றி சீவன் நிலைகளை நன்குணர வேண்டும்.

❀ இன்பத்தும் துன்பத்தும், இயற்கையும் கற்பனையும், சிந்தித்து அறிபவன், சிறப்பாக வாழ்வான்.

❀ சமுதாயத்தில் உள்ள தனிமனிதனும், குடும்பங்களும் துன்பங் களையும் சிக்கல்களையும் அனுபவிக்கிறார்களே தவிர இவற்றைப் போக்குவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று சிந்தனை செய்ய யாருக்கும் நேரம் இல்லை.

❀ வீட்டிற்குப் போய் மறுபடியும் எல்லாவற்றையும் சிந்தித்து, உங்கள் வாழ்க்கையில் கொண்டுவந்து, அப்புறம் அதை நாட்டிற்குக் கொடுங்கள்.

❀ எல்லாம்வல்ல தெய்வமது எங்கும் உள்ளது. நீக்கமற. சொல்லால் மட்டும் நம்பாதே, சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய்!

## 2. சிந்தனையாளர்கள்

* சிந்தனையாளர்கள் கடமைதான் முதன்மையானது. மற்றோரும் சிந்தனையில் உயரவேண்டுமானால், அதற்குச் சிந்தனை யாளர்கள்தான் வழிகாட்ட வேண்டும்.

## 3. சினம்

- ஆசை தடைப்படக் காரணமான நபர் - பொருள்மீது ஏற்படும் பொருத்தமிலா உணர்ச்சிதான் சினமாகும்.
- அதிகம் நெருக்கமானவர், உரிமையுள்ளவர்களிடம்தான் சினம் அடிக்கடி ஏற்படுகிறது.
- சினத்தால் உடல்நலம் கேடு அடையும். ரத்தம் கெட்டுவிடும், இரத்த அழுத்தம், மாரடைப்பு, சுரம், சீதபேதி, மலச்சிக்கல், கண்நோய், மூளைவளம் அழிவு, முகவிகாரம், நடுக்கம் வருகின்றன.
- சினம் வந்தால் மனவளம் சீவகாந்த விரயம் ஏற்படுகிறது. மனச் சோர்வு ஏற்படுகிறது.
- ஒருநாள் சினம் பல நூற்றாண்டு சிறப்புகளை அழித்துவிடும்.
- சினத்தால் நட்பு நலம் கேடு அடைகிறது. வருத்த அலை சாபமாக மாறி பகைவர்களை அதிகமாக்கிறது.
- சினம் நமது ஆன்மீக உயர்வுக்கு தடையாகிறது. மன அலைச் சுழல் அதிகரிப்பதால் ஏற்படும் உடல் மனக்கேடு பதிவுகளைக் சுட்டிக் கொண்டேயிருப்பதால் பிறவிப் பயன் கிட்டாது. தவமும் இறையுணர்வும் சினத்தை தவிர்த்து வெற்றியளிக்கும்.
- நமது சினம் பிரபஞ்ச காந்தத்திலும் பதிந்து யார் மூலமாவது செயலுக்கு வந்து சமுதாயத்திற்கு கேடு விளைவிக்கிறது.
- ஒரு தடவை சினம் கொண்டால் மீண்டும் மீண்டும் வருகிறது. முன்பு காரணத்தோடு சினம் கொண்டான். இப்போது காரணம் இல்லாமலேயேகூட, சிறிய காரணத்துக்காகக்கூட சிறிய தடையால்கூட, அவனுக்குச் சினம் எழுகிறது.
- ஒருவருக்கு ஏற்படும் சினம் சங்கிலித் தொடராகச் சமுதாயத்தில் பலருக்கும் ஏற்படுகிறது.

- பொறுமையாக இருக்க சங்கல்பம் மேற்கொளல் சுயசீர் திருத்தம், சமநோக்கு, வாழ்த்துதல், பொறுமை, விட்டுக்கொடுத்தல், தியாகம், சகிப்புத்தன்மை, கைக்கொள்ளல், பிறர் அறியாமையை உணர்த்தாமல், பிறர் குறைகளை எண்ணாமல் நிறைகளை மட்டும் எண்ணல், மன்னித்தல், யார்யார் மீது சினம் ஏற்படுகிறது எனப் பட்டியலிட்டு, மிக நெருக்கமானவர்களிடம் ஆரம்பித்து அவர்களை நினைந்து நினைந்து இனிமேல் சினம் கொள்ள மாட்டேன் என சங்கல்பித்து வாழ்க வளமுடன் என ஒவ்வொரு வருக்கும் ஒரு வாரம் வீதம் வாழ்த்தி, சினம் தவிர்த்து வாழ பயிற்சி செய்துவர, நமக்கு அமைதி ஏற்படும். அவர்களுக்கும் நமக்கும் அமைதி அலையினால் நல்லிணக்கம் ஏற்படும்.
- வருமானம் கிடைக்கும்போது சேமித்து வைக்கும் பணம் தேவையானபோது உதவியாவதைப்போல் சாந்தமாக இருக்கும் போது கொள்ளும் உறுதி, கோபம் எழும்போது வாழ்வில் ஒரு புதிய திருப்பம் உண்டாக முன்வந்து நிற்கும்.
- சினம் தவிர்த்தல் பழகுங்கள். குடும்பம் - நண்பர்கள் - தொழில் செய்யுமிடத்திலுள்ளோர் - உற்றார் - உறவினர் இவர்களிட மிருந்து உங்களுக்கு அன்பு - நட்பு இவை கிடைக்கும். இனிமையும் மகிழ்ச்சியும் உண்டாகும்.
- சினம், அச்சம் இரண்டும் ஓர் மனிதன் வாழ்வில் சீர்குலையச் செய்யும் கேடும் உட்தீயாகும்.
- மனிதனைச் சீரழிப்பதோடு குடும்பத்திலுள்ள இனிமையைக் கெடுப்பதும், சமுதாயத்திலே சண்டை சச்சரவுகளை வளர்ப்பதும் இந்தச் சினம்தான். வீட்டில் சினம் கொண்டால் குடும்ப அமைதி கெடும். நாட்டுத் தலைவர்கள் சினம் கொண்டால் போர் மூளும். உலக அமைதி கெடும். சினத்தை ஒழிக்க முடியாது. சினத்தைத் தவிர்க்க வேண்டும்.
- எந்த சூழ்நிலையிலும் சினம் ஒருவனை அணுகவில்லை யானால் அவன் ஞானம் பெற்றுவிட்டான் என்று கொள்ளலாம்.
- சினத்தினால் திருத்தம் வரவே வராது. சினத்தினால் ஏதாவது வரும் என்றால் அங்கு வருத்தம்தான் வரும்.
- பிறர்மீது சினம் கொள்ளும்போது அந்தக் குறைக்கு உங்களிடம் தவறு உள்ளதா என முதலில் பாருங்கள்.

- சினம் எழும்போதே நமது காந்தச் சக்தியானது அதிகமாக வெளியேறுகிறது. உடலும் மனமும் பாதிக்கப்படும்.
- சினம் எழாத மனம் பிரகாசமாக இருக்கும். முகம் பொலிவாகக் காணப்படும்.
- தன்னையும் கெடுத்துப் பிறரையும் கெடுத்து துன்பம் உண்டாக்கிப் பின்னரும் துன்பத்தை நீடிக்கச் செய்யும் உணர்ச்சிவயப்பட்ட பகை உணர்வு சினம் ஆகும்.
- நெருங்கிய நண்பர்களிடத்திலே சுற்றத்தார்களிடத்திலே நம்மோடு அன்புகொண்டு நமது நலனுக்காக வாழ்ந்து கொண்டிருப்பவர் களிடம்தான் அடிக்கடி சினம் வருவதைப் பார்க்கிறோம்.

## 4. சினிமா

- புனிதமான சினிமாக் கலை. இன்று பொருள் பெருக்கு வதற்காக, ஒழுக்கத்தைக் குலைக்கின்ற வியாபாரமாய் மாறி விட்டது. சமுதாயச் சீர்கேட்டை விளைவிக்கின்றது. பார்க்கின்ற வர்களின் உள்ளங்கள் அதிலே ஈடுபடுகின்றன. கவரப்படுகின்றன. நாளுக்கு நாள் அதே குணங்களும், நடத்தையும் அவர்களது இயல்பான குணங்களாக மாறிவிடுகின்றன.
- காதல் காட்சிகளடங்கிய சினிமாப் படங்களை அடுத்தடுத்துப் பார்ப்பது கணவன் - மனைவி உறவில் சலிப்பைத் தரும். காதல் காட்சியில் நடிக்கின்ற நட்சத்திரங்கள் இருவரும் அக்காட்சி களைப் பார்க்கின்ற ரசிகர்களுக்கு - ஆணுக்குப் பெண்ணும் - பெண்ணுக்கு ஆணும் உள்ளத்தில் மானசீகக் காதலர்களாக இடம்பெற்று விடுவார்கள்.
- சினிமாவில் வரும் மானசீகக் காதலியையோ, காதலனையோ பார்க்க வேண்டுமென்று, அவர்களையும் அறியாமல் மனோவேகம் ரசிகர்களை இழுத்துச் செல்லும். பலர் உள்ளங்களைக் கவர்ந்து பணம் ஈட்ட வேண்டுமென்று, பட அதிபர்கள் கூலிக்காக ஆண், பெண் இருவரையும் அமர்த்திக் கொள்ளுகிறார்கள். நாணம் விட்டு நடிக்கச் செய்கிறார்கள். காதலர்களாகப் படக் காட்சியில் நடிக்கின்ற நடிகர்களுடைய கவர்ச்சியான உடை களையும், நாணமற்ற முறைகளையும் அடிக்கடிப் பார்த்துப் பழகிக்கொண்டு குடும்பத்தவர்கள் தங்கள் வாழ்வில் இயல்பாக, உயர்வாக, ஒழுங்காக அமைந்த காதல் இன்பத்தை விருப்பத் தோடு நுகர முடியாது.

- ❖ ஓட்டல்களில் தினமும் பலவிதமான ருசிகளையுடைய சிற்றுண்டி களை உண்டு பழகிவிட்டவர்கட்கு வீட்டுச் சிற்றுண்டி போதிய சுவை தருமா? படக்காட்சி கவர்ச்சியிலும், மானசீகக் காதலர் உருவத்திலும் பலதடவை தன்னை மறந்து ஈடுபட்டு, உள்ளத்தில் வலுவேற்றிக் கொண்டவர்களுக்கு எவ்விதம் இயற்கையான காதல் நிறைவான இன்பத்தை அளிக்க முடியும்?
- ❖ சினிமாத்துறைக்காரர்களோ - பணம் பெருக்குகின்ற உற்சாகத்தில் மயங்கிக் கிடக்கிறார்கள்.
- ❖ பெண்மையின் மதிப்பு, பிறந்த நாட்டின் பெருமை, கடமை, உழைப்பின் பெருமை, கற்பின் மேன்மை, விஞ்ஞானம், தியாகம் இவற்றை விளக்கும் படங்களை எடுக்கப் பட அதிபர்கள் முன்வரவேண்டும்.

## 5. சீதனம்

- ▲ பதினான்கு வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு காயகல்பப் பயிற்சியைக் கொடுப்பது பெற்றோர்களின் கடமை. காயகல்பப் பயிற்சி அவ்வளவு உயர்ந்த வெகுமதி கொடுப்பதுபோல ஆகிவிடும். இளைஞர்களுக்கு இதைக் காலத்தால் கொடுத்து விட்டால், அவர்கள் சினிமா பார்த்தாலும்கூட மனம் கெட்டுப் போகாமல் நிலையாக இருக்கும். பிறகு கொஞ்ச நாட்களில் தானாகவே சினிமாவிற்குப் போவதை விட்டுவிடுவார்கள். ஆக்கத்துறை தெளிவு வந்துவிடும்.

## 6. சீர்கேடு

- ✲ மொழியால், ஜாதியால், தேசத்தால், குறுகி நின்று உலக மக்களில் பெரும்பாலோரை வெறுத்தும், ஒதுக்கியும் விடுவது இக்காலத்திற்கேற்ற சீர்திருத்தமாக அமையாது. அது ஒரு சீர்கேடு என்றுதான் சொல்ல வேண்டும்.

## 7. சீர்திருத்தம்

- ✪ சமுதாய சீர்திருத்தம் வேண்டும் என்றுதான் அனைவரும் நினைக்கிறார்கள். ஆனால் எது சீர்திருத்தம்? அதை எப்படிச் செய்வது? யார் செய்வது? என்பதை அறிந்தவர்கள் குறைவு.

முற்கால அனுபவம், தற்கால சூழ்நிலை மற்றும் எதிர்கால விளைவுகள் இம்மூன்றையும் யூகத்தால் அறிந்து கொள்ளுகின்ற வல்லமைகளைப் பெற்ற அறிஞர்கள்தான் 'எத்தகைய சீர்திருத்தம் மக்களுக்கு வேண்டும்?' என அறிந்து அவர்களுக்கு அதை எடுத்துச் சொல்கிறார்கள். இவர்களே சமுதாயத்தை மேம்படுத்து கின்ற சீர்திருத்தவாதிகள்.

- ✪ சீர்திருத்தவாதிகளைச் சமுதாயம் மதிப்பது இல்லை. அறிஞர் களை அவர்களுடைய ஜீவிய காலத்தில் 'பைத்தியக்காரர்கள்' என்று மக்கள் நினைக்கிறார்கள். அவ்வறிஞர்கள் இறந்துவிட்ட பின்னரோ, அவர்களது உருவப்படத்தையும், அவர்கள் எழுதிய நூல்களையும் வைத்துக்கொண்டு புகழ்ந்து பேசித் தங்கள் காலத்தைத் தள்ளிக்கொண்டிருக்கிறார்கள்.
- ✪ எந்தவொரு அரசியல்வாதியோ, மதத்தலைவரோ, பொருளாதார நிபுணரோ, இந்த உலகத்தைச் சீர்திருத்த முடியாது. அவர்கள் மட்டும் என்ன, ஒரு பாவமும் செய்யாதவர்களா?

## 8. சீவகாந்தம்

- ✤ நம் உடலில் உள்ள சீவகாந்தம் என்பது என்ன? இந்தப் பிரபஞ்சமே காந்த யூனிட். அதில் உங்கள் மனம் ஒரு சிறிய காந்த யூனிட்.
- ✤ ஜீவகாந்த சக்தி அழுத்தம் - ஒளி - ஒலி - சுவை - மணமாக வெளியேறிக் கொண்டேயிருக்கும்.
- ✤ உடலுக்குள் கோடிக்கணக்கான உயிர்த்துகள்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு உயிர்த்துகளிலும் எண்ணற்ற இறைத்துகள்கள் உள்ளன. ஒவ்வொரு உயிர்த் துகளும் தன்னைத் தானே சுற்றிக்கொண்டிருக்கின்றது. அந்தத் தற்சுழற்சியினால் அதில் இருக்கும் இறைத்துகள்களே காந்த அலைகளாக வெளி யாகின்றன. அவ்வாறு வெளிவருகின்ற அலைகளின் தொகுப்பே 'சீவகாந்தம்' எனப்படுகிறது. சீவகாந்தமே உடல், மன இயக்கங் களுக்கு அடிப்படையான ஆற்றலாகும்.
- ✤ இறந்தவனுக்குகூட மூளை உண்டு. ஆனால் சீவகாந்தம் இல்லை.
- ✤ சீவகாந்தத்தில் முதற்பொருள் இருப்பு நிலையான இறைவெளி.
- ✤ நம்முடைய சீவகாந்த அலைவீச்சு, இந்த உலகம் முழுமைக்கும் நன்மையையோ, தீமையையோ விளைவிக்கும்.

- ✤ உடல் உயிரைத் தாங்கவும், உயிர் உடலைத் தாங்கவும் போதிய அளவில் ஜீவகாந்தம் தேவையாகிறது.
- ✤ சீவகாந்தமே உடல் பலமாகவும், உடல் நலமாகவும் அமைகிறது.
- ✤ சீவகாந்தத்தில் தன்மாற்றத்தில் ஒரு சிறு பகுதி செலவாகும் போது, அதற்கு மேல் மிச்சமான மின்சாரத்தை மட்டிலும் கழித்துவிடுகிறது. அடிப்படையான ஆற்றலை அழிப்பதில்லை.
- ✤ சீவகாந்தத்தைத் தெரிந்துகொள்ள ஒரு விஞ்ஞானமும் தேவை யில்லை.
- ✤ உடலில் உள்ள அணுக்கள் ஒவ்வொன்றும் தனது சுழல் விரைவால் கரைந்து கொண்டிருக்கின்ற நிகழ்ச்சியில் தோன்றுகின்ற அலைகளே சீவகாந்தம்.

## 9. சீவஇனம்

- ➭ புலன்கள், மூளை, சீவகாந்தம், கரு மையம் ஆகிய இந்நான்கின் ஒருங்கிணைந்த இயக்கமே சீவஇனம் ஆகும்.

## 10. ஜீவவித்துக் குழம்பு

- ✪ ஜீவவித்துக் குழம்பு ஆணிடம் மட்டும்தான் உள்ளது எனப் பலர் நினைக்கிறார்கள். ஆணிடம் மட்டும் அது வெளிப்படும் நிலை தெளிவாக உள்ளதுதான் அவர்கள் அப்படி நினைப்பதற்குக் காரணம். அதனை விந்து என்பார்கள். பெண்களிடத்திலிருந்தும் அது வெளிப்படக்கூடியதுதான். ஆனால் அவர்களிடத்தில் அது மெதுவாக வெளிப்பட்டு வரும். சிறிது சிறிதாக வரும். கெட்டி யாகவோ அதிகமாகவோ இராது. எனவே இருபாலரிடமும் ஜீவவித்துக் குழம்பு உண்டு. வெளிப்படுவதும் உண்டு.

## 11. சுத்தவெளி

- ✵ நிலையாக இருக்கிறது ஒரு பொருள். அதுவே சுத்தவெளி.
- ✵ சுத்தவெளி என்ற இறைநிலைதான் எல்லாத் தோற்றப் பொருட் களுக்கும் உயிரினங்களுக்கும் மூலம். அது பேராற்றல் உடையது. பேரறிவு உடையது. எங்கும் நிரம்பியுள்ளது. நுண்ணதிர்வு உடையது.

- ✵ சுத்தவெளி என்பது ஒரு மறைபொருள் என்று வார்த்தையால் சொன்னாலும் அது மறைந்துகொண்டு இல்லை. விளக்கமாகத்தான் இருக்கிறது. எங்கும் நாம் உணர முடியும் எங்கும் இருப்பது சுத்தவெளி தவிர வேறு ஒன்றும் இல்லை. கண்ணால் பார்க்க முடியாது. ஏன்? நாம் எந்தப் பொருளைப் பார்த்தாலும் ஒரு குறிப்பிட்ட எல்லைவரைதானே பார்க்கிறோம்? முழுமையான இந்த சுத்தவெளியைப் பார்க்க முடியுமா? எந்தப் பக்கம் பார்த்தாலும் இந்தப் பூமி பாதியை மறைத்துக் கொண்டுதான் இருக்கும்.

- ✵ அந்த இறைநிலை சுத்தவெளி. அது கறுப்பு. பேரிருட்டு. வேதங்களில் அதை கிருஷ்ணம் என்று சொல்வார்கள். இந்த ஒரு பேராற்றலுக்கு இயல்பாக உள்ள அழுத்தம். அழுத்தம் என்ற சக்தியைப் பற்றி உணர்கிறோம். இருந்தாலும் அதை வார்த்தையால் உணர்வது மட்டும் போதாது.

- ✵ கண்ணால் பார்க்க முடியாததால், இறைநிலையை ஒன்றுமில்லை என்று நினைக்கிறோம். ஆனால், இவ்வளவு பெரிய பிரபஞ்சத்தைத் தாங்கிக் கொண்டிருப்பது இறைநிலைதானே? அதனால்தான் அது சுத்தவெளி என்றாலும் அதனை அனைத்து ஆற்றலும் அடங்கிய பேராற்றல், (ALMIGHTY) என்று கூறுகிறோம்.

- ✵ எவ்வளவு பொருட்கள் சுத்தவெளியிலிருந்து தோன்றி உள்ளன! எனினும் அது சிறிதேனும் குறைவுபட்டிருக்குமா?

- ✵ முதல் முதல் ஆதியாக இருந்து இருப்பு நிலையான சுத்த வெளியே அதனிடத்து வேகமும் (விரைவும்) விவேகமும் (அறிவும்) உள்ளடக்கமாக இருந்தன.

- ✵ சுத்தவெளியானது எல்லையற்ற ஆற்றல் உள்ளதாயும், பூரணப் பொருளாகவும் விளங்குகிறது. அதனால் அது ஆதிநிலை என்றும் தெய்வம் என்றும் வழங்கப்படுகிறது.

## 12. சுதந்திரம்

- ❀ அனுபோகப் பொருட்கள் அதிகமாக உடல்நலம் கெடும். சொத்துகளின் எண்ணிக்கை அதிகமாக மனஅமைதி கெடும். பாதுகாக்கப்பட வேண்டிய குடும்ப உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிக்க சுதந்திரம் கெடும்.

❀ தேவைகள் யாவும் காலகாலத்தில் கிடைக்கப் பெற்று, தடையில்லாமல் ஒழுக்கமாக அனுபவிப்பதே மனித இனத்தின் சுதந்திரம் ஆகும்.

❀ பொறுப்பற்ற அரசியல் அதிகாரிகளால் நமக்கு என்ன தீங்கு நேரிடுமோ என நல்லவரும் அஞ்சிக்கொண்டே வாழ்வை நடத்தி வருவது சுதந்திரம் என மதிக்கப்படுமா?

## 13. சுருதி யுக்தி அனுபவம்

* ஆதிகாலத்திலிருந்து தொடர்ந்து வரக்கூடிய அனுபவத்தொடர் தான் சுருதி. தேவையில்லை என்றால் விட்டுவிடுவது அல்லது மாற்றிக் கொள்வது என்பது யுக்தி ஆகும். ஒத்துவராதவற்றை தள்ளிவிட்டு ஒத்துவருபவற்றை எல்லாம் எடுத்துக்கொள்வது என்பதுதான் அனுபவம்.

## 14. சூக்கும சரீரம்

➢ எண்ணிறந்த கோடானு கோடித் துகள்கள் சேர்ந்து ஒருங்கே ஒரு தொடராக, கோர்வையாக இயங்கிக் கொண்டிருப்பதே சூக்குமச் சரீரம் என்கிறோம்.

➢ நுண்கிருமி முதற்கொண்டு, மனிதன் வரையிலும், காந்தச் சுழற்சியானது, செல்களுக்கிடையே செயல்பட்டுக் கொண்டே இருக்கிறது. இதைத்தான் சூக்கும சரீரம் என்று கூறுகிறோம்.

➢ உடலின் நுண்விண்துகள்தான் உயிர்ச்சக்தியாக இருக்கிறது. அதை சூக்கும சரீரம் என்றும் சொல்கிறோம். உயிர் என்று சொல்கிறோம்.

## 15. சூரியன்

❖ சூரியன் தன் மையத்தை ஒரு முறை சுற்றி மீண்டும் தன்னிடத்திற்கு வர எடுத்துக்கொள்ளும் காலம் பூமி சூரியனை ஒரு முறை சுற்றிவர எடுத்துக்கொள்ளும் காலம் போன்று 60 மடங்கு, அதாவது 60 ஆண்டுகள் ஆகிறது. அதையே தமிழ் ஆண்டுகள் 60 ஆக வைத்துள்ளார்கள்.

❖ சூரியனை கால்பந்து என்றால், பூமி துவரம்பருப்பு அளவு.

❖ சூரியனிலிருந்து எழும் விரிவலை அழுத்தம் என்ற முதல் நிலையில் சூரியனைச் சுற்றி ஒரு காந்த அலைக்களமாக விரிந்த தொலை வுடையதாக இயங்கிக்கொண்டு அந்தக் களத்தில் உள்ள மற்ற கோள்களையும் மிதக்கவிட்டுச் சுழன்றோடச் செய்கிறது.

❖ சூரியன் விண்துகளால் ஆக்கப்பட்ட ஒரு பெரிய கோள வடிவ முள்ள ஒரு கோள். அதில் அடங்கியுள்ள விண்துகள்கள் அனைத்தும் சுழன்று கொண்டேயிருப்பதால் அவை சேர்ந்த மொத்த உருவமான சூரியனும் சுழன்று கொண்டே இருக்கிறது.

❖ சூரியனுடைய அலை பூமியில் மோதுகின்றபோது, சூரியனுடைய கணமான வெளிச்சமும், சூடும் பூமியில்தான் உண்டாகின்றன.

❖ சூரியனிலிருந்து வெளிச்சம் வருகிறது அல்லது சூடு வருகிறது என்று நினைக்கிறோமே, அது ஒரு மயக்கந்தான். சூரியனிலிருந்து அலைதான் வருகிறது.

❖ சூரியனில் உள்ள விண்துகள் ஒவ்வொன்றும் தனது சுழற்சியால் இருப்பு நிலையில் மோதி அதனால் ஏற்படும் உராய்வு இடை விடாது அலைகளை ஏற்படுத்திக்கொண்டே இருக்கிறது. இந்த அலைகள் சுற்றியுள்ள இறைநிலையால் அழுத்தம் பெறுவதால் அவை கோள வடிவம் பெற்று தற்சுழற்சி பெறுகிறது.

## 16. செத்தவர்கள்

▲ செத்தவர்கள் ஆவிதான் பிறப்பதென்றால் சீவஇனங்கள் எண்ணில் அதிகமாமோ?

## 17. செயல்

⁕ தேவை, பழக்கம், அறிவு, சந்தர்ப்பம் இவையொக்க செயல் எண்ணம் பேச்சு இவை செயலாகும். இது இயல்பு.

⁕ நெறிதவறிச் செய்யும் செயல் குறிதவறிச் சென்று வெடிக்கும் துப்பாக்கியின் செயலை ஒத்தது.

⁕ செயலிலே விளைவாக தெய்வ ஒழுங்கமைப்பிருக்கப் பயனென்ன தவறிழைத்துப் பரமனைப் பின்வேண்டுவதால்.

⁕ முழுமைப்பேறு அடைவதைப்பற்றி எண்ணுவதே நமது செயலாகும்.

- இறைநிலையின் பேராற்றல், பேரறிவு இவற்றின் விளைவுகளை இயற்கை நியதிகள் என்கிறோம். அதே பேராற்றலும், பேரறிவும் மனித உலகில் உடல் மனமாக மாறும்போது உருவாகும் வினைகளும், ஏற்படும் எண்ணங்களும் செயல்கள் எனப்படுகின்றன.
- எண்ணத்தைப் போலவே செயலும் உடல் இரசாயன மாற்றத்தில் பெரும்பங்கு வகிக்கிறது.
- உங்கள் நன்மைக்காக உங்கள் செயலை ஒழுங்குபடுத்திக் கொள்ள முடியவில்லையானால், நீங்கள் பிறர் திருத்தமாக வாழவேண்டும் என எப்படி எதிர்பார்க்க முடியும்? பிறர் மூலம் எந்த நன்மைகளை அடைய முடியும்?
- துன்பமே அளிக்கும் பல செயல்கள் பழக்கத்தினாலும் சிந்தனையைப் பயன்படுத்தாத காரணத்தினாலும் தொடர்ந்து வருகின்றன.
- இன்பமும், அமைதியும் வேண்டுமானால் துன்பம் வரத்தக்க செயல்களை நீக்கிவிட வேண்டாமோ?
- தெய்வீக சட்டத்தின் கீழ் செயலின்றி விளைவில்லை. விளை வில்லாத செயல் இல்லை. இது இயற்கை நியதி.
- செய்யும் செயல்களை திருத்தமாகச் செய்யாவிட்டால் செய்த கோளாறு களுக்கு ஏற்ப விளைவுகளும் தாறுமாறாகத்தான் இருக்கும்.

## 18. செயலும் கருத்தும்

- ஒரு இடத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் நலமெனக் கொண்ட செயலும் கருத்தும் எப்போதும் எக்காலத்திற்கும் ஏற்றதாக அமையாது.

## 19. செயலே விளைவு

- ஒவ்வொரு செயலுக்கும் ஏற்ற விளைவு அச்செயலிலே தொக்கி நிற்கிறது என்பது இயற்கை நியதி.
- விளைவு இலா வினையில்லை வினையினூடே விளைவு பல தொக்கி நிற்கும் இயற்கை நீதி.
- விளைவுக்கும் வினைக்குமிடை கால நீளம் விளைவு தரம் இவை வினையின் தன்மை ஒக்கும்.

- ✤ எந்த ஒரு இயக்கமும் தனியாகத் தூண்டப்பட்டு நடைபெறு வதில்லை. பேரியக்க மண்டலம் என்ற கோவையில் அமைந்துள்ள இயற்கை ஒழுங்மைப்பே செயல்விளைவுத் தத்துவம்.

- ✤ ஆண்டவனைக் கேட்டு எதுவும் வாங்கிவிட முடியாது. அவன் ஏமாந்தவன் அல்லன்! நீங்கள் என்ன செய்தீர்களோ அந்தச் செயலின் விளைவாக, நல்லதையோ கெட்டதையோ உங்கள் நோக்கத்திற்குத் தக்கவாறு, அவன் விளைவைத் தருவான்.

- ✤ இயற்கைத் தத்துவத்தைச் செயல்விளைவுத் தத்துவம் என்றும் சொல்லலாம். தெய்வச் செயல் என்றும் கொள்ளலாம். வினை, வீதி, வினைப்பயன் என்றும் மதிக்கலாம்.

- ✤ ஒவ்வொரு செயலுக்கும் விளைவு உண்டு. அந்த விளைவு காலத்தே வந்து சேரும். தெய்வமே செயலுக்கு விளைவாக வருகிறது. ‘செயலிலே விளைவாகத் தெய்வ ஒழுங்கமைப்பு’ இருக்கிறது.

- ✤ செயலின் விளைவே தெய்வ ஒழுங்கு.

- ✤ எச்செயலுக்கும் இடம், காலம், தொடர்பு கொள்ளும் பொருள் அல்லது நபர், நோக்கம், திறமை இந்த ஐந்துக்கும் ஏற்ப விளைவு உண்டு.

- ✤ இயக்கம் இருந்தால் பரிமாணம் வரும். இயக்கமின்றேல் விரைவு மில்லை - பரமனுமில்லை. காலமுமில்லை. தூரமுமில்லை.

- ✤ செயலுக்குரிய விளைவு வரும்; செயல் விளைவு தத்துவம் தான் தெய்வ நீதி.

- ✤ செய்யும் செயல்களைத் திருத்தமாக செய்யாவிட்டல் செய்த கோளாறு களுக்கு ஏற்ப விளைவுகளும் தாறுமாறாகத்தான் இருக்கும்.

- ✤ கல்லார் கற்றார் செயல் விளைவாய்க் காணும் இன்ப துன்பமவன்.

## 20. செல்வம்

- ☞ தன் குழந்தைகளுக்கு உயர்கல்வி, நல்ஒழுக்கம், பக்தி, பிறரை மதிப்பதை கற்றுக்கொடுத்து ஆளாக்குவதே உண்மையான செல்வமாகும்.

## 21. செல்வந்தர்

- உங்களிடம் உள்ளதை நீங்கள் அடுத்தவருக்கு கொடுப்பதற்குத் தயாராக இருக்கும்பொழுது, பெரிய செல்வந்தராக, அருட் செல்வந்தராக இருக்கின்றீர்கள்.

## 22. சொற்கள்

- தூய்மையாய் விளைவு தரும் சொற்கள் அனைத்துமே வாய்மையாம். அவை வாழ்வின் வளம் காத்து சிறப்பளிக்கும்.

## 23. சேரமுடியாதது

- பிரபஞ்சத்தில் இரண்டு அணுக்கள் ஒன்று சேரவே முடியாது. காரணம் என்னவென்றால் அணு என்பது தற்சுழல் உடையது. தற்சுழல் உடைய இரண்டு அணுக்கள் ஒன்றோடு ஒன்று இணையவே முடியாது. எப்போது அவற்றின் வேகம் குறைந்து சுழற்சி இல்லாமலேயே போகிறதோ, அப்போது இறைவெளியாக மாறிவிடுகிறது. கடல் அலையாக மாறுவதுபோல, அலை என்பது எதுவரைக்கும்? இயங்கும் வரைக்கும் அலை. இயக்கம் நின்றுவிட்டால் கடல். அதேபோல விண்துகளின் சுழல் இயக்கம் நின்றுவிட்டால் இறைநிலையாகிவிடும். இறைநிலையோடு ஒன்றாகிவிடும். அதன் பிறகு அணுவிற்கென்ற தனித் தன்மை இருக்காது.

## 24. சேவை

- சமுதாயத்திற்கு செய்கின்ற சேவைக்குப் பொருள் மதிப்பாக, விலையாக எதையும் எதிர்பார்க்கக் கூடாது. ஏனெனில் நாம் முன்னமே பட்ட கடனைத்தான் நமது இன்றைய சேவையின் மூலம் திருப்பிக் கொடுக்கிறோம்.

## 25. சோதிடம்

- ரெடிமேட் சர்ட் தைத்து விற்கின்றார்களே அதே ஊகத்தினால் சோதிடத்தில் வல்லவர்கள் எல்லாம் உட்கார்ந்து இன்ன இடத்தில் இன்ன லக்கினம் - இந்த லக்கினத்தால் இன்ன ராசி இன்னதாக

இருக்குமேயானால், பிறகு இன்னின்ன கிரகங்கள் இப்படியிப்படி அமைந்து இருந்தால் இவ்வாறு இவர் இருப்பார் என்று கணிக்கின்றார்கள். அப்படிக் கணித்து எதிர்காலப் பலன் என்று போட்டு விடுவார்கள். பிறகு ஒரு கிரகம் மாறி இருந்தால் என்ன இருக்கும். இரண்டு கிரகம் மாறி இருந்தால் என்ன இருக்கும் என்று பார்க்கின்றார்கள். அப்படியே போட்டுப் போட்டு ரெடி ரெக்கனர் முறையிலே ஜாதகங்களைக் கணிக்கின்றார்கள்.

➢ நாம் ஏற்கனவே செய்ததன் விளைவாக இன்றைய நிலை என்கிற பொழுது, இன்றுமுதல் நாம் செய்வதன் விளைவாக எதிர்காலம் அமையும். நாமே உருவாக்கக்கூடிய ஒன்றுக்கு கைரேகைக் காரனையோ கிளி ஜோசியனையோ நம்பிப் பணத்தையும் பொழுதையும் விரயமாக்குவானேன்.

➢ ஜோதிட சாஸ்திரம் ஓர் உண்மையான சாஸ்திரம்தான். ஜோதிடம் சொல்பவர்களில்தான், ஜோதிட சாஸ்திர உண்மைகளை உணர்ந்ததில் கொஞ்சம் கொஞ்சம் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது.

➢ சில விஷயங்களை நீங்கள் நாடிசோதிடரிடம் கொடுத்துவிட்டு வந்தீர்களென்றால், ‘நான் பார்த்து வைக்கிறேன்; ஓலை அகப்படவில்லை’ என்று சொல்வார்கள். அன்று மாலை ஓலை தயார் செய்து நெல் ஆவியில் போட்டு வேகவைத்து, அதில் சாம்பல் பூசி மறுநாள் எடுத்துப் பார்த்தால் பழைய ஓலை மாதிரி இருக்கும்! உங்களிடம் படித்துக் காண்பித்து விடுவார்கள். உங்களிடம் அன்று விசாரித்தது எல்லாம் இருக்கும் இதுதான் நாடிசோதிடம்!

## 26. சோஷியலிசம்

❖ சொசைட்டியின் நலனையே முன்வைத்து ஒவ்வொரு மனிதனும் வாழும் நெறிதான் சோஷியலிசம்.

## 27. தட்டுங்கள்

❖ தங்கத்தை மெல்லிய கம்பியாக்கி, சில நகைகளைச் செய்ய வேண்டியதாக இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். தங்கக் கட்டியை எடுத்து அப்படியே ஒரு தடவையில் கம்பியாக்கிவிட முடியாது. அதைக் காய்ச்சிக் காய்ச்சி, கொஞ்சம் உருண்டையாக்கி நமக்கு வேண்டிய அளவுக்குக் கொண்டு வருகிறோம். அதுபோல

இதுவரையில் புலன்கள் மூலமாகப் பெற்ற அறிவு அனுபவம் இவற்றில் மாத்திரம் நிறுத்தி வைத்த அறிவை, அது எவ்வளவு பெருமையுடைத்தானாலும் உடனடியாக பரம்பொருள் வரையில் சேர்த்து வைத்துப் பேசுவதற்கோ, ஆராய்வதற்கோ முடியாது.

❖ எப்படி கம்பியைச் சிறுகச் சிறுகத் தட்டித்தட்டி நீட்டுவது போல, நாமும் பல தடவை சிறுகச் சிறுக அந்தந்த எல்லைகளில் நின்று நின்று அதற்கு மேலாக ஆராய்ச்சிக்குப் போக இறை நிலையின் தன்மை எத்தகையதோ அத்தன்மையாகவே அறிவு நன்மைக்கு வந்துவிடும். பெரிய அளவில் அகன்று நிற்கக்கூடிய அளவுக்குத் தகைமை உடையதாக, பெருமை உடையதாக, இறைநிலையின் தன்மைகளை அடைவோம். இறைநிலை யாகவே மாறிவிடுவோம்.

## 28. தன்முனைப்பு

▲ தன்முனைப்புக்கு இடமில்லாத இடம் ஆன்மீகத்துறையும், பொதுநலத் தொண்டுமே ஆகும்.

▲ இறைநிலையின் ஆற்றலாலேயே உருவாகி - உலக இயல்போடு ஒட்டி வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மனிதன், புலன் உணர்வு கவர்ச்சியாலும், அதனால் ஏற்படும் மயக்கத்தாலும் இறை நிலையை அடியோடு மறந்து விடுகின்றான். தனக்குள் அடங்கி யுள்ள பெருமைகள் அனைத்தும் தானே உருவாக்கிக் கொண்டதாக கற்பனை செய்து கொள்கின்றான். அப்போது தன்முனைப்பு உண்டாகிறது.

▲ தன்முனைப்பு நீங்கி ஒரு குரு அடைந்து தவமாற்றும் சாதனையால் உயரும்போது தன்முனைப்பாம் அருட்தொண்டால் பயன் காண் போர்கள் நாதழுக்கப் பெருமையோடு போற்றுவார்கள்.

▲ தன்முனைப்பு என்ற மயக்கம் பொதுவாக எல்லோரிடமும் உண்டு. நான்தான் நீதியோடு நடக்கிறேன். என் விருப்பப் படித்தான் அனைவரும் நடக்க வேண்டும், என்ற மனநிலையை உருவாக்குவது தன்முனைப்புதான். இது இறையுணர்வால் தான் தெளிவடையும்.

▲ தன்முனைப்பு மீறமீற, பொருள், புலனின்பம், புகழ், அதிகாரம் என்னும் நான்கில் சிக்கிக்கொண்டு, ‘இன்னும் வேண்டும். இன்னும் வேண்டும்’ என்னும் பேராசை வெள்ளத்திலிருந்து விடுபட முடியாமல் மனம் தவிக்கின்றது.

▲ தன்முனைப்பு அதிகரிக்கின்றபோது, அதிலிருந்து பேராசை, சினம், கடும்பற்று மற்றும் வஞ்சம் என்கின்ற ஆறு குணங்கள் உண்டாகும்.

▲ அறிவின் குறுகிய நிலையால் தன்முனைப்பும், தன்முனைப்பால் பழிச் செயல்களும் பெருகுகின்றபோது, மனிதனின் அறிவு சீர்குலைகிறது.

▲ இறைவனே நான் ஆக இருக்கிறான் என்ற உண்மையைத் தெளிவாக உணர்ந்த நிலையிலே தன்முனைப்பு எழவே எழாது.

## 29. தப்ப முடியாது

* பரிணாமம் என்பது எதுவுமே ஒன்று ஒன்றாக மாறிமாறி வளர்ச்சி பெற்றுக்கொண்டே போகும். அதுதான் பரிணாமம். இயல்பூக்கம் என்பது அப்படி வளர்ச்சி பெற்றுக்கொண்டே வரும்போது அந்தந்த நிலையில் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு செயலும் விருப்பமும் தானாகவே எழுச்சி பெறும். அதற்குப் பெயர்தான் இயல்பூக்கம். எந்தச் செயல் செய்தாலும் அதற்குத் தக்க விளைவு உண்டு. இது இறைநீதி. இதுவே கூர்தலறம், பரிணாமம், இயல்பூக்கம் என்ற மூன்றிலிருந்தும் யாரும் தப்பவே முடியாது. இம்மூன்றுக்கும் வெளியில் போகவும் முடியாது. உட்பட்டேதான் இருக்கிறோம்.

## 30. தடுமாற்றம் தடமாற்றம்

✪ மனித மனம் தன் மூலத்தை உணர்ந்து முழுமை பெறாதபோது, அறியாமையாலும், உணர்ச்சிவயப்பட்ட எண்ணங்களாலும், தன்னிலை மறந்து, புலன்வழி சென்று, அளவுமுறை மீறி, துன்பத்தில் சிக்கிக் கொள்கிறது. இது தடுமாற்றம்.

✪ தடுமாற்றம் வந்த உடனே, ஏற்கனவே செய்திருந்த உறுதி, சங்கற்பம், தன் வலிமையை சிறிது சிறிதாக இழந்து விடுகிறது. செல்ல இருந்த வழியை விட்டு கேட்போன் வழியில் தடத்தை மாற்றி, அறிவு புலன் வழியே, மனம்போன போக்கிலே போகிறது. இது தடமாற்றம்.

✪ தடுமாற்றம், தடமாற்றம் இந்த இரண்டும் தவிர்த்த வாழ்வுதான் இயற்கையோடு ஒட்டிய வாழ்வாகும். இது அமைவதற்கும் சிறப்புற்று விளங்குவதற்கும் ஏதோ ஒரு முறையைக் கையாள வேண்டுமல்லவா?

## 31. தத்துவம்

- விட வேண்டியதை விட்டுவிட்டால் பெற வேண்டியது அனைத்தும் அங்கேயே இருப்பது தெரியவரும்.
- தத்துவம் மிகவும் எளிமையானது. அதைத் தெரியாதவர்கள் கையாளும்போதுதான் சிக்கலாகி விடுகிறது. உதாரணமாக நூற்கண்டில் முனையிலிருந்து அடிவரைக்கும் ஒரே நூல்தான் உள்ளது. அதை நன்றாகச் சுற்றி வைத்திருக்கிறார்கள். சிக்கல் இல்லை. தையல் தெரிந்தவர்கள் அதை உபயோகிக்கிறபோது சரியான விதத்தில் பயன்படுத்தி விட்டு மீண்டும் வைத்துவிடு வார்கள். ஆனால் இரண்டு வயது குழந்தையிடம் அந்த நூல்கண்டு அகப்பட்டது என்றால், அதை எடுக்கும் மொத்த நூலையும் கலைத்துப்போட்டு விடும். சிக்கலாக்கி விடும். குழந்தைக்கும் உபயோகப்படுத்தத் தெரியாது. மற்றவர்களும் உபயோகப்படுத்த முடியாது. அதுபோல, இன்று உலகத்தில் சிக்கல்கள் இருப்பதற்குக் காரணம் முறையாகக் கையாளாமைதான்.
- பிறரை அதிகாரம் செய்யாதே. பிறரை பழித்துச் சொல்லாதே. பிறரிடமிருந்து எதிர்பார்க்காதே.
- தனது குறை ஆழ்ந்து உணர்ந்து திருத்தம் பெற்றால் தருக்கொழியும் பிறரிடமும் நட்பு ஓங்கும்.
- ஆறாவது அறிவு போதிய வளர்ச்சி பெற்றால்தான் மனிதனுக்குப் பிறரை மதித்து ஒத்தும் உதவியும் வாழும் பண்பு அமையும்.
- பிறர் பொருள், பிறர் மனை ஆசை கொள்ளார் பிறவியிலேயே தூய்மை அமையப் பெற்றோர் ஆவர்.
- தேவையில்லாததையும், துன்பம் தரக்கூடியதையும் விட்டு விடுவதற்கு நான்கைந்து மாதங்கள் ஆகும். மனஉறுதி வேண்டும்.
- பிறர் பொருள், பிறர் மனை மதித்து வாழும் பேரொழுக்கம் அன்பு அருள் பெருகச் செய்யும்.
- பிறப்பும் இறப்பும் தெய்வீக இருட்டறையில் நடக்கும் திருவிளையாடல்.
- வந்ததுதான் போகுமேயல்லாது வருமுன்னே இருந்த ஒன்று போவதுண்டோ?
- இயற்கை நியதிகளில் சில கருத்துக்கு எட்டும். ஆனால் கணக்குக்கு எட்டாது. கணக்குக்கு எட்டி அதன் காரணம் கருத்துக்கு

எட்டாதபோது அதை விஞ்ஞானம் என்று கூறுகின்றனர். கருத்துக்கு எட்டி கணக்குக்கு எட்டாதபோது அது தத்துவம் அல்லது மெய்ஞ்ஞானம் என்று போதிக்கப்படுகிறது. பேரியக்க மண்டல நிகழ்ச்சிகள் அனைத்துமே கணக்குக்கு எட்ட முடியாது. ஆனால் நுண்மையாகக் கூர்ந்து, தொடர்ந்து, ஆழ்ந்து கவனித்தால், அறிவும் அறிவுக்கு இயற்கை இரகசியமும் புரியாதது அல்ல. ஏனென்றால் இயற்கையே அறிவாகவும் இருப்பதனால்தான்.

✤ இரண்டு அணுக்களின் சுழற்சியினால் தள்ளும் வேகம் எவ்வளவு இருக்கிறதோ, அதற்கு மேலே அவை விலகிப் போக முடியாது.

✤ என்னென்ன பெற வேண்டும் என்று தேடுவதை விட்டு எதையெதை விடவேண்டும் என்று சிந்தியுங்கள்.

✤ அருவமே உருவமாய், ஆதியே அறிவாய் அறிவே குணங்களாய் அனுபவமே ஒழுக்கமாய், இருளே வெளிச்சமாய், இன்பமே துன்பமாய் மௌனமே சப்தமாய், மாறியது அறிவீர்.

✤ அறிவை விழிப்பு நிலைக்கும், சிந்தனைக்கும் கொண்டு வாருங்கள். தெளிவோடும், துணிவோடும் அறநெறி நிற்கப் பழகிக் கொள்ளுங்கள்.

✤ பரம்பொருளைத் தவிர்த்து, அதற்கு அப்பாற்பட்டதாக வேறு எதையுமே நாம் தோற்றமாகக் காண்பது இல்லை. ஆனால் காட்சிக்குத் தக்கவாறு ஒவ்வொன்றையும் தூரம், காலம், பருமன், வேகம் என்ற நான்கு அலகுகளைக் கொண்டு ஒன்றோடு ஒன்றை ஒப்பிட்டுப் பார்க்கத் தெரிந்து கொள்கிறோம்.

✤ உருவங்களை எல்லாம் கடந்து, அந்தக் கடைசியில் போனால், உருவமற்ற ஒரு நிலையை மனதால் ஊகிக்க முடியும்.

✤ அழுத்தம் என்ற தன்மாற்றத்தை விஞ்ஞானத்தில் கொள்ளும், தள்ளும் காந்த ஆற்றலாக மதிக்கிறோம். மற்ற ஒலி, ஒளி அலைகளைப் மின்னாற்றலாகவும், சுவை, மணம் என்ற அலைகளை இரசாயனம் எனவும் மதிக்கிறோம்.

✤ நல்ல நோக்கத்தோடு, காலம், இடம், தொடர்பு கொள்ளும் பொருள் அறிந்து செயலை அளவோடு, முறையோடு செய்தால் கிடைப்ப தெல்லாம் இன்பமும் லாபமும்தான். அதுதான் இறைவன் தரக்கூடிய வரம். நோக்கம் தெளிவின்றியோ, தீயதாகவோ இருந்து, காலம், இடம், தொடர்பு கொள்ளும் பொருளும் சரியில்லையானால், துன்பம்தான் வரும்.

- ✤ விதை போட்டால் மரம் முளைக்கும்; இது விதி. பலா விதை போட்டால் பலா மரம் முளைக்கும்; இது வினை. பலாக்கனி விளைவு. விளைவை வேண்டி வினையைத் தேர்ந்தெடுக்கிறோம். அதுவும் ஒரு விதியை அனுசரித்ததே தேர்ந்தெடுக்கிறோம்.
- ✤ பிறருடைய பொருள், புகழ், அதிகாரம், புலன், இன்பம் இவற்றை எந்த அளவிலும், எந்த சூழ்நிலையிலும் நான் பறிக்க மாட்டேன் என்ற உறுதியை எடுத்துக் கொள்ள வேண்டும்.
- ✤ நாம் தேடுகின்ற பொருள் எது? அது நமக்குத் தேவைதானா? என்ற கேள்விகளுக்குப் பதில் தெரியாமலே நாம் எதைஎதையோ தேடிக்கொண்டு அல்லலுற்றுத் துன்பத்தில் உழல்கிறோம்.
- ✤ வெறும் வேதாந்தம் பேசிப் பேசிக் காலத்தைக் கடத்துவதிலே பயனில்லை.
- ✤ இன்று வரையில் செய்த செயல்களெல்லாம் ஜீவகாந்த அலையில் அவ்வப்போது அந்தந்த வடிவம், குணம் எடுத்துச் சுருங்கி அதுதான் நம்முடைய தன்மையாக இருக்கின்றது.
- ✤ கத்தியோடு எப்படித் தொடர்பு கொள்வது என்று தெரியாமல், அலட்சியமாக நடந்துகொண்டால் அதே கத்தி அறுத்துவிடும்.
- ✤ எங்கும் இருப்பவன் - எனக்குள்ளும் இருக்கத்தானே வேண்டும். அப்படியானால், எனக்குள் அவன் இருப்பதை நான் தெரிந்து கொள்ளமுடியவில்லையானால் - வேறெங்கு போய்த் தேட முடியும்.
- ✤ பரநிலை, விண், விண்சுழற்றி விரைவு, அதன் விரிவலை காந்தம், காந்த ஆற்றலானது அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் என்பனவாகப் பெறும் மாற்றங்கள். இதை உணரும்போது புலன்களுக்கும், உடலுக்கும் ஏற்படும் இன்ப, துன்ப, அமைதி, பேரின்ப உணர்வுகள், வான்காந்த ஆற்றல் கொண்டுள்ள தொடர்பு - ஐயறிவு - ஆறாம் அறிவு இவற்றை மிண்டும் மீண்டும் நினைந்து நினைந்து - தெளிந்து - வாழ்வில் நிகழும் அனுபவங்களை ஒத்துப் பார்த்து விளங்கிய விளக்கத்தில் இறைநிலையே அறிவாக இருக்கிறது. அதுவே நான் என்ற அறிவின் முழுமைப் பேற்றில் திளைத்து வாழ்வோம்.
- ✤ உடல் ஜீரணிக்கும் அளவுக்குமேல் உணவையும் - உடல் சுமப்பதுக்குமேல் உடையையும் - உடலின் நீள அகலத்துக்குமேல் பூமியையும் யாரும் அனுபோகிப்பது கிடையாது. அதற்கு மேல் எவ்வளவு கிடைத்தாலும் எல்லோரும் போகும்போது விட்டு

விட்டுத்தான் போகிறார்கள். அந்த அளவில் எல்லோரும் ஞானிகளாகத்தான், அது தெரியாமலே வாழ்கிறார்கள். இதை உணர்ந்துகொண்டு அனுபோகத்திலே அளவுமுறை காத்து இருப்பதை இல்லாதவர்களுக்கு ஈந்து மகிழ்வதே உண்மையை உணர்ந்ததன் அடையாளமாகும்.

✤ அமைதி நிலையிலிருந்து பெற்ற தெளிவின் வாயிலாக திருத்திக் கொள்ள வேண்டுமென்று நினைக்கின்றபோதே திருத்திக் கொள்ள வேண்டும். உணர்ச்சிவயப்பட்ட நிலையிலே திருத்திக் கொள்ள முடியுமா என்றால் முடியாது. திருந்த வேண்டும் என்று தோன்றும். ஆனால் திருத்தத்திற்கு மனம் வராது.

✤ போட்ட இடத்திலேயே பொருளைத் தேடி எடுக்க வேண்டும் என்ற பொது அறிவைக்கூட உபயோகிக்காமல், உலக வாழ்வில், சமூகத்தின் மத்தியிலே, கூட்டுறவிலே அமைந்திருக்கும் எல்லா வாழ்க்கை அனுபவ ஆராய்ச்சி தெளிவுக்கான வசதிகளையும் விட்டு, காட்டிற்குப் போய் காய், கனி, கிழங்குகள் இவற்றை உண்டு காலம் கழிப்பதால் யாது பயன்?

✤ மனித இன முன்னேற்றத்தின் விளைவாக ஞானம் என்பது அறிவின் தெளிவு என்றும் தன்னிலை அறிதல் என்றும் விளங்கிக் கொள்வோம். அதையடையச் சரியான முறை அறிவின் ஓர்மை அப்பியாசமும் தத்துவ விளக்கமும்தான் என்பதையும் விளங்கிக் கொள்வோம்.

✤ உடல் தத்துவத்தை உணர்ந்து, பழக்கத்தின் வழியே செயலாற்று கின்ற முறையிலிருந்தும் விடுபட்டு வினைத்தூய்மை பெற வேண்டும்.

✤ ஏகத்தத்துவத்தின் உண்மையை அப்படியே விளக்கினால் சாதாரண மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியாதபடி அக்கால மக்களின் அறிவுநிலை இருந்தது.

✤ பின்னர் தோன்றிய அறிஞர்கள் மக்களின் அவ்வப்போதைய அறிவின் வளர்ச்சி நிலைகளுக்கேற்ப சன்மார்க்க நெறிகளைப் போதித்தார்கள்.

✤ பிதுரார்ஜிதமும் இருக்கிறது. சம்பாதித்தும் இருக்கிறது. அதில் நீங்கள் வெளிப்படுத்துவது உங்களுடைய எண்ணம் - செயல் இந்த இரண்டால்தான்.

✤ பழுத்த நிலை வரும் வரையில் நீ - நான் என்றேன் பதமடைந்தேன், ஒன்றானோம்! பரமானந்தம்!

✤ ஒரு காலத்தில், ஒரு இடத்தில், ஒரு சந்தர்ப்பத்தில் அவசியமாகத் தோன்றிய கருத்தோ, செயலோ எக்காலத்துக்கும் எந்த இடத்திற்கும் எல்லா மக்களுக்கும் பொருத்தமாக அமையுமெனச் சொல்ல முடியாது.

## 32. தத்துவ ஞானம்

- மறைபொருட்களை உணருகின்ற ஆற்றல்களைத் தத்துவஞானம் என்று சொல்கிறோம்.

## 33. தற்சோதனை

✪ மனதை விழிப்பு நிலையில், அயரா விழிப்பு நிலையில் வைத்திருப்பதே தவம். விளைவறிந்து நலமுணர்ந்து, நல நாட்டத்தோடு எண்ணம் - சொல் - செயல்களைப் பயன்படுத்தும் கலையே தற்சோதனை.

✪ மனம் தன்னை தூய்மை செய்துகொள்ள எடுத்துக்கொள்ளும் முயற்சியே தற்சோதனையாகும்.

✪ மனிதன் தன் திறமையையும் வல்லமையையும் பெருக்கிக் கொள்ளும் பயிற்சியே தவம் - தற்சோதனை.

✪ விளைவறிந்து, நலமுணர்ந்து நல்ல நாட்டத்தோடு எண்ணம், சொல், செயல்களைப் பயன்படுத்தும் கலையே தற்சோதனை.

✪ தன்னைப் பற்றி தன் தேவையைப் பற்றி தன் செயலின் விளைவைப் பற்றி தன் தகுதியைப் பற்றி, தன் மதிப்பைப் பற்றி ஆராய்வது தற்சோதனை.

✪ நமது தவறுகளை, நாமே ஒத்துக்கொள்கின்றபோதே, அந்தத் தவறுகள் நம்மிலிருந்து மறைந்துவிடும். அதற்கு வேண்டுவ தெல்லாம் துணிச்சலும் - பரந்த மனப்பான்மையும்தான். அதற்கு உதவிபுரிவது தவமும் - தற்சோதனையும்தான்.

✪ தற்சோதனையில்லாத தவம் கைப்பிடியில்லாத கூர்மையான கத்தியைப் போன்றது. தன்னையே தாக்கிவிடும். தற்சோதனை யின்றி தவம் மட்டும் செய்தால் தவ ஆற்றல் கூடும். அவர்கள் நினைக்கும் கெட்ட எண்ணங்கள் நிறைவேறும். சபித்தால்

பலிக்கும். ஆனால், அதற்கு மன்னிப்பு குணம் வேண்டும். உதாரணம் இராவணனும் - விசுவாமித்திரரும்.

- குண்டலினி தவப்பயிற்சியால் உள்ள அருட்செல்வர்களும், தற்சோதனையில் மிக்க அக்கறை கொள்ள வேண்டும். வாழ்க்கைச் சிக்கல்கள் அனைத்தையும் அறியவும் - களையவும் உள்ள ஒரே மதிப்புமிக்க பயிற்சி தற்சோதனை. தற்சோதனைக்கு தகுதியாக்கும் பயிற்சிதான் யோகம்.

## 34. தற்சுழற்சி

- ஒரு சிறிய நுண்ணிய விண்துகளிலேயிருந்து, மிகப் பெரிய நட்சத்திரங்கள் வரை எல்லாப் பொருட்களுமே தங்களுடைய தற்சுழற்சியால் நிழல் அலைத் துகள்களாகிய விரிவலைகளைப் பரப்பிக் கொண்டேயிருக்கின்றன.
- விண் எனப்படும் மிகச் சிறிய நுண்துகளிலிருந்து, மிகப் பெரிய நட்சத்திரம் வரை, ஒவ்வொரு பருப்பொருளுக்கும் தற்சுழற்சி வேகம் உள்ளது.

## 35. தலையீடு

- ஒரு குடும்பத்தில் வயதில் மூத்த பாட்டனார், பாட்டி, அன்னை, தந்தை, அண்ணன் என்ற பொறுப்புடையவர்கள் அவ்வீட்டில் உள்ள குழந்தை தவறு செய்யாமல் வாழ்க்கை அனுபவம் பெற கண்காணித்து, புத்தி கூறி, அடிக்கடி விழிப்பூட்டி வழிநடத்துவது இயல்பு. நன்மையும்கூட.
- குழந்தை வளர்ந்து வயது 16 - 20 ஆனபிறகும் பழக்கத்தாலேயே தனக்கு அடங்கி நடக்க வேண்டும் என்ற மனநிலையில் எப்போதும் எல்லாச் செயல்களையும், கண்காணித்துக் கொண்டேயிருப்பதும், தேவையில்லாதபோதுகூட புத்தி கூறிக் கொண்டிருப்பதும் வெறுப்புணர்ச்சியையே ஊட்டும்.
- பெரியவர்களுக்கு காப்பு உணர்வு, சிறியவர்களுக்கு அது தடையுணர்வு, கசப்புணர்வு, அவனுக்கும் அறிவு இருக்கிறது. பொறுப்பு இருக்கிறது. திறமை இருக்கிறது என்பதை நம்பி அவர்கள் செயல்களில், வாழ்வில் அவசியமின்றி தலையிடாது இருப்பது இனிமையளிக்கும்.

## 36. தலைவிதி

* தலைவனின் (இறைவனின்) விதி.

## 37. தவறு

- தவறு செய்தால் இன்றோ - நாளையோ அறிவிற்கோ உடலுக்கோ துன்பம் விளையும் என்பது தெரிவதில்லை.
- எல்லாச் சிக்கல்களுக்கும் நம்மிடம் உள்ள ஒரு தவறுதான் காரணம். அதுதான் எதிர்பார்ப்பு. ஒருவர் பிறரிடமிருந்து எதையும் எதிர்பார்க்கவில்லையெனில் அனைவரும் செல்வர்களே!
- தவறுகளின் விளைவுகளை அறியாதோர் யாருமில்லை. அப்படி யிருந்தும் ஒரே தவற்றை திரும்பத் திரும்பச் செய்து அதன் விளைவாக மனிதனுக்கு எத்தனை துன்பங்கள் வருகின்றன பாருங்கள்.
- தவறுகளைச் செய்துகொண்டே ஒருவர் தர்மத்தைப் போதிக்க, அதனைக் கேட்போரும் தர்மத்தைப் பேசிக்கொண்டே துணிந்து தவறுகளைச் செய்துகொண்டிருப்பர்.
- பழக்கத்தின் காரணமாகவும் புலன் கவர்ச்சியாலும் சூழ்நிலை யாலும், நாம் தவறுகள் செய்கிறோம். செய்த தவறுகளே துன்பமாக முளைக்கின்றன. பொதுவாக நாம் செய்யும் தவறுகள் நமக்குத் தெரிவதில்லை. விழிப்புணர்வுடன் இருந்த தவறுகளைக் கண்டறிய வேண்டும். இனிமேல் தவறு செய்யாமல் இருக்க வேண்டும்.
- தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டும். இது ஒன்றும் பெரிய விஷயம் அல்ல.

## 38. தவமும் அறமும்

❖ ஒரு பானையில் நீர் நிரப்பும் அளவிற்கு அதிலிருந்து காற்று குறைந்து விடுவதுபோல் உனது நல்ல எண்ணம், நல்ல செயல் உன்னில் நிரம்பும் அளவிற்கு, உனது தீயவினைகள் உன்னை விட்டு அகலும், அந்த அளவு தெய்வீக ஆற்றல் உன்னில் மலரும். இந்த மேலான நலத்தை தவமும் அறமும்தான் அளிக்கும்.

## 39. தற்பெருமை

▲ தற்பெருமை எங்கு முடிகிறதோ அங்குதான் ஆனந்தம் மலரும்.

## 40. தர்மசங்கடம்

❊ தர்மத்துக்கே சங்கடம் - தர்ம சங்கடம்.

## 41. தவம்

✪ இயற்கையின் பெருமையை, சிறப்புக்களை, விளைவுகளை உணர்ந்துகொள்ள மனிதன் எடுக்கும் முயற்சியில் மனஅலைச் சுழல் விரைவைக் குறைத்து, அலைகள் நிலையாக, அதுவே அறிவாக அதையே தானாக, அவ்வறிவாக இருக்கும் பேராற்றலே எல்லாம்வல்ல இறைவெளியாக உணர்ந்து முழுமை பெறும் முயற்சிதான் தவம் ஆகும்.

✪ மனிதனுடைய மூளையில் மேற்பகுதியில் பினியல் சுரப்பி என்று ஒன்று இருப்பதாக அண்மைக்கால மருத்துவ விஞ்ஞானம் கண்டுள்ளது. அதுவே துரியம் ஆகும்.

✪ ஆக்னை தவம் செய்துவிட்டு துரியம் செலுத்தும்போது உயிர்ச் சக்தி மூளையிலுள்ள சிற்றறைகளில் ஊடுருவி இனிமையான ஒட்ட உணர்வாக இருக்கும்.

✪ துரிய தவம் எண்ணத்தை ஆராய்ந்து கவலைகளை ஒழிக்கத் துணையாக இருக்கும்.

✪ அறிவதனைக் கருவினிலே இணைத்து தவம் ஆற்ற ஐம்புலன்கள் அமைதி பெறும். அறுகுணமும் சீராகும். அறிவு தன் விழிப்புநிலை பிறழாத தெளிவில் ஐந்து பெரும் பழிச் செயல்கள் விளைய வழியேது?

✪ நல்லதை எண்ணுவதற்கு துணிவும், வைராக்கியமும் வேண்டும். அந்த மனஉறுதி தவத்தினால் கிடைக்கும்.

✪ தவம் என்பதுள் புறம் என்றிரண்டு அகத்துத் தவம் உள்ஆம்; தழைக்கும் அறம் புறத்தவம் ஆம்; தேர்வோம்.

✪ மனம் தன் திறமையையும், வல்லமையையும் பெருக்கிக் கொள்ளும் பயிற்சியே தவம்.

✪ தன்னை அறிவதற்கு தவம் வேண்டும்.

- ✪ நல்லதை எண்ணுவதற்கு துணிவும், வைராக்கியமும் வேண்டும் அந்த மனஉறுதி தவத்தினால் கிடைக்கும்.

- ✪ சாந்தியோகம் என்ற தவமுறையை மூன்று நாட்கள் முறையாகப் பழகிய பின் தலை பளுவும் அதிக விரைவாக நெற்றியில் உணர்ந்த துடிப்பும் சமமாகி விட்டன. பிறகு எல்லாத் தவமுறைகளையும் உணர்ந்து கொண்டேன்.

- ✪ ஆக்கினை தவமும், பிரம்ம யோகம் என்னும் துரியநிலை தவமும் ஆழ்ந்து செய்யச் செய்ய எனக்கு உள்ளுணர்வாகச் சக்திகளத் தவம், சிவகளத்தவம் இரண்டும் உருவாகின, பல நிலைகளில் அலைச் சுழல்களாக இயங்கிக் கொண்டிருக்கின்ற நிலையிலிருந்து அலையாக இருப்பு நிலைக்கே மனம் வந்து நிற்கின்ற அனுபவம் கிடைத்தது. நிலையானது அறிவு என்றும், அலையானது மனம் என்றும் உணர்ந்தேன்.

- ✪ நாம் நடத்தும் இன்பமான வாழ்வில் மேலும் மணம் சேர்க்க, மன்னிக்கும் மனப்பான்மையை வளர்க்க வேண்டும். அதில் உறுதி பெற வேண்டும். இந்த பண்பு நம்மில் வளர தினம் தவம் புரிய வேண்டும்.

- ✪ மான் மருண்டு ஓடும் நடையைப் போன்றது, ஊன் கண்ட வேகத்தில் உச்சிமலை மீதினிலே நான் கண்ட தவம்.

- ✪ நாம் உண்ணும் உணவின் தன்மையைப் பொறுத்தும் தவம் கிடைக்கும். நல்ல உணவு வகைகளும், நேரம் தவறாத உணவும், அளவான உணவும் தவம் சித்திக்கக் கைகொடுக்கும். உணவில் மட்டுமல்ல உறக்கம், உழைப்பு, உடலுறவு, எண்ணம் என ஐந்திலும் அளவுமுறை காக்க தவம் நன்கு சித்திக்கும்.

- ✪ தவத்திற்குக் காலமும் வேண்டியதில்லை; அறிவை, விரிவான பிரபஞ்ச இணைப்போடு இணைக்கக்கூடிய ஒரு பயிற்சிதான் தவம். அதற்குக் காலம் நேரம் பார்க்க வேண்டியதில்லை. எந்தக் காலத்திலேயும் செய்யலாம்.

- ✪ மனதை உயிர்மேல் வைத்துப் பழகும் தியானமோ, அசைவற்று நினைவற்றிருக்கும் சாதனையோ, பல கோணங்களில் செய்யும் உடற்பயிற்சியோ, தற்சோதனையோ மாத்திரம் தவம் அல்ல. மனிதப் பிறவியின் பெரு நோக்கமும், மதிப்பும் உணர்ந்து,

அறிவின் நிலையறிந்து, பேரறிவு நிலையெய்தி, ஒழுக்கம், கடமை, ஈகையெனும் அறநெறிகளை தனதியல்பாகக் கொண்டு, அயரா விழிப்பு நிலையோடு தானும் வாழ்ந்து, பிறரையும் இனிதாக வாழவைக்கும் உயர் வாழ்வே தவம் ஆகும்.

✪ ஆக்கினை தவத்தையும், பிரம்மரந்திர யோகம் என்னும் துரிய நிலைத் தவத்தையும் ஆழ்ந்து செய்யச் செய்ய, எனக்கு உள்ளுணர் வாகச் சக்திகளத்தவம், சிவகளத்தவம் இந்த இரண்டு உருவாயின.

✪ வாழ்வில் எந்தச் சிக்கல் வந்தாலும், அதனை முறைப்படி காலத்தோடு தீர்த்துக் கொள்வும், வாழ்வில் அமைதியும் மனநிறைவும் பெறவும் குண்டலினி தவமுறையால் அறிவுக்கு நுண்மையும் வலிவும் ஓங்கும்.

## 42. தன்னிலை விளக்கம்

✤ புலன்களின் அளவிலே அறிவைக் குறுக்கி அதனால் பெரும்பாலும் ஏற்படும் கற்பனை மயக்கங்களால் துன்பம் விளைவித்துக் கொள்ளாத விழிப்பு நிலையைத் தன்னிலை விளக்கம் தரும்.

## 43. தன்னையறிதல்

☞ அவனில் அணு - அணுவில் அவன் உன்னில் எல்லாம் உன்னை நீ அறி.

## 44. தண்டனை

✪ எந்த இடத்தில் இயற்கையினுடைய ஆற்றலுக்கு முரணாகச் செயல்கள் உண்டாயிற்றோ, எந்தச் செயலில் அல்லது இடத்தி லிருந்து தனக்கும் பிறருக்கும் துன்பம் வருகின்றதோ அங்கேயே அதை மாற்றி அமைப்பதற்கான திருத்தம் பெறுவதற்காக, சிந்தனைமிக்க அறிஞர்களால் வகுக்கப்பட்ட சீர்திருத்த முறையைத்தான் தண்டனை என்ற பெயரால் திருந்தவேண்டிய மனிதனுக்குக் கொடுக்கிறார்கள்.

✪ தனிமனிதனைத் தண்டித்தால் மாத்திரம் போதாது. திருந்திய சமுதாயம் அமைவதற்கு வேண்டிய, வழிமுறைகளை அறிஞர்கள் கண்டுபிடிக்க வேண்டும்.

## 45. தம்பதிகள் நட்பு

- ❋ கீழ்க்கண்ட எட்டு வழிகளையும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப நுட்பத்தோடு பின்பற்றப் பழகிக் கொண்டால், இவைகள் தம்பதிகள் நட்பைப் பாதுகாக்கும் ஒரு சிறந்த பலம் வாய்ந்த கோட்டையாகிவிடும்.
- ❋ மற்றவர் மனதைப் புரிந்துகொண்டு செயலாற்றுவது.
- ❋ தவறான போக்கு எனில் ஒருவருக்கொருவர் அன்போடும், அளவோடும் கண்டித்துத் திருத்துவது.
- ❋ கோபம் என்ற விஷம் ஏறாமல் ஒவ்வொருவரும் தங்களைப் பாதுகாத்துக் கொள்வது.
- ❋ நேர்மையான வழியில் முயற்சித்துப் பொருட்களை ஈட்டுவது.
- ❋ சிக்கனமாகவும், பிறர் பழிக்கஞ்சியும் செலவு செய்து வருவது.
- ❋ உயிரைவிட உயர்வாகக் கற்பொழுக்கத்தைப் பாதுகாத்துக் கொள்வது.
- ❋ பெற்றோர்களையும், குழந்தைகளையும் பராமரிப்பதிலும், விருந்து உபசரிப்பதிலும் சமமான பொறுப்பை ஏற்றுக் கொள்க.
- ❋ சமுதாயம், சந்தர்ப்பம், அஜாக்கிரதை ஆகிய மூவகையில் ஏற்படக்கூடிய கஷ்டநஷ்டங்களை, காரணங்களை உணர்ந்து சகித்துக்கொள்வது.
- ❋ தம்பதிகளின் மனம் ஒத்த நட்பின் மூலம் கிடைக்கின்ற பலதரப் பட்ட வாழ்க்கை வசதிகளையும் இன்பங்களையும் வேறு எவ்வழியிலும் பெற்றிட முடியாது.
- ❋ கணவன் மனைவிக்கிடையே எக்காரணத்தைக் கொண்டும் தளராத அன்புப் பிடிப்பு வேண்டும். பழுதுபடாத கணவன் மனைவி உறவே குடும்ப அமைதிக்கு அஸ்திவாரம். பிணைந்தொன்றிய அவர்கள் நட்பே வெற்றிக்கான ஏணிப்படியாகும்.
- ❋ தன்னடக்கம் - பண்பாடு இல்லாத தம்பதிகள் ஒழுக்கமும் மேன்மையும் உடைய மக்களைப் பெறமுடியாது.

## 46. தனிமம்

- ❀ ஒரு தனிமம், சூழ்நிலை காரணத்தால் இன்னொரு விண்துகளைச் சேர்த்துக் கொண்டாலோ அல்லது தன்னிடமிருந்து ஒரு விண் துகளை இழந்தாலோ, வேறு தனிமமாக மாறிவிடுகிறது.

❀ ஒரு தனிமமானது காலப்போக்கில் தன்னியக்கத்தாலேயே தன் நிலையிலிருந்து விரைவு பெற்றாலும் அல்லது சூழ்நிலையிலிருந்து விரைவு பெற்றாலும் அல்லது சூழ்நிலையின் ஆதிக்கத்தால் விரைவு அதிகமாக்கப் பெற்றாலும் தன்னுடைய விலக்கும் ஆற்றலால் தனது நுண்துகள் சிலவற்றை இழந்து தனது மதிப்பில் மாற்றம் பெற நேரிடும். இதுவே தனிம மாற்றங்களுக்கான காரணம்.

## 47. தாயன்பும் குரு அன்பும்

* உலகிலேயே உயர்ந்த அன்பு தாயுடையது. எனினும் அதில் சில எதிர்பார்ப்புகள் உண்டு. பிற்காலத்தில் மகன் தன்னை கவனித்துக் கொள்ள வேண்டும், மருமகள் வந்தபின் அவளைவிட தன்மீதே அதிக அன்பு செலுத்த வேண்டும் போன்ற எதிர்பார்ப்புகள் தாயன்பில் இருக்கும்.

* ஆனால் குரு அன்பு எதிர்பார்ப்பு அற்றது. இந்த ஆன்மாவிற்கு இறைநிலையை உணர்த்த வேண்டும். இந்த ஆன்மா உய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பற்ற அன்பு. ஆனால் குரு அன்பு கொஞ்சம் கண்டிப்பானது.

## 48. தாய்

➢ மனிதகுலத்தில் உள்ள எல்லா ஆண்களுக்கும் பெண்கள் தாயாகவே இருக்கிறார்கள்.

## 49. தாய்சேய்

❖ தாய், சேய் நலம் என்று சொல்லுகிறபோது அது பெண்களுக்கோ, குழந்தைகளுக்கோ மாத்திரம் அல்ல; மனிதகுலத்திற்கே ஒரு பொதுவான, ஒரு மதிப்புடைய இடம் அது. அந்த மனிதகுல மேன்மைக்காகவே, தாய், சேய் நலம் என்ற ஒரு பிரிவை எல்லோரும் மதித்து அதற்கு ஒவ்வொருவராலும் ஆகவேண்டிய செயலைச் செய்ய வேண்டியது அவசியம்.

## 50. தாவரம்

▲ ஓரறிவுடைய தாவரத்தை எடுத்துக்கொண்டால் - அவற்றிடம் ஒரு பாவமும் இல்லை. ஒரு பாவமும் செய்யாதவை ஓரறிவு

ஜீவன்களாகும். எப்போதும் மற்ற எல்லா ஜீவன்களுக்கும் - உதவியாக அவற்றினுடைய வாழ்க்கைக்கு வசதியாகவே தியாக ஜீவன்களாக இருந்து கொண்டிருக்கின்றன.

▲ தாவரங்களை உணவாகக் கொண்டால், அவற்றுக்குத் துன்பம் இல்லை. அதனால் பழிச்செயலும் (பாவமும்) இல்லை.

▲ இதேபோன்று வேர்களை நிலத்திலே ஊன்றி நிற்கக்கூடிய தாவரங் களுக்கு ஏற்படுகின்ற துன்ப உணர்வுகளும் நிலத்திற்கே போகும்.

## 51. திருமணம்

* ஆண், பெண் நட்பு ஒழுக்கத்தின் மூலமே என்றைக்கும் உலகம் நாகரிகத்தில் உயர்வடைய முடியும். இந்த ஒழுக்கத்தைப் பாதுகாக்கும் கவசமே திருமணம்.

* பெண்களைப் பெற்றவர்கள் திருமண நிகழ்ச்சியின்போது தனது பெண்ணை மணமகனுக்குத் தாரை வார்த்துத் தத்தம் செய்கின்ற பழக்கம் இன்றைய காலத்திற்கு ஒவ்வாது.

* திருமணச் செலவு என்பது இன்று சமுதாயம் முழுமையும் பரவித் துன்புறுத்தும் ஒரு நோயாக வளர்ந்துவிட்டது.

* திருமணத்தை நடத்துபவர்கள் கூடுமானவரையில் சிந்தித்து, சிந்தித்து, அவசியமற்ற சடங்குமுறைகளையெல்லாம் களைந்து அவசியமான, தேவையான, உண்மையான சடங்குகளை மட்டும் கடைப்பிடிக்க வேண்டும். இதுபோன்ற திருமணங்களைப் பெரும் அளவில் நீங்களும் நடத்திச் சிக்கனமாக, சிந்தனையோடு, சீர்திருத்தத்தோடு எல்லோரும் வாழ வழிவகுக்கும், மாற அறிஞர் பெருமக்கள் - தாய்மார்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

* நமது குடும்பங்களில் கலியாணச் செலவை முக்கியமாகக் குறைக்க வேண்டும். இல்லாதவர்களைவிட இருப்பவர்களுக்குத்தான் இந்தப் பொறுப்பு அதிகம். அவர்களைப் பின்பற்ற முயன்று இல்லாதவர்கள் கடன் வாங்குகிறார்கள். அதோடு குடும்ப அமைதியையும் இழந்து விடுகிறார்கள்.

* ஆணைப் பெண்ணோ, பெண்ணை ஆணோ விருப்பம்போல் துன்புறுத்தி வாழலாம். அதற்கேற்ற உரிமை ஒப்பந்தம்தான் திருமணம் என்பதுபோல் இன்றைய நிலை உள்ளது.

- திருமணம் என்பது ஒருவரையொருவர் துன்புறுத்தவும், சபித்துக் கொள்ளவும், அடக்கியாளவும், பெற்ற லைசன்ஸ் என்று சிலர் நினைக்கிறார்கள். அப்படியல்ல. திருமணம் ஒரு தெய்வீக உணர்விலெழுகின்ற ஏற்பாடு.

## 52. திருவிளையாடல்

- பிறப்பும், இறப்பும் தெய்வீக இருட்டறையில் நடக்கும் திருவிளையாடல்.
- மேகம் நீராவி மீண்டும் மேகமாகும் வரையில் எத்தனை விதமான திருவிளையாடல்கள் நடைபெறுகின்றன. இதுபோன்றே, 'இயற்கை என்ற போராட்டக்காரனுக்கு எல்லா உயிர்களுமே ஆட்டக்காய்கள்' என்பதுபோல அனைத்துயிர்களும் ஆட்டப்படு கின்றன. இதுதான் அருட்பேராற்றலின் திருவிளையாடல்.
- நாம் என்ன செய்தாலும் அந்தச் செயலுக்கு எல்லாம்வல்ல மகா சக்தியாக உலகில் இயங்கிக்கொண்டு வரக்கூடிய முற்றறி வானது தயவுதாட்சண்யமின்றியும், பாரபட்சமின்றியும் சரியாகத் தரும் விளைவுதான் அதனுடைய ஆட்சி, இறைவனுடைய திருவிளையாடல்.

## 53. திருத்தம்

- நான் திருந்தி என்ன பயன்? அவர் திருந்த வேண்டாமா? என்று நினைக்காமல் முதலில் நம்மைத் திருத்திக் கொள்வோம். அடுத்தவர் தாமே திருந்தி விடுவார்.

## 54. திருட்டு

- திருட்டுக்குக் காரணமான வறுமையைப் போக்க முயலாமல், திருடினால் திருடனைத் தண்டிக்கும் ஒரு அரசியலானது குறைபாடு உடையதேயாகும்.
- திருடுவது தனிமனிதனின் குற்றமென்றால், அதன் காரணத்தைப் போக்காமல் அதை நீடிக்க விட்டிருப்பது சமுதாயத்தின் குற்றமல்லவா?

## 55. தியாகம்

- குறிப்பிட்ட ஒரு நோக்கத்திற்காகவோ, ஒரு மனிதனுக்காகவோ, மனிதக்குழு ஒன்றிற்காவோ தன்னை அர்ப்பணித்துக் கொள்கின்ற செயல் தியாகம் எனப்படும்.
- தியாகம் செய்தவர்கள் தியாகம் செய்திருக்கிறோம் என்ற உணர்வோடு இருப்பது சரியல்ல. தியாகம் செய்திருக்கிறோம் என்ற எண்ணத்தையும் தியாகம் செய்தால்தான், தியாகம் பூரணம் அடைகிறது.

## 56. தியாக ஜீவன்

- ஓரறிவுடைய தாவரத்தை எடுத்துக்கொண்டால் அவற்றினிடம் ஒரு பாவமும் இல்லை. ஒரு பாவமும் செய்யாதவை ஓரறிவு ஜீவன்களாகும். எப்போதும் மற்ற எல்லா ஜீவன்களுக்கும் உதவியாக - அவற்றினுடைய வாழ்க்கைக்கு வசதியாகவே ஓரறிவு ஜீவன்கள் இருந்துகொண்டிருக்கின்றன.

## 57. தியானம்

- தியானம் செய்வதால் நம் இரத்த ஓட்ட மண்டலம் உயர் இரத்த அழுத்தத்தைக் குறைத்தும் குறை இரத்த அழுத்தத்தை உயர்த்தியும் சராசரி ஆரோக்கிய இரத்த அழுத்த நிலை நோக்கி தன்னைத்தானே சரிசெய்து கொள்கிறது.
- நோய் எதிர்ப்புச்சக்தி தியானம் செய்யும்போது அதிகரிக்கிறது. தூக்கமின்மையை சரிசெய்கிறது. இளமையோடு இருக்கச் செய்கிறது.
- தியானம் தரும் உற்சாக சக்தியால் முகம் மலர்ந்து பொலிவடை கிறது. மனிதனின் செயலாற்றல் திறன் அதிகரிக்கிறது.
- உடல்நலத்தையும், மனநலத்தையும் தியானம் ஒரே நேரத்தில் சீராகச் சரிசெய்து கொண்டே வரும். தியான முறையோடு ஞானக் கருத்துக்களும் தற்சோதனையும் சேரும்போது மட்டுமே தியானம் முழுமையான பலனைத் தரும்.

- ❀ எல்லாரும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கூடி ஞாபகத்தை ஒழுங்குபடுத்தத்தக்க தியான முறையின் மூலம், இயற்கையின் நியதிகளையும், அறிவின் தன்மையையும் அறியத் தகுந்தபடி மக்களைப் பழக்க வேண்டும்.
- ❀ தியானத்தின் தொடக்கமும் விழிப்புநிலை - முடிவும் விழிப்பு நிலை.
- ❀ தியானத்திற்கு அணிகலன் தானதர்மம். மனத்திற்கு அணிகலன் தியானம்.
- ❀ தியானம் என்பது ஆன்மாவின் கண்ணாடி. அதன் வழியே மனிதன் இறைவனைத் தன்னருகில் காண்கிறான்.

## 58. திறமை

- ✻ அவரவர்களுக்கு ஓர் அறிவு இருக்கிறது. திறமை இருக்கிறது. பொறுப்பும் இருக்கிறது.

## 59. தீட்சை

- ➢ நாம் பெண்களுக்கு தீட்சை அளிக்கிறோம். காரணம் என்ன வென்றால் தீட்சை கொடுக்கும்போதே குண்டலினி சக்தி மூலாதாரத்திலிருந்து ஆக்கினை வரைக்கும் மேல்தட்டுக்கு வந்துவிடுகின்றது. அதனால் இனிமேல் மறுபடியும் மாதவிலக்கால் பெண்களுக்குத் தடை பண்ணுவதில்லை.

## 60. தீங்கு

- ❖ தமக்கு வேண்டிய நபர் பற்றியும், பிடித்த பொருள் பற்றியும் பேசும்பொழுது உண்மைக்கு மேலும் உயர்வூட்டிப் பேசுவதும், தான் விரும்பாத ஒன்றைப் பற்றியும், வேண்டாத நபர் பற்றியும் பேசும்பொழுது உண்மையைத் தாழ்த்திப் பேசுவதும் தன்னுள் இயங்கும் இறைநிலைக்குத் தீங்கு செய்வதாகும்.

## 61. துறவறம்

- ▲ உறவிலே கண்ட உண்மை நிலைத் தெளிவே உறவு.
- ▲ உண்மை உணர்ந்த அறிவின் தெளிந்த கருத்தே துறவு, விடுதலை.

- ▲ காயினை மூடிவைத்து கனியச் செய்வது போன்றது உலகியலோடு ஒழுகி இல்லறம் ஆற்றாத துறவு.
- ▲ உற்ற உலகியலோடொழுகி இல்லறம் ஆற்றிப் பெற்ற அறிவின் உயர்வே பெருந்துறவு.
- ▲ உறவிலே அமைந்துள்ள உண்மையை உணர்ந்திடு. துறவிலே உள்ள உள்ளத்தூய்மை பெற்றுய்யலாம்.
- ▲ வெறுத்து ஒதுக்குவது துறவாகாது. அறிந்து உணர்ந்து, தொடர்பு மற்றும் உறவினைச் சரியாகக் கணக்கிட்டு அளவு முறையுடன் அனுபோகம் கொள்ளும் மனநிலைதான் துறவு.

## 62. துறவி

- ✻ பறவைகளின் காலடியை ஆகாயத்தில் காண முடியாததுபோல் துறவிகளின் அறிவை அறிய முடியாது.
- ✻ உலகியலோடொழுகி இல்லறம் ஆற்றிப் பெற்ற அறிவின் உயர்வே பெருந்துறவு. மற்ற வழிமுற்றாத காயதனை மூடிவைத்தே கனியப் பெற்றது போலாகும் பிழை.
- ✻ ஈட்டல், காத்தல், ஒழித்து எல்லோர்க்கும் பெருமகனாய் வாட்டும் பசிக்குப் பிறர் வழங்க ஏற்றுணவுண்டு, போட்டி, பிணக்கு, பகை, போர், நோய்கள் அற அறிவையூட்டும் அருள் நெறியே உயர்ந்த துறவறம் ஆகும்.
- ✻ பொருளீட்டும் தொழிலை விட்டு அகத்தவத்தின் சாதனையால் பிரபஞ்ச ரகசியம் அறிந்து உடல் - உயிர் - மனம் - அறிவு - சீவகாந்தம் உணர்ந்து, அறநிலை தெளிந்த - அறிவுத் துறையில் முழுமை பெற்று - நேர்மை தவறாது - ஒழுக்க வழி வாழும் அறிவை மக்களுக்குப் புகட்டி - அதன் மூலமாகத் தொண்டு செய்து வாழக் கூடியவர்கள் துறவறம் என்ற நிலையை உடையவர்கள்.
- ✻ துறவத்தான் என்றால் பொருளீட்டிக் காப்பது தவிர்த்து, அறிவுத் துறையிலுயர்ந்து தொண்டாற்றிக் கொண்டு இருப்பவன்.

## 63. துரியம்

- ✪ மனிதனுடைய மூளையில் மேற்பகுதியில் பினியல் சுரப்பி என்ற ஒன்று இருப்பதாக அண்மைக்கால மருத்துவ விஞ்ஞானம் கண்டுபிடித்துள்ளது. இதுவே துரியம்.

- ✪ அறிவு உயிரில் அடங்கி அந்நிலையில் மேலும் ஆழ்ந்து ஒடுங்கித் துரியம் நிற்க முன்வினைகள் போமே.
- ✪ துரிய தவத்தில் மனம் என்ற விரிந்த நிலை குன்றி அதன் மூல நிலையான உயிராகவே நிற்கிறது. உயிர் உயிராகவே நின்று - தனது அடக்கத்தில் பிரம்மமாக அமைதி பெறுவதற்குத் துரியத்தில் தயாரிப்பு நடைபெறுகிறது.
- ✪ வினைகளை எல்லாம் போக்கக்கூடிய இடம் துரியம் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.
- ✪ எண்ணத்தை ஆராயவும், அகத்தாய்வு செய்யவும் கவலைகளை ஆராய்ந்து ஒழிக்கவும் துரியநிலைத் தவமே பெரிதும் துணையாக இருக்கும்.
- ✪ பழவினைப் பதிவுகளை அறிந்து, முறையாகத் திட்டமிட்டுச் செயல்புரிந்து, அவற்றை மாற்றிக் கொள்ளத் தகுதியளிக்கின்ற முறையைத் துரியதவம் என்று சொல்கிறோம்.
- ✪ பிரம்மரந்திரம் என்றால் உச்சந்தலையைக் குறிக்கும். பிரம்மரந்திரம் என்றால் இறைநிலைக் கான வாயில் என்று பொருள். உச்சந் தலையில் உயர்வை நிறுத்தித் தவம் இயற்றுதல் பிரம்மரந்திர தவம் அல்லது துரியதவம் என்பதாகும்.

## 64. துரியாதீதம்

- ✤ வாழும்போதே இறைவனடி சேர - துரியாதீததவம்.
- ✤ அறிவு துரியாதீத நிலை நிற்க நிற்க ஆதியாம் மெய்ப்பொருளாம் - அறும் பிறவித் தொடரே.
- ✤ துரியாதீத தவத்தில் மனம் ஓடாது. புலன்கள் தன்னடக்கம் பெற்று அமைதி அடைந்து விடும். பிரம்மத்தை உணரும் நிலைக்கு ஈர்த்துச் செல்கிறது. மனம் ஓடாத காரணத்தால் அதுவே தானாக - தானே அதுவாக இருப்பதால் துரியாதீத தவத்தில் உறக்கம் வருவதுபோல் இருக்கும். அதுவே தவத்தில் உறக்கம். உறக்கம் என்றால் 'குறட்டை விட்டு' உறங்குவது இல்லை. இதுவே 'அரிதுயில்' என்றும் அழைக்கப்படுகிறது. இந்த உறக்கம் உடலுக்கு ஆரோக்கியத்தையும் - வலுவையும் அளிக்கிறது.
- ✤ துரியாதீதமே ஜீவப்பிரம்ம ஐக்கிய முக்தி. துரியாதீதமே வீடுபேறு. பிரம்மத்தை நினைக்கும் மனமும் பிரம்மமாகவே - ஆதியாகவே - மாறி பிரம்மத்திற்குச் சமமான சமாதி நிலையை அடைகிறது.

- ✤ துரியாதீததவம் ஒரு மாபெரும் புதையல். இதில் எல்லாமே அடங்கும். எந்த அதிர்வியக்கத்தில் மனம் நின்றால் பிரபஞ்ச ரகசியம் எல்லாம் அறியப்படுமோ அந்த இடம்தான் சமாதி நிலை.
- ✤ துரியாதீத தவம் செய்வதால் வினைப்பதிவுகளை மாற்றலாம். மனதின் மறுமுனையான தன்னை தெய்வத்தோடு இணைக்கும். தன்முனைப்பு, பழிச்செயல் பதிவுகள், வேண்டாப்பற்று என்று கூறப்படும் மும்மலங்களையும் நீக்கி விழிப்பு நிலைக்கு வரலாம்.
- ✤ துரியாதீத தவத்தினால் புலனடக்கம் உண்டாகி அறிவு அமைதி யடையச் செய்கிறது. பகுதி அறிவு ஆனது முழுமையை நோக்கிப் பயணம் ஏற்க உதவுகிறது.
- ✤ தவத்தில் முழுமையான தவநிலை துரியாதீதம், ஒவ்வொருவருக்கும் தவம் எடுப்பதே ஒரு பெரிய விழா நாள்தான். ஆனால் அதன் பிறகு துரியாதீத நிலையை எய்தும் நாள் அதைவிட ஒரு பெருமையான விழா நாள் என்று சொல்லலாம். இதைப் புரிந்து கொள்வதற்கு உண்மையான தத்துவத்தைக் கொஞ்சம் உணர வேண்டும். அதை பிரம்ம ஞானம் என்று சொல்கிறோம்.

## 65. துவாதசங்கம் – துவாதசந்தம்

- ➫ உயிர்மேல் மனம் வைத்து அழுத்தம் என்ற உணர்வால் ஆக்கினையில் உயிரை உணர்கிறோம். உயிரானது கரு மையத்தை மையமாகக் கொண்டு உடல் முழுவதும் இயங்கினாலும், உடலைத் தாண்டி உயிர் நிற்கும். எல்லையில் மனம் வைத்து நிற்பதை ‘துவாதசங்கம்’ என்பதாகும். துவாதஸ் என்றால் பனிரெண்டு. அங்கம் என்றால் உடல். உடலைத் தாண்டி பனிரெண்டு அங்குல உயரத்தில் மனதை வைத்து நிற்பது ‘துவாதசங்கம்’.
- ➫ மனமானது இப்பேரியக்க மண்டலத்தைக் கடந்து தன் மூலமான பிரம்மத்தில் நிலைக்க வேண்டும். இப்பேரியக்க மண்டலத்தை மேஷம் முதல் மீனம் வரை பனிரெண்டு தொகுதிகளாகப் பிரித் திருக்கிறார்கள். மனமானது இந்த பனிரெண்டு தொகுதிகளையும் கடந்து தன் ஆதிநிலையான சுத்தவெளியில் நிலைக்கச் செய்வது ‘துவாதசந்தம்’. அந்தம் என்றால் முடிவானது என்று பொருள்.

## 66. துன்பம்

- இன்பத்தை முறையுடன், அளவோடு அனுபவிக்க துன்பமே பெரும்பாலும் தோன்றாது.
- பசி, வெப்பதட்ப ஏற்றம், உடலில் தோன்றும் கசிவுகள் உந்தல் இவை இயற்கைத் துன்பம்.
- மனித வாழ்க்கையில் துன்பமும் துயரமும் நேர்வதற்கு 3 சூழ்நிலைகள் உள்ளன. அவை, 1. ஆகாம்ய கர்மம்; 2. ப்ராரப்த கர்மம்; 3. சஞ்சித கர்மம். சஞ்சித கர்மம் என்பது நமது முன்னோர்கள் செய்த புண்ணிய பாவத்தின் தொகுப்பாகும். அவை வழிவழியாகச் சந்ததிகளுக்கு வந்துசேரும் வினைப் பதிவாகும். எனவேதான் ஒரு மனிதனானவன் தான் எந்தத் தவறும் செய்யாவிட்டாலும்கூட துன்பமும் துயரமும் அவனது வாழ்க்கையில் உண்டாகிக் கொண்டிருக்கின்றன. சஞ்சிதக் கர்ம வினைப்பதிவுகளைத் தீர்த்துக்கொள்ள கீழ்க்காணும் மூன்று வழிகள் உள்ளன. அவை: 1. பிராயசித்தம்; 2. மேல்பதிவு; 3. தவம்.
- பொறுமை, விட்டுக் கொடுத்தல், தியாகம் என்ற மூன்றையும் இடம், காலம், தொடர்பு கொள்ளும் மக்கள் இவற்றிற்கேற்ப பயன்படுத்தினால் உலகையே நீ உன் வசமாக்கிக் கொள்ளலாம். பிறரிடம் உள்ள நல்ல செயல்களை நினைந்து நினைந்து பாராட்டு. நன்றி செலுத்து. தவமும், அறமும் இடைவிடாது செய்து வா. இதுவே பிறவித் துன்பத்திலிருந்து விடுபட உதவும்.
- தீர்க்க முடியாத துன்பம் என்று ஏதொன்றும் கிடையாது. தீர்க்கும் வழியை தீர்க்கமாக அறியாதவர்களே உண்டு. திறக்க முடியாத பூட்டே கிடையாது. சரியான சாவியைக் கண்டுபிடிக்காதவர் தான் உண்டு.
- மனிதனை மனிதன் உணராத நிலை துன்பத்திற்கு காரணம். துன்பம் வேறு எங்கிருந்து முளைத்து விடும். வாழ்க்கைக் கல்வி குறைந்து வருவதே துன்பத்திற்குக் காரணம்.
- இயற்கையிலே எந்தக் குறைபாடும் இல்லை. மனிதனின் அறியாமையே எல்லாத் துன்பங்களுக்கும் காரணம்.
- எந்தவொன்று இன்பத்தைத் தருகின்றதோ அதுவேதான் துன்பத்தையும் தருகிறது.

- ✪ நன்மை செய்பவனுக்கு இறைவன் தரும் வரம் இன்பம். செயல் தவறு என்பதை இறைவன் உணர்த்தும் வழியே துன்பம்.
- ✪ செய்த தவறுகளே துன்பமாக முளைக்கின்றன.
- ✪ ஒவ்வொருவருக்கும் அவரவர்கள் செய்த முன்வினையின் தொடர்பு இருக்கின்றது. அந்த வினைத் தொடர்பு வந்து வெளியாகும் காலத்தில், அது ஒரு துன்பத்தின் மூலம்தான் வெளியாக வேண்டும்.
- ✪ வந்த துன்பம் ஏற்றுச் சகித்து அவற்றைப் போக்க வழிகண்டு - முறையோடு ஆற்றி இன்பம் காத்து எந்தத் துன்பம் வரினும் எதிர்நோக்கி நிற்பாயேல் இன்பமே மிகுதிபடும். துன்பங்கள் தோல்வியுறும்.
- ✪ எந்த கருமம் செய்தாலும், வினை செய்தாலும் விளைவென்னவோ விடாமல் பிறவிதோறும் தொடர்ந்துதான் வந்துகொண்டிருக்கிறது. இதை உணர்ந்து துன்பம் தராத செயல்களாக, துன்பம் தரும் செயல் களைத் தவிர்த்து அமைதியும், இன்பமும் தரத்தக்க செயல் களாகவே செய்துவந்தால் மனிதனுக்கு என்றும் துன்பமேயில்லை.
- ✪ மனத்திற்கு பொறுக்க முடியாத தன்மை உள்ளதோ அதைத் துன்பம் என்று சொல்லலாம்.
- ✪ உடலையே நான் என்று கொள்ளும் மயக்கத்தில் சில பொருட் களும் சில மக்களும் மட்டுமே தனது என்று எண்ணவேண்டி இருக்கும். அதன் விளைவாகப் பொருள் உரிமை, மக்கள் உரிமை இரண்டும் எழுந்து இவற்றைக் காக்க சாதி, மொழி, இன, மத, தேச அளவில் மனிதர் கூட்டுச் சேரும்போது, சமூகத்தில் வேறுபாட்டு உணர்ச்சிகள் தோன்றித் துன்பங்கள் பெருகின.
- ✪ மனிதனுக்கு ஒவ்வாதது துன்பம். இன்பமோ, இனிமையாகவும் ஒத்துவரக்கூடியதாகவும் உள்ளது.
- ✪ நாம் துன்பத்தை வெறுக்கிறோம். ஆனால், இன்பம் எப்படி வருகிறது என்பதை ஆராய்வதில்லை. ஆராயப்புகின் - உயிராற் றலைச் செலவிட்டுத்தான் நாம் இன்பம் அல்லது துன்பம் எனும் உணர்ச்சிகளைப் பெறுகிறோம் என்பது தெரியவரும்.
- ✪ இன்பமும் - அமைதியும் மனத்திற்குள்ளிருந்துதான் வரவேண்டும் என்பதை அறியாதோர் எங்கெல்லாம் அதை தேடி அலைந்து துன்புறுகிறார்கள்.

✪ உடலுக்கு ஆகாரம் உழைப்பு வேண்டும் உள அமைதிகாக்க உற்சாகம் ஊட்ட, கடல் நதிகள், மலை காடு, இயற்கைக் காட்சி, கண்டுகளித்திட - உலகம் சுற்றும் வாய்ப்பும் - நடனமுதல் களிப்பூட்டும் கலைகள் வேண்டும் நல்நினைவைப் பண்படுத்தும் தியானம் வேண்டும். விடவேண்டும் தேவையற்ற அனுபோகங்கள், விளையாது பெருகாது துன்பம் வாழ்வில்.

## 67. தூரம்

✵ ஒரு இயக்கத்திற்கும் அது நிகழுகின்ற அதே காலத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் இன்னொரு இயக்கத்திற்கும் உள்ள இடைவெளியே தூரம் எனப்படுகிறது.

## 68. தூக்கம்

❀ குறிப்பிட்ட நேரம் தூங்கிவிட்டால் மனஇயக்கத்தின் செலவு நின்று போகவே தானாகவே ஜீவகாந்த ஆற்றல் சேமிக்கப்பட்டுவிடும்.

❀ ஜீவகாந்த இருப்பு உடலில் குறையும்போது பருவுடல் இயக்கத்திற்கு மட்டும் ஜீவகாந்தம் எடுத்துக் கொள்ளப்படுகிறது. மனஇயக்கத் திற்கு ஆற்றல் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனால் சோர்வு ஏற்படும். அந்த நேரத்தில்தான் புலன் இயக்கம் நடைபெறுவதோ உடல் உறுப்புகளை இயக்குவதோ சாத்தியமில்லை. அந்த நேரத்தில் ஏற்படும் சோர்வுதான் தூக்கமாகிறது.

## 69. தூய்மை

✻ பிறர் பொருள், பிறர் மனை, ஆசைக் கொள்ளார் பிறவியிலேயே தூய்மை அமையப் பெற்றவர்.

## 70. தூயநெறி

➢ துன்பம் போக்கும் தூயநெறியே அன்பாம். அறமாம். அறிவின் உயர்வாம்.

# 71. தெய்வம்

❖ மெய்ப்பொருள் என்பது பேராதாரப் பெருவெளி. அதுவே பிரம்மம், தெய்வம், கடவுள் எனப்படுவது.

❖ பரவெளி என்பது மெய்ப்பொருள். இதுவே தெய்வம் எனப்படுகிறது.

❖ எல்லாம்வல்ல தெய்வமது - எங்கும் உள்ளது நீக்கமற - சொல்லால் மட்டும் நம்பாதே - சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய்.

❖ தெய்வத்தைப் போற்றி வழிபட்டு வாழ்வோர் சிந்தனையும் மேற்கொண்டால் சிறந்துயர்வார்.

❖ உயிருக்கு மூலமான தெய்வ நிலைக்கு விருப்போ, வெறுப்போ கிடையாது.

❖ சுத்தவெளியே இறைநிலை (தெய்வம்) அதன் தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றலால் தோன்றும் விண் எனும் பரம அணு. அந்தப் பரமாணுவைச் சுற்றிலும் சூழ்ந்தும் அழுத்தியும் பரமாணுவிற்கு தற்சுழற்சி தருவது அந்த சுத்தவெளியே. அந்த பரமாணுவுக்குள் மையமாக இருப்புக்கொண்டு இயக்குவதே அதன் இயல்பாகும்.

❖ பணத்தைக் கொடுப்பவன் கடவுளே என்கிறீர். படைத்தவன் மனிதனோ கொடுப்பவன் கடவுளோ? வெளிச்சத்திலே இருள் நிறைந்திருப்பதுபோல அறிவிலே தெய்வம் என்ற நிலை இருக்கின்றது.

❖ கடவுள் = கட + உள் ஐம்புலன்களைக் கடந்து உள்நோக்கி அறிவை அறிவது.

❖ பிரம்மம், பூரணம், அறிவு, ஆற்றல் எல்லாம் ஒன்றே.

❖ யார் எந்தக் கடவுளை வணங்கினாலும் நம்முடைய மனத்தையே தான் நாம் வணங்கிக் கொள்கிறோம். அதை உணர்ந்து கொண்டால் கடவுள் நிலை தன்னுள்ளே இருப்பதை உணர்ந்து கொள்ளலாம்.

❖ எங்கும் நிறைவாக இருக்கிறார் கடவுளென்பீர். இங்கு நம் உடல் உள்ளத் துறைந்தும் இருப்பாரன்றோ? அங்கங்கே போய்த் தேடி அலைவானேன். அவர்க்காக தங்க நம் உயிர்க்குயிராம் தவ நிலையில் அவரே நாம்.

❖ மரத்தில் விதையும் விதைக்குள்ளே மரமும் இருப்பதுபோல மனிதனுக்குள் தெய்வமும் தெய்வத்திற்குள் மனிதனும் இருக்கிறான்.

❖ ‘கடவுள் என்னும் தத்துவம் எங்கும் நிறைந்த ஓர் பேராற்றல். அதனுடைய தன்மைகளில் இன்னொன்று அன்பு. அந்த அன்பே உங்கள் எண்ணம், சொல், செயல்களிலும் ஊடுருவி நிறைந்திருந்தால் அதுதான் நீங்கள் இறைவனுக்காக ஆற்றக்கூடிய சேவை. எல்லோரிடத்திலும் அன்பைக் காட்டுங்கள். திருப்திப்படுத்த இதைவிடச் சிறந்த வேறொரு வழி இல்லை. அதற்கு மேல் அவனுக்கு எதுவும் வேண்டியதில்லை.

❖ மூலம் என்பது வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு என்ற மூன்றும் இணைந்த பெருவெளி. (இறைவெளி - தெய்வம்).

❖ உருவங்களைக் காண்பித்து, இதுதான் தெய்வம் என்று எண்ணு கின்ற மயக்கக் கருத்துக்களையும், தெய்வமே கிடையாது என்று சொல்வதையும் பரவலாக வைத்துக்கொண்டு மனித இனம் வாழ்ந்து வருகிறது.

❖ புலனால் காணப்படுவது பண்டம். அப்பண்டத்தில் அறிவால் காணப்படுவது தெய்வம்.

❖ உண்மையை அறிந்த பேரறிஞர்கள் அனைவரும் மனிதனோ, பிரபஞ்சமோ தெய்வத்தால் படைக்கப்பட்டவை அல்ல எனக் கூறியுள்ளனர்.

❖ எல்லா ஆற்றலுக்கும் மூலஆற்றல் ஒன்றே ஒன்றுதான். அந்த உண்மை நிலையுணர்ந்த பெரியோர்கள் இறைநிலையென்றும், தெய்வம் என்றும் மெய்ப்பொருள் என்றும் கூறியுள்ளார்கள்.

❖ அஞ்சுவதேன் துணிந்துரைப்போம், அறிவேதான் தெய்வம்.

## 72. தெய்வநிலை

▲ எல்லாவற்றிற்கும் மூலமான ஒரு நிலை தெய்வம் என்று சொல்லக்கூடிய ஒருநிலை, அகண்டம், இருள்-மௌனம், அரூபம், நிற்குணம் என்பதேயாகும். இது ஒருநிலைப்பட்டது என்றும் உளது. எங்கும் உளது. சர்வ வல்லமையும் உடையது. உவமையற்றது. கூர்த்த அறிவினாலே மட்டும் யூகித்து அறிந்து கொள்ளத்தக்கது. இதன் எழுச்சி நிலையே அணு. அணுவினின்று அதுவே மேலும் எழுச்சி பெறுவது ஒளி, ஒலி, சுவை, மணம் ஆகும். நீண்டகால பரிணாமத்தால் ஆகிய அதன் சிறப்பே அறிவு எனப்படுகிறது.

## 73. தெய்வீக நீதிமன்றம்

⁂ ஜீவகாந்தக் கரு மையம் மனித இன வாழ்க்கையில் கருவூலம். செயலுக்குத் தக்க விளைவைத் தரும் தெய்வீக நீதிமன்றம். பிறப்பிற்கும் இறப்பிற்கும் தொடர் பிறப்புகள் பலவற்றுக்கு மிடையே வினைப்பதிவு பெட்டகமாகத் தொடர்ந்து வரும் மாயத் துணைவன் தெய்வத்தையும், மனிதனையும் இணைத்துக் காட்டும் அறிவின் பேரின்பக் களம்.

## 74. தெளிந்தோர்

✪ தூலம் சூக்குமம் தெய்வம் இம்மூன்றும் தொடர்பு அறிந்தவர் தெளிந்த அறிவினர் - காலம் தூரம் வேகம் பருமன் நான்கின் கணக்கையும் உணர்வையும் அறிந்தோர் அன்னார்.

## 75. தேவதை

✤ உயர்ந்த மனிதனின் உடலிலிருந்து வெளியேறி உயிர் என்றால் எங்கே சேருகிறதோ அங்கேயும் உயர்வைக் கொடுக்கும். தீய எண்ணங்கள் - தீய செயல்கள் உள்ள உடலிலிருந்து வெளியேறி உயிர் என்றால் யாரிடம் போய்ச் சேர்ந்தாலும் அலைக்கழிக்கும். அவ்வாறு சேர்ந்தவர்களை அலைக்கழிப்பதைப் பிசாசு என்றும் - நன்மை செய்வதை தேவதை என்றும் சொல்கிறோம்.

## 76. தொழில்

➪ இயற்கை விளைவுகளை வாழ்வின் வளமாக்கும் எச்செயலும் தொழிலாகும்.

➪ விவசாயம், நெசவு, சமையல், இயந்திரங்களை விஞ்ஞானக் கருவிகள் இவற்றின் நுட்பங்கள் அறிந்து அவற்றை இயக்குதல், உற்பத்தி செய்தல் ஆகிய ஐந்து அடிப்படைத் தொழில்களையும், ஒவ்வொருவரும் இருபது வயதுக்குள்ளாகக் கற்றுக்கொள்ளவும், மேலும் யார் யாருக்கு எந்தெந்தத் தொழிலில், கலைகளில் விருப்பம் இருக்குமோ, அவைகளைக் கற்றுத் தேறவும், உலக மக்கள் வாழ்க்கைத் தேவைகளை அறிந்து அவரவர்களின் திறமை சக்திகளைப் பயன்படுத்திப் புதிய முறையில் மனிதகுல

வாழ்க்கையை இன்பமயமாக்கவும் தகுந்த முறையில் நாம் தொழில்கல்வி முறையை வகுக்க வேண்டும்.

- மனிதன் செல்வவளம் பெறுவதற்குத் தொழில்வளம் வேண்டும். ஏழைகளிடமிருந்து செல்வந்தர்கள் பறித்துண்ணாமலும் இருக்க வேண்டும்.
- தனக்கு வேண்டிய பொருளை ஈட்டிக் கொள்ளத்தக்க தொழில் அனைவருக்கும் கிடைக்க உத்திரவாதம் வேண்டும்.
- தொழில் தேடுகின்ற தனிமனிதனின் பொறுப்பையும், எப்படி வாழ்வோம் என்ற கவலையையும் நீக்க வேண்டும். பெற்ற குழந்தைகளை வளர்க்கின்ற பாரத்தையும் நீக்க வேண்டும்.
- ஒருவருடைய உடலின் இன்பம், பணம், பாசம் என்ற மூவகைக் குறிக்கோள்களைக் கொண்டு அவர் புரிகின்ற செயல் தொழில் எனப்படும்.

## 77. தொண்டு

- இன்முகத்தோடு எல்லோருக்கும் உதவி செய்வது தொண்டாகும்.
- வாழும் நிலையுணர்ந்து தொண்டாற்றி இன்பம் காண்போம்.
- இறைநிலையைப் போன்றே மனிதனும் பொது உடைமையாகி விடவேண்டும். இறைநிலைக்கும் சமுதாய மக்களில் பலதரப் பட்ட மனநிலைக்கும் இடையே அறிவின் ஒளிவிளக்கமாக இருந்துகொண்டு அருள் தொண்டனாக பேரின்ப ஊற்றாக மனிதன் திகழலாம். அதுதான் தொண்டு.
- கரு மையத்தில் பதிவு பெற்ற கறைகள் சீவகாந்தக் களத்தில் களங்கங்களை ஏற்படுத்துகின்றன. இவையே வினைப்பதிவுகள். வினைப்பதிவின் தன்மைதான் மனிதனின் மனவளம். அதாவது ஆளுமைப்பேறு, மனிதகுலத்தின் வினைப்பதிவைப் போக்கு வதுதான் பெரியோரின் தொண்டு.
- பேரறமே தொண்டு.
- இயற்கை நிலையினையும், எண்ணத்தின் நிலையினையும், இன்ப - துன்ப இயல்பினையும் அறிந்து, பேரறிவு எல்லையில் நிலைத்து, தான் - தனது என்று குறுகி நிற்கும் எல்லையைக் கடந்து தன்னை உலக மக்களின் வாழ்வில் நலத்திற்காகவே அர்ப்பணித்து எண்ணம், சொல், செயல் என்ற மூன்றுவித

ஆற்றல்களையும் பயன்படுத்துகின்ற பெருநோக்கச் செயல் தொண்டு மிகச் சிறப்பாகக் கருதப்படும்.

✪ தன்னலமின்றி தொண்டு செய். கேட்டதும், கேட்காததும் கட்டாயம் வந்தே தீரும்.

✪ ஒவ்வொருவருக்கும் அவரவர்கள் செய்த முன் வினையின் தொடர்பு இருக்கின்றது. அந்த வினைத் தொடர்பு வந்து வெளியாகும் காலத்தில் அது ஒரு துன்பத்தின் மூலம்தான் வெளியாகும்.

✪ பொறுமை, தியாகம், விட்டுக்கொடுத்தல் என்ற மூன்று நற்குணங் களோடு எழுந்த எழுச்சிதான் சமுதாயத் தொண்டு.

✪ இறைநிலையுணர்ந்து, செயல்விளைவுத் தத்துவத்தையுணர்ந்து, பேரறிவு எல்லையில் நிலைத்துத் தான், தனது என்று குறுகி நிற்கும் எல்லையைக் கடந்து, உலக மக்களின் வாழ்வின் நலத்திற்காகவே அர்ப்பணித்து, எண்ணம், சொல், செயல் என்ற மூவகை ஆற்றல்களையும் பயன்படுத்துகின்ற பெருநோக்குச் செயல்தான் தொண்டு எனப்படும்.

## 78. தொண்டு நிலையங்கள்

✵ உயர்ந்தோர்கள் ஒன்றுபட்டு தாழ்ந்தோர் தம்மை உயர்த்துவதே தொண்டு நிலையங்கள் நோக்கம்.

## 79. தேடலும் ஞானமும்

❀ நம்மிடம் உள்ள பொருளை மற்றவர்களுக்குக் கொடுக்கலாம். தேவையானவற்றை பிறர் தேவையறிந்து தேவையானவர் களுக்குக் கொடுக்கலாம். ஈதல் இசைபட வாழ்தல் மனித இயல் பாகும். ஞானத்தை மற்றவருக்கு வலியச் சென்று கொடுத்தல் துன்பத்தையே தரும். ஞானமும், கல்வியும் ஈனர்க்கு உரைத்திடில் துன்பத்தையே தரும்.

## 80. தேவை

✻ உடலியக்கத்தால் இயற்கையாக எழும் துன்பங்களைப் போக்கிக் கொள்ள உணவு, உடை, வீடு, வாழ்க்கைத்துணை இவைகள் ஒவ்வொருவருக்கும் தேவைப்படுகின்றன.

* தேவைகளைப் பெருக்கிக் கொண்டே செல்லக் கூடாது. பெருக்கினோமேயானால் அனுபோகத்திலேயே மனம் சென்று கொண்டிருக்கும். பழிச்செயல் புரிந்து, மேலும் மேலும் பிறவித் தொடர் நீளும்.

* தேவைகளை முடிந்தவரையில் சுருக்க வேண்டும். அப்போதுதான் வந்த வேலையை முடிக்க முடியும். வந்த வேலை எது முறையோடு தன்னை அறிந்து, அறிவில் முழுமையை அடைந்து, இறை நிலையை அடைவது, இதற்கு ஆசைகள் இடையூறாக உள்ளது. இடையூறான இந்த ஆசையை முதலில் ஒழுங்கு செய்தாக வேண்டும். நல்ல விருப்பங்களின் மேலும் உணர்ச்சி வேகப் பிடிப்பை மாற்றியாக வேண்டும்.

* துய்ப்பு (அனுபோகப்) பொருட்கள் குறையக் குறைய உடல்நலம் காக்கப்பெறும். இங்கொரு ஆலை அடுத்த ஊரில் ஒரு கம்பெனி, இன்னொரு ஊரில் உற்பத்திசாலை. அங்கே ஒரு விவசாயப் பண்ணை, நான்கு வீடுகள், இரண்டு எஸ்டேட்கள் என்றெல்லாம் சொத்துக்கள் பெருகாமல் பார்த்துக் கொண்டால் உடல்நலத்தோடு மனஅமைதியும் காக்கப்பெறும்.

* தன் உழைப்பால் வாழத் தெரியாதவர்களுக்கும், வாழ முடியாதவர்களுக்கும், வாழ வழியற்றவர்களுக்கும் தேவை இருக்கிறது. அந்தத் தேவையை முடிப்பதற்கு அவர்கள் எடுக்கின்ற முயற்சியில் குற்றம்தான் வளருமே தவிர நீதி வளராது.

* துன்பத்திலிருந்து விடுபட ஆன்மா ஒரு செயலையோ, பொருளையோ, சூழ்நிலையையோ நாடுகின்றது. இந்த நாட்டமே தேவையுணர்வாகும்.

* தூங்கும்போது தலையனை தேவைதான். அதற்காக அதனை எந்நேரமும் தலையில் கட்டிக்கொண்டிருப்பது இல்லையே. அதுபோல தேவைப்படும்போது தேவையான அளவில் மட்டும் பொருட்களின் மேல் எழும் ஆசையை ஏற்று நிறைவு செய்ய வேண்டியதுதான்.

* உடலுக்கு ஆகாரம் உழைப்பு வேண்டும். உள்அமைதிக்காக உற்சாகம் ஊட்ட, கடல் நதிகள், மலைகாடு, இயற்கைக் காட்சி கண்டுகளித்திட, உலகம் சுற்றும் வாய்ப்பும், நடனமுதல் களிப்பூட்டும் கலைகள் வேண்டும். நல்நினைவைப் பண் படுத்தும் தியானம் வேண்டும். விடவேண்டும் தேவையற்ற அனுபோகங்கள் விளையாது பெருகாது துன்பம் வாழ்வில்.

* உணவு - உடை - வீடு - பாலுறவு எல்லா உயிர்கட்கு பொதுத் தேவை உணர்வோம் துய்ப்போம்.

* நமது பொறுப்பிலும் - பராமரிப்பிலும் இருக்கும் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை எவ்வளவு முடியுமோ அவ்வளவு குறைவாக இருந்தால் அந்த அளவில் நமது சுதந்திரம் காக்கப் பெறும். அனுபோகப் பொருட்களால் மிகமிக அமைதி கெடும். பாதுகாக்கப்பட வேண்டிய குடும்ப உறுப்பினர்கள் எண்ணிக்கை மிக மிக சுதந்திரம் கெடும்.

## 81. தோல்வி

➢ அழகு மாறிக்கொண்டே இருக்கும். அன்பு ஊறிக்கொண்டே இருக்கும். தோல்வி ஜெயத்தில் முடியும்.

## 82. வசியம்

❖ பொறுமை, விட்டுக்கொடுத்தல், தியாகம் என்ற மூன்றையும் இடம், காலம், தொடர்பு கொள்ளும் மக்கள் இவற்றிற்கேற்ப பயன்படுத்தினால் உலகையே நீ உன் வசமாக்கிக் கொள்ளலாம்.

## 83. வடக்கு

▲ பூமியை சரிபாதியாகப் பிரித்தால் அதன் பூமத்திய ரேகையில் இருந்து வடக்குப் பகுதியில் கெட்டிப் பொருள் அதிகமாக இருக்கும். தெற்குப் பகுதியில் லேசான நீர்ப் பகுதி அதிகம். அதனால் காந்த ஈர்ப்புச் சக்தியின் திணிவு வடக்குப் பகுதியில் அதிகமாக இருக்கும்.

▲ வடக்கில் தலை வைத்துப் படுப்பதால் ஈர்ப்பு சக்தி காரணமாக உடல் முழுவதும் உள்ள சீவகாந்த சக்தி தலைப்பக்கமாக ஈர்க்கப் படும். அது நுண்மையான மூளைப் பகுதிக்கு நலனளிக்காது என்பதால் வடக்கில் தலை வைத்துப் படுக்கலாகாது என்கிறார்கள்.

## 84. வடிவம்

⁕ வடிவம் என்பது அமைப்பு, துல்லியம் என்பது இதுவரையில் இயங்கி வந்த தொடரில் நடைபெற்ற ஒரு சீர்மை. இயக்க ஒழுங்கு என்பது காலம்.

## 85. வறட்டு வேதாந்தம்

✪ எல்லாம் இறைநிலைதான், நானும் இறைநிலைதான் என்று சொல்லிக்கொண்டு அதை வாழ்க்கையில் பயன்படுத்தாவிட்டால் அதை வறட்டு வேதாந்தம் என்று கூறுவார்கள்.

## 86. வல்லமை

✤ வாழ்க்கையில் இடையிடையே ஏற்படும் சிக்கல்களைக் கண்டு மிரளாத அளவு அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். அவற்றைத் தீர்த்துக் கொள்ளும் வல்லமையையும் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

## 87. வல்லவர்கள்

➭ வல்லவர்களிடமிருந்து எளியவர்கள் விடுபட முடியாமல் பணிந்துபோக வேண்டியிருக்கிறதே!

## 88. வலி

✪ இரத்த ஓட்டம், வெப்ப ஓட்டம், காற்று ஓட்டம் இந்த மூன்றில் ஒன்று தடைப்பட்டாலோ, குறைவுபட்டாலோ அது ஜீவகாந்த சக்தியைத் தேக்கமுறச் செய்யும். வலி, நோய் உண்டாகும்.

## 89. வரி

✵ சில வரிகளினால் வருகின்ற தொகையில் ஒரு பெரும் பகுதி வரியை வசூல் செய்கின்ற நிர்வாகத்திற்கே செலவாகி வருகிறதெனில், அத்தகைய வரியை ரத்து செய்து, அதற்குப் பதிலாக வேறு முறையில் அந்தத் தொகையை ஈடுசெய்யவும் முயல வேண்டும்.

## 90. வருத்தம்

❀ **அந்தப் பரம்பொருள் பிரபஞ்சமாக, உலகமாக, மக்களாக, எனக்கு உரியவர்களாக, என்னுடைய அறிவாக இருந்துகொண்டு அவரவர் களுக்கும் வேண்டியதை எல்லாம் அளித்துக்கொண்டே இருக்கிற**

**போது, நான் எதற்காக 'இது இல்லை - அது இல்லை' என்று வருந்த வேண்டும்? ஏன் குறைப்பட்டுக் கொள்ள வேண்டும்?**

## 91. வறுமை

- அறியாமை, அலட்சியம், உணர்ச்சிவயம் மூன்று வகையிலும் அறிவு வறுமை நிலவுகிறது.
- துன்பத்தையே நினைப்பதும், குறைவையே நினைப்பதும் ஒரு ஏழ்மை அறிவினுடைய வறுமையேயாகும்.
- வறுமை எனும் கொடுந்துன்பம் வராது வளவாழ்வு பெறுவதற்கு ஓர் உலகப் பேரரசு வரவேண்டும்.
- கடன், கொள்ளை, பிச்சை என்ற முப்பிரிவுகளும் வறுமை என்பதிலிருந்தே தோன்றுகின்றன.
- திருடினால் தண்டனை விதிக்க நீதிமன்றங்களைத் தோற்றுவித்துக் கொண்ட சமுதாயம், திருட்டுக் காரணமான வறுமையைப் போக்கப் பல வழிகளிலும் முயற்சி எடுக்கத்தான் வேண்டும்.
- பொருட்களை பங்கீடு செய்ய முடியாததால் மக்களிடையே வறுமையும் துன்பமும் நீடித்து வருகிறது.

## 92. வர்மக்கலை

- வர்மக்கலை என்றால் என்ன? முரடர்களும் - மூடர்களும் தருகின்ற தொந்தரவிலிருந்து தாங்களைக் காத்துக் கொள்வதற்குச் சித்தர்கள் ஒரு ரகசியமான திறமையை வளர்த்துக் கொண்டார்கள். ஆயுதம் வைத்திருக்கும் எதிராளியிடமிருந்து, ஆயுதமே இல்லாமல் வெறுங்கையைக் கொண்டே தங்களைக் காத்துக் கொள்ளச் சித்தர்கள் உருவாக்கி வளர்த்துக் கொண்ட வித்தையே வர்மக்கலை.
- ஆரிய வர்மக் கலையைக் கொண்டு நோயைப் போக்கவும் முடியும். இந்தக் கலையில் ஒரு குறிப்பிட்ட வித்தையை பிரயோகித்தால் எதிரிக்கு உடனே ஒன்றும் ஆகாவிட்டாலும், சில நாட்களில் தானே இறந்து போவான். அவ்வளவு வீரியம் பொருந்தியது இந்த வர்மக்கலை. அதைச் சித்தர்கள் ரகசியமாகவே வைத்திருந்தனர். அதனால் அது தமிழகத்தில் அனேகமாக மறைந்தே விட்டது. இந்த வர்மக் கலையே கீழ்நாடுகளுக்குச் சென்று, கராத்தேயாக மாறி, நம் நாட்டிற்கு வந்திருக்கிறது.

## 93. வரதட்சணை

❖ திருமணம் நடப்பதிலே, லஞ்சம் என்பதை வேறு மாதிரியாகக் கையாண்டு வருகிறார்களே, வரதட்சணை என்று? அது அடியோடு ஒழிக்கப்பட வேண்டும். எவ்வளவோ சிரமப்பட்டு எவ்வளவோ செலவு செய்து, அன்போடு ஒரு பெண்ணை வளர்த்து வரு கிறார்கள். அந்தப் பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள விலை கேட்பது என்று சொன்னால் - அது ஆண்களை விலை கொடுத்து வாங்குவது ஆகாதோ?

❖ வரதட்சணைக்கு எதிராக ஓர் இயக்கமே வேண்டும். எங்கேயாவது வரதட்சணை என்ற பேச்சு இருக்குமானால், அந்த இடத்திற்குப் போய் சீர்திருத்தம் செய்ய வேண்டும். எத்தனையோ சீர்திருத்தம் சத்தியாக்கிரகம் எல்லாம் செய்கிறார்களே, ஏன் இதைச் செய்யக் கூடாது. அப்படி ஒரு இயக்கம் எதிர்காலத்திலே மாணவர் களுடைய இயக்கமாக மாற வேண்டும்.

## 94. வருங்காலம்

▲ வருங்காலம் உணர்தல் என்பது ஒரு வியப்பிற்கு உரிய செயல் அல்ல. இறையாற்றலினால் ஏற்படும் ஒரு சாதாரண நிகழ்ச்சியே. ஏனெனில் மனிதமனம் இறைநிலையை அடிப்படையாகக் கொண்டது. சமுதாயச் சூழலினால் அது கருத்துக்களாகவும், செயல்களாகவும் வந்துகொண்டிருக்கிறது.

▲ கடல் தண்ணீரை விட அழுக்குத் தண்ணீர் உலகில் வேறெதுவு மில்லை. ஏனென்றால் உலகம் தோன்றி இன்றுவரையில் வாழ்ந்த உயிர்கள் விட்ட எச்சமெல்லாம் அதாவது எல்லாருடைய கழிவுகளும் சேர்ந்ததுதான் கடல் நீர். கடலில் சேர்ந்த கழிவுகள் தான் கடல்நீர் உப்பாக இருப்பதற்குக் காரணம் ஆகும். சுத்தமான தண்ணீரை பூமியில் எங்குமே பார்க்க முடியாது. பெய்யும் இடத்தில்தான் பார்க்க முடியும். கடல் நீர் சூரியனால் ஆவியாக் கப்படுகிறது. ஆவி மேலே செல்கிறது. மேலே சுத்தம் செய்யப்பட்டு அது மழையாகப் பொழிகிறது. வருங்காலத்தில் விஞ்ஞானி களெல்லாம் சாட்டிலைட் மூலம் குழாயில் வடியவைத்து மழைநீரை பூமியில் விழுவதற்கு முன்பாகப் பிடித்து, பூமிக்குக் கொண்டுவந்து விடுவார்கள்.

## 95. வளமான வாழ்க்கை

- உணவு, உழைப்பு, உறக்கம், உடலுறவு, எண்ணம் ஆகிய ஐந்தில் அளவுமுறை ஆய்ந்து தேர்வீர்.
- வாங்கும் கடனும், தேங்கும் பணமும் வளர வளர வாழ்வைக் கெடுக்கும்.
- உடலுக்குக் கொடுக்கக்கூடிய உடற்பயிற்சியும், மனதிற்குக் கொடுக்கக்கூடிய தியானப் பயிற்சியும் இந்த இரண்டுமே உடலையும் உள்ளத்தையும் சுத்தப்படுத்தி, தூய்மைப்படுத்தி, மேன்மைப்படுத்தி மறுபடியும் மறுபடியும், மேலும்மேலும் நல்ல முறையிலே உபயோகித்து, வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ்வதற்கு உரிய வழிகளாகும்.
- செயல், ஒழுக்கம், சேவை, சிந்தனை, சீர்திருத்தம், சிக்கனம் இவை ஐந்தும் செழிப்பான வாழ்வளிக்கும்.
- வாழ்க்கையிலே மேம்பாடாக நற்றுணையாக மதிக்க வேண்டியது கணவனை மனைவியும் - மனைவியை கணவனுமே.

## 96. வஞ்சம்

- பொறுமைக்கு எல்லை வரையறை செய்தால் அது வஞ்சம்.
- சினம் ஒழிந்துவிட்டால் வஞ்சம் ஒழிந்துவிடும். நலம் தரும் முறையிலான ஆராய்ச்சி மிக்க தண்டனையோ, மன்னிப்போ அளித்துவிட்டால் வஞ்சம் என்னும் மனநோய் முறிந்துவிடும். நான் திருந்தி என்ன பயன்? அவர் திருந்த வேண்டாமா? என்று நினைக்காமல் முதலில் நம்மைத் திருத்திக் கொள்வோம். அடுத்தவர் தாமே திருந்தி விடுவார்.
- சினத்தை முடிக்க வலுவையும், வாய்ப்பையும் நாடி நிற்கும் ஆசை.
- ஆசைக்குத் தடை ஏற்பட்ட காரணத்தால், உள்ளத்தில் சினம் எழுந்தது. அந்தத் தடையைத் தண்டிக்கவோ அழித்துவிடவோ முடியவில்லை. 'காலம் வரட்டும் வலுவும் வாய்ப்பும் கிடைக்கும் போது அதைச் செய்து முடிப்பேன்' என்று நாள் தள்ளி வைத்துக்கொண்டு இருக்கிறபோது அதன் பெயர் 'வஞ்சம்'.

- ✪ வஞ்சம் என்றால் சினத்தை இருப்புக் கட்டி, அதை நிறை வேற்றுவதற்காகக் காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது. வஞ்சம் என்பது சினத்தின் மறு வடிவமே. இதுவும் ஆசையின் இன்னொரு மடிப்பு நிலையே.
- ✪ பொறுமைக்கு எல்லை உண்டு என்பது சுத்தத் தவறு. பொறுமைக்கு எல்லை வரையறை செய்தால் அதுதான் வஞ்சம்.

## 97. வங்கிகள்

- ✤ பூட்டுக்கு சாவி போன்று, வங்கிகள் நாட்டுக்குப் பொது சொத்தாய் மாற வேண்டும்.

## 98. வாதம்

- ➯ அடுத்தவரது வாதத்தை வெல்வது வெற்றியல்ல. அவரது மனதை வெல்வதுதான் வெற்றி.

## 99. வாய்மை

- ✪ தூய்மையாய் விளைவு தரும் சொற்கள் அனைத்துமே வாய்மையாம் அவை வாழ்வின் வளம் காத்து சிறப்பளிக்கும்.

## 100. வாழ்க வளமுடன்

- ✵ வாழ்க வளமுடன் என்பது ஒரு உன்னத மந்திரம்.
- ✵ எல்லோரையும் பார்த்து 'வாழ்க வளமுடன்' என்று சொல்லிப் பழகிக் கொண்டால், எதிரியாக யாரையும் நினைக்க முடியாது. இந்த உண்மை உணர்வு வருகிறபோது எல்லோருடைய உள்ளத்திலும் இறைநிலைதான் இருக்கிறது என விளங்கும்.
- ✵ 'வாழ்க வளமுடன்' என்ற வாழ்த்தைச் சொல்லிச் சொல்லியே மனவளக்கலைப் பயிற்சியில் ஈடுபட்டவர்களெல்லாம் எதிரிகள் எத்தனையோ பேரை நண்பர்களாக மாற்றிக் கொண்டிருக்கிறார். அந்த மாதிரி ஒரு பயனுள்ள வார்த்தைதான் இந்த 'வாழ்க வளமுடன்'. எளிய முறையில் எல்லோரும் உச்சரிக்கக்கூடிய வார்த்தை. ஆகையினால்தான் எங்கு பார்த்தாலும் ஆட்டோ

ரிக்ஷாக்களில், பஸ்களில் எல்லாம் போட்டிருக்கிறார்கள். வீடுகளில்கூட ஸ்டிக்கர் வைத்திருப்பார்கள். நாம் இதைப் பரவச் செய்ய வேண்டும்.

- எல்லாப் பேறுகளையும் உங்களுடைய வாழ்க்கையிலே பெற்று சிறப்பாக வாழ வேண்டும் என பிறரை 'வாழ்க வளமுடன்' என்று வாழ்த்துவது மிக உயர்ந்த பலனை அளிக்கும். வாழ்த்தும் பழக்கத்தினால் சினம் அடிக்கடி வருவதைத் தவிர்க்கலாம். பகைமையைத் தவிர்க்கலாம்.
- வாழ்த்தி வாழ்த்தி எப்பேர்ப்பட்டவர்களையும், நண்பர்களாக மாற்றி விட முடியும். அவர்களுடைய செயல்களைத் திருத்திவிட முடியும் எண்ணங்களை ஒழுங்குபடுத்தி நல்லவர்களாக மாற்றிவிட முடியும்.
- வாழ்த்தும்போது மனம் ஒரு நுண்ணிய நிலைக்கு அமைதி நிலைக்கு வருகிறது. அதனால் மனத்திற்கு வலுவும், தெளிவும் ஏற்படுகிறது. நம்முடைய வியாபகம் விரிந்து பலரோடு ஊடுருவி நிறைந்த உயிர்க்கலப்பு ஏற்படுகிறது.
- ஒரு செடியைப் பார்த்துக்கூட 'வாழ்க வளமுடன்' என்று வாழ்த்தும்போது அந்தச் செடியில் உள்ள பலவீனம் நீங்கி நன்கு வளரும்.
- வாழ்த்து வீண் ஆகாது. 'வாழ்க வளமுடன்' 'வாழ்க வளமுடன்' என்று சொல்லச் சொல்ல உடல் நன்றாக இருக்கும். மனம் நன்றாக இருக்கும். நம்மைச் சுற்றிலும் ஒரு நல்ல அலை இயக்கம் இருக்கும். நாம் போகுமிடமெல்லாம் நன்றாக இருக்கும்.
- வாழ்த்து எல்லா மந்திரங்கட்கும் மேலான திருமந்திரமாகும். ஒருவரை நாம் வாழ்த்தும்போது அந்த உயிருக்கும் நம் உயிருக்கும் ஒரு உயிர்த் தொடர்பு - சங்கிலித் தொடர்பு ஏற்பட்டு வாழ்த்து அதன் மூலம் பாய்ந்து வேலை செய்யும். ஒருவரை நாம் வாழ்த்தும் தகுதியைப் பெறுகிறோம். அந்த அளவுக்கு நமது பெருந்தன்மை தானே வளர்ச்சியடைகிறது. இந்த வாழ்த்து பேரறிவில் பதிவாகி அதன்மூலம் அடிமனதிற்கும் பரவி நாளாக நாளாக நட்புணர்ச்சி வளர உதவும். வெறுப்புணர்ச்சி தானே மறைந்துவிடும்.
- ***பிறந்த நாள் முதல் இன்றுவரை பிறர் நமக்கு நன்மை செய் திருக்கிறார் அல்லவா? அவர்களை ஒவ்வொருவராக நினைத்து அவருக்கு நன்றி தெரிவிப்போம். 'என்னுடைய இளவயதில் தாங்கள் எனக்குச் செய்த நன்மைக்கு உதவிக்கு நன்றி – வாழ்க வளமுடன்' என்று வாழ்த்து கூறுவோம்.***

- நாம் பிறருக்குத் தீமை செய்திருப்போமே, அந்த நபர்களை ஒவ்வொருவராக நினைத்து அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வோம். மௌனத்தில் மானசீகமாகக் கேட்போம். ‘இளவயதில், அல்லது அறியாமையில் நான் தவறு செய்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள். வாழ்க வளமுடன்’ என்று மனத்திற்குள் சொல்வோம்.

- பிறர் நமக்குத் தீமை செய்திருக்கிறார். அவர்களை ஒவ்வொரு வராக நினைத்து ‘உங்களை நான் மன்னித்து விட்டேன். வாழ்க வளமுடன்’ என்று அவர்களை வாழ்த்த வேண்டும். நமக்குத் தீமை செய்தவரை வாழ்த்த முதலில் மனம் வராது. அவர் அறியாமையில், அலட்சியத்தில், உணர்ச்சிமயக்கத்தில் செய்த தீமை என்று உணர்ந்து அவரை நாம் மன்னித்துவிட வேண்டியதுதான்.

- பிறர் நலமாக வாழ வேண்டும் என்ற கருத்தோடு எழும் ஒரு ஒலியே வாழ்த்து என்ற வார்த்தையாகும்.

- ஒற்றுமையின்றி பிணங்கி நிற்கும் ஒரு மகனைத் தந்தை தினசரி வாழ்த்திக் கொண்டே இருப்பாரானால் இருவருக்குமிடையே யுள்ள உயிர் தொடர் மூலம் அவ்வாழ்த்துப் பரவி மகனுடைய மூளையில் பதிந்து அவனைச் சிறுகச் சிறுகத் திருத்த தகப்பன் விருப்பப்படி நடக்கும்படி செய்துவிடும்.

- வாழ்த்தின் மூலம் தேவையான எல்லா நன்மைகளும் கிட்டும். ஆதலால்தான் கடவுளைக்கூட வாழ்த்தும் பக்தர்களையும் பக்திப் பாடல்களையும் நாம் பார்க்கிறோம். கடவுளை வாழ்த்துவதன் மூலம் எல்லோரையும் வாழ்த்தும் நற்பழக்கத்தை மனிதன் ஏற்படுத்திக் கொண்டான். இதனால் மனவளம் பெருகுவது நிச்சயம்.

- வாழ்க வளமுடன் என்று சொல்லும்போது பிறர் உள்ளத்திலே நமது கருத்து நல்லதொரு இனிய நட்புறவை வளர்க்கிறது.

## 101. வாழ்க்கை

- வாழ்க்கை என்பதே சிக்கல் நிறைந்த மனப்போராட்டமாகும். உடலும் உயிரும் சேர்ந்ததே ஒரு சிக்கல்தானே.

- இயந்திரங்கள் வாழ்வில் ஏற்றமே தந்துள்ளன வந்தன பணத்தினால் வாழ்க்கைத் தொல்லைகள்.

- ❀ உள்ளதை உணர்வோம். அல்லதை விடுவோம். நல்லதை செய்வோம். வளமுடன் வாழ்வோம்.
- ❀ மனம், இயற்கை, சமுதாயம் என்ற முக்கோணத்துக்குள்தான் மனிதன் வாழ்ந்தாக வேண்டும்.
- ❀ வாழ்வுக்கு ஆதரவும் வளமும் தரும் செயலை தாழ்வெனக் கொள்வது தருக்காகும்.
- ❀ உடல்நலம் அறிவின் உயர்வுமே பெருநிதி கடமையின் சிறப்பே களங்கமிலா வாழ்வு.
- ❀ சினம், கவலை, பேராசை இம்மூன்றும் வாழ்க்கைக்கு நன்மை தரும் வழிகளை அடைத்துவிடுகின்றது.
- ❀ வாங்கும் கடனும் தேங்கும் பணமும் வளர வளர வாழ்வைக் கெடுக்கும்.
- ❀ ஒவ்வொரு நொடியும் முழுமையாய் வாழுங்கள்.
- ❀ வாழ்க்கை சங்கீதம் இரண்டு கம்பிகளின் இன்னிசை. ஒன்று தொண்டு, மற்றொன்று அன்பு.
- ❀ இறைநிலையை உணர உணர வாழ்வினிக்கும். அறநெறியாய் வாழ்வதற்கு வழிவகுக்கும்.
- ❀ உடலுக்கும் உயிருக்கும் உறவு நீடித்தால் வாழ்க்கை என்கிறோம்.
- ❀ செயல் ஒழுக்கம், சேவை, சிந்தனை, சீர்திருத்தம், சிக்கனம் இவை ஐந்தும் செழிப்பான வாழ்வளிக்கும்.
- ❀ நல்லதையே செய்யச் செய்ய நல்ல எண்ணங்கள், நல்ல செயல்கள், நல்ல வாழ்க்கை வந்துவிடும்.
- ❀ **மனிதவாழ்க்கை என்பது இறைநிலையை நாடிய அறிவின் பயணம்.**
- ❀ நித் எது? அநித்தியம் எது? தேவை எது? தேவையற்றவை எவை? எந்த அளவு தேவை என்று திட்டவட்டமாக அறிந்து அதற்கேற்றபடி எண்ணம் - சொல் - செயல்களைப் பழக்கி ஒவ்வொருவரும் கடமையை உணர்ந்து செயலாற்றி வாழும் அக்காலத்தில் எல்லா வாழ்க்கை முறைகளும் சரியாக இருக்கும்.
- ❀ வாழ்க்கையைப் பற்றித் தெரிந்தவர்களாகவும், மற்றவர்களுக்கு உதவி செய்யக்கூடியவர்களாகவும் வயது வந்த மக்களையெல்லாம் மாற்ற வேண்டும்.

❀ விட்டுக்கொடுத்து மற்றவர்களுக்காக வாழ்கின்ற வாழ்க்கைதான் தன்னையும் வாழவைக்கும் பிறரையும் வாழ வைக்கும்.

❀ தெளிந்த அறிவும், அறிந்த தெளிவில் விழிப்போடு செயலாற்றும் பண்பாடும்தான் மனிதனை மனிதனாக வாழ வைக்கும் தகுதியுடையது.

❀ அறிவின் விழிப்புடன் பொருட்களோடும் மக்களோடும் அளவு மற்றும் முறையோடு உறவு கொள்வதும், அனுபோகிப்பதும் நெறியான, சிக்கலற்ற, துன்பம் விளையாத வாழ்வுக்கு இன்றி யமையாதனவாக இருக்கின்றன.

❀ மனிதவாழ்வு நிறைவு பெற, பொருள், புகழ், அதிகாரம், புலன் இன்பம் என்ற நான்கும் ஓரளவில் அவசியம்தான்.

❀ மனிதனுடைய மனதிலே ஒரு நிறைவு வேண்டும். அந்த நிறைவி லிருந்து எழக்கூடியதுதான் இன்பமான வாழ்வு என்பதாகும்.

## 102. வாழ்க்கைத்துணை

* வாழ்க்கை அனுபவத்தில் உயர்ந்த பெற்றோர் மூலமே ஓர் ஆணோ, பெண்ணோ தனது வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

## 103. வாழ்த்து

➢ வாழ்க வளமுடன் என்று வாழ்த்தும்போது அதிலிருந்து உண்டாகும் அலைகளுக்கு மோதுதல், பிரதிபலித்தல், சிதறுதல், ஊடுருவுதல், கிளம்பிய இடத்திற்கும் சேர்ந்த இடத்திற்கும் இடையில் ஊடாடுதல் என ஐவகை இயக்கம் ஏற்படுகிறது.

➢ வாழ்க வளமுடன் என்று சொல்லும்போது, இதிலுள்ள ஒவ்வொரு எழுத்துக்கும் ஒவ்வொரு சுரப்பியிலிருந்து அதிர்வலை எழு கின்றதால், உடல், உயிர் செல்களில் நல்ல மேல் பதிவு ஏற்படுவதால் சொல்பவருக்கு அமைதி, தேஜஸ் ஏற்படுகிறது.

➢ தவ முடிவில் வாழ்த்துவதால் முழுப் பயன் கிட்டுகிறது.

➢ வாழ்க்கைத் துணையை வாழ்த்துவதால் (மனைவியைக் கணவனும்-கணவனை மனைவியும் வாழ்த்துவதால்) நன்மக்கள் உருவாகவும் குடும்ப அமைதி ஏற்படவும் வழியாகிறது.

- மக்கள், உடன்பிறந்தோர், நண்பர்களை வாழ்த்தினால் நன்மக்கள்-சுற்றம் அமைகிறது.
- கடமையில் இணைந்தோரை வாழ்த்துவதால் நட்புநலம், தொழில்வளம் ஏற்படுகிறது.
- எதிரிகளை வாழ்த்துவதால் அவர்கள் திருந்தவும் மற்றவர்க்கும் நமக்கும் துன்பம் ஏற்படாமல் இருக்கவும் இருவழிகளில் பயனாகிறது.
- பிறர் நலமாக வாழ வேண்டும் என்ற கருத்தோடு எழும் ஒரு ஒலியே வாழ்த்து என்ற வார்த்தையாகும்.
- உலகநல வாழ்த்தினால், உலகத் தலைவர்களையெல்லாம் நினைத்து வாழ்த்துவதால் அவர்களும் இறையுணர்வு பெற வாய்ப்பிருக்கிறது.
- மழையை வாழ்த்தினால்... நாடு செழிக்கிறது.
- வாழ்க வையகம் என வாழ்த்துவதால் உலகிலுள்ள அனைத்து உயிர்களையும் வாழ்த்துகிறோம். சமுதாய வினைப் பதிவு நல்வினையாகிறது. பிரபஞ்ச காந்தக் களத்தினைத் தூய்மைப் படுத்துகிறோம்.
- பகைமையை வைத்துக்கொண்டு வாழ்த்த முடியாது. வாழ்த்தும் போது பகைமை நிற்காது.
- குழந்தைகளை நாள்தோறும் இரண்டு முறையேனும் வாழ்த்துங்கள்.
- மனவளக்கலை மன்ற உறுப்பினர்களாகிய இருபால் சிந்தனை யாளர்களும், அறிஞர்களும், உலகநலமும் அமைதியும் விழையும் சான்றோர் பெருமக்களும் நாள்தோறும் பத்துத் தடவையாகிலும் ‘வாழ்க வையகம் வாழ்க வளமுடன்’ என்று உலகம் முழுவதுக்கும் உங்கள் மனதை விரித்து உலக உயிர்கள்மீது அன்போடு கூறுங்கள்.
- வாழ்க வளமுடன் என்று சொல்லும்போது பிறர் உள்ளத்திலே நமது கருத்து நல்லதொரு இனிய நட்புறவை வளர்க்கிறது.
- உலக மனித சமுதாயம் போர், பகை, அச்சமின்றி, உழைத்துண்டு வளம் காத்து வாழ்வதற்காக ஒவ்வொருவரும் அமைதியான எண்ண அலைகளை உலகம் முழுவதும் பரப்ப வேண்டும்.
- மனித உடல் ஒரு சீவகாந்தக் களம். இந்தக் களத்திலிருந்து எழும் வாழ்த்து ஒலி வான்காந்தக் களமாகிய பேரியக்க மண்டலத்தில் செல்லும்போது வான்காந்தத்தின் முதற்பொருளாகிய இருப்பு நிலையால் அழுத்தப்பட்டு அந்த ஒலியின் ஓட்டத்தில் ஒரு விளைவு உண்டாகிறது.

- ஒரு உள்ளத்திலிருந்து வாழ்த்து எழும்போதே மனஅலையை நுண்ணியதாக்கி, ஆன்மீக உணர்வை உண்டாக்கி உடல் செல்களிலுள்ள களங்கங்களைப் போக்க வல்லது அன்போடு கூறும் வாழ்த்து.
- மனம் என்பது அலை. அந்த அலை குணநலம் பெறுகிறது. அதற்கு ஒரு தன்மையை ஊட்டுகிறீர்கள். என்ன தன்மை? அதுதான் வாழ்த்து.
- வாழ்த்தும் பழக்கத்தினால் சிலர் அடிக்கடி வருவதைத் தவிர்க்கலாம் பகையைத் தவிர்க்கலாம்.
- நீங்கள் வாழ்த்தும்போது, அமைதி நிலையில் இல்லாது வேக நிலையில் இருந்துகொண்டு வாழ்த்த முடியாது. அதனால் நீங்கள் யாரை வாழ்த்த எடுத்துக்கொண்டீர்களோ, அந்தத் துன்பம் தந்தவர் பேரில் இருந்த வெறுப்பு அகன்றுவிடும்.
- வாழ்த்து யாருக்கு, யாரை நோக்கிக் கூறப்பட்டதோ அவருக்குள் ஊடுருவிப் பாய்ந்து, வாழ்த்தொலியில் அடங்கியுள்ள குணநலத் தன்மையை அவருக்களித்துவிட்டு, போலாகி கடைசியில் அவ்வொலி எழுந்தவிடமே வந்து முடியும்போது, கரு மையத்தில் இணைந்து இருப்பாகி விடும். அதற்கேற்ப அறிவாட்சித் தரத்தில் உயர்வும், சிறப்பும் உண்டாகும். இது இயற்கைச் சட்டம். கூர்தலறம் எனப்படும் இறைநிலையின் ஒழுங்காற்றல்.
- வாழ்த்து என்பது மனித இன வாழ்வில் வளம் பெருக்கும் ஒரு தெய்வீக ஊற்று ஆகும்.

## 104. வாழ்க்கைத்துணை

- நாம் செய்த பாவம் - புண்ணியம் இரண்டையும் சீர்படுத்த இறைநிலையானது பாரபட்சமில்லாத நீதிபதிபோல் செயல் புரியுமிடத்தில் நமக்குத் துன்பங்கள் வரவேண்டுமானால் அதை அடுத்தவர்கள் மூலம்தான் கொடுக்கும். கிட்டவே இருக்கும் வகையில் அதிகமான இன்பத்தையோ, துன்பத்தையோ கணவன் அல்லது மனைவியின்றி வேறு யார் கொடுக்க முடியும்?
- ஒரு இறைவன், இன்னொரு இறைவனுக்குத் தன் வாழ்நாள் முழுவதும் துணைநின்று உதவ வந்தவர்தான் வாழ்க்கைத்துணை.

## 105. வாழ்க்கையின் வெற்றி

▲ பெற்றோருக்கு நல்மகளாக, அல்லது மகனாக, இல்லறத்தில் நல்ல கணவனாக அல்லது மனைவியாக பெற்று பிள்ளைகளுக்கு நல்ல தந்தையாக அல்லது தாயாக, உற்றார் உறவினர்களுக்கு நல்ல சுற்றமாக, ஊரார்க்கு உதவும் கரங்களாக வாழ்வது முக்தி. இந்த முக்தியை அடைந்த அளவே நமது வாழ்க்கையின் வெற்றி.

## 106. வாழ்வின் நோக்கம்

* எல்லா உயிர்களும் வாழ நினைக்கின்றன. மனிதனும் துன்பம் இல்லாத, இன்பம் நிறைந்த வாழ்க்கையையே வாழ நினைக்கின்றான். வாழ்க்கையையும் வாழ்க்கையின் நோக்கத்தையும் வாழும் முறை என்ன என்பதையும் அறிந்து வாழும்போதுதான் இன்பமாக வாழ முடியும்.

## 107. வாழ்வின் தத்துவம்

✪ வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைத் தத்துவங்கள் மொத்தம் பன்னிரெண்டாகும். அவை: தேவைகள் மூன்று, காப்புகள் மூன்று; அறநெறிகள் மூன்று; அறிவுநிலைப் படிகள் மூன்று.

✪ தேவைகள் மூன்று; 1. பசி - தாகம் ஆகியவற்றால் எழும் துன்பங்களை ஒட்டி ஏற்படும் தேவைகள்: 2. வெப்ப-தட்ப மாறுதலால் ஏற்படும் தேவைகள்; 3. உடல் கழிவுப் பொருட்களின் உந்து வேகத்தின் விளைவால் எழும் தேவைகள்.

✪ காப்புகள் மூன்று: 1. இயற்கைச் சீற்றத்திலிருந்து காப்பு; 2. வேற்றுயிர்ப் பகைமையிலிருந்து காப்பு; 3. தற்செயலான விபத்துக்களிலிருந்து காப்பு.

✪ அறநெறிகள் மூன்று அவை 1. ஒழுக்கம்; 2. கடமை; 3. ஈகை வாழ்வுக்கு ஆதாரமான அறநெறிகள்.

✪ செய்யும் செயலுக்குக் காரணமும் நோக்கமும் தெரியவில்லையானால் அது சடங்கு. காரணம், நோக்கம், தெரிந்தால் அது வாழ்க்கைநெறி.

✪ நாம் வாழும் முறை பிறருக்கு செய்தியாக இருக்க வேண்டும்.

## 108. வாழ்வுப் பயணம்

✤ உடல் எடுக்கப்பட்டதன் நோக்கம் அறிந்து, அறிவை உயர்த்தி, பரம்பொருளோடு இணைதல் வேண்டும். எனவே நாம் தொடரும் வாழ்வுப் பயணத்திற்கு வசதியும் பொருத்தமும் உள்ள ஊர்தியாக அமைந்துள்ள இந்த உடலைப் பழுதடையாமல் காத்து இயக்கி னால்தான் ஆன்மா தனது லட்சிய எல்லையைக் காலத்தோடு அடைய முடியும்.

## 109. வான்காந்தம்

▲ பேரியக்க களம் முழுவதும் சுத்தவெளியில் யோகான் அலை கரைந்த நிலையே வான்காந்தமாகும்.

▲ பரமாணுவின் சுழற்சி விரைவால் எழும் விரிவலை இருப்பு நிலையான சுத்தவெளியோடு இணைவதால் உண்டாகும் வான்காந்தம்.

▲ வான்காந்தத் தத்துவத்தைத் தெளிவாக ஒருவர் விளங்கிக் கொள்ள வேண்டும். அப்போதுதான், ஜீவகாந்தம் பற்றியும் சந்தேகம் இல்லாமல் புரிந்து கொள்ள முடியும்.

▲ ஆகாசத்துகள் அல்லது விண்துகள் என்று சுழலலையிலிருந்து வருகின்ற விரிவலை சுத்தவெளியோடு மோதும்போது தோன்றும் அடிப்படை சக்தி ‘வான்காந்தம்’. அதுவே திணிவு பெற்ற ஜீவன் களில் செயல்படும்போது அதை ‘ஜீவகாந்தம்’ என்கிறோம்.

▲ எப்படி கடல்நீர் கிணற்று நீருக்கு ஆதாரமாக இருக்கிறதோ, அதே போல் வான்காந்தமே ஜீவகாந்தத்திற்கு ஆதாரமாக இருக்கிறது. வான்காந்தம் பேரியக்க மண்டலம் முழுவதும் நிறைந்திருக்கின்றது.

▲ மனித உடலை அமைப்பதில் வான்காந்தம் காட்டியுள்ள கலை அழகையும், சிக்கலான வேலைப்பாட்டையும் எண்ணி எண்ணி வியந்திடலாம்.

▲ பிரபஞ்சம் முழுவதும் நிறைந்து விளங்குகிற வான்காந்த மானது, உயிரினத்திலே, ஜீவகாந்தம் என அழைக்கப்படுகிறது.

▲ உடல், தண்ணீர் உட்கொண்டு மூச்சுவாங்கி விட்டுக் கொண்டே யிருக்கும் உயிரினங்கள் அனைத்தும் வான்காந்தத்தை உள்வாங்கி உடலியக்கம், இன்பதுன்பம், யூகம் எனும் மனஇயக்கம் இவற்றை

முறையாக நடத்தி சீவகாந்தத்தை அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம், மனம் இவையாக மாற்றிக் கொண்டிருக்கின்றன.

▲ வான்காந்தத் தத்துவத்தை புரிந்துகொண்டால்தான் பரிணாம வளர்ச்சி பற்றிய உண்மையை அறிந்துகொள்ள முடியும்.

## 110. வானியல்

⁕ கோள்களின் உலவும் வேகமும், அதன் காந்த அலை தன்மைகளும் வானியல் ஆகும்.

⁕ கோள்களின் உலாவல் விரைவு, நில உலகுக்கும் ஒவ்வொரு கோளுக்கும் இடையே அமையும் தொலைவு - ஒரு கோளின் ஆற்றலோடு மற்ற கோளின் ஆற்றல் கலப்புற்ற பரவும் தன்மை - வானில் இயங்கும் நட்சத்திரக் கூட்டங்களின் காந்த ஆற்றலோடு கோள்களின் ஆற்றல் வைப்பதால் ஏற்படும் சூழ்நிலை மாற்றம் இவற்றின் கணிதஇயல்தான் வானியல்.

## 111. வானப்பிரஸ்தம்

✪ குடும்பம் நடத்திக் குழந்தைப் பேறெல்லாம் பெற்றபிறகு - ‘நாம் வந்த நோக்கம் என்ன? இல்லம்கொண்டு வாழ்கிறோம். இன்னும் அறிவறிந்து இறைவனை அடைய வேண்டும். இதற்காக ஆன்மாவை அறிய - தவம், யோகம் பயிலுவது அவசியம்’ என்றுணர்ந்து அதனைச் செய்வதற்கான காலம்தான் வானப் பிரஸ்தம் எனப்படும். வான் என்றால் விண் - உயிர்சக்தி அதாவது ஆன்மா. இதைப் பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டிருப்பது வானப்பிரஸ்தம்.

## 112. வித்து

✤ மரம் வளர்த்தால் வித்திடும் மரத்தினது தன்மையெல்லாம் வித்தில் உண்டு.

## 113. விதி

➬ விதை போட்டால் மரம் முளைக்கும் இது விதி. பலாவிதை போட்டால் பலாமரம் முளைக்கும் இது வினை. பலாக்கனி

விளைவு. விளைவை வேண்டி வினையைத் தேர்ந்தேடுக்கிறோம். அதுவும் ஒரு விதியை அனுசரித்தே தேர்ந்தெடுக்கிறோம்.

## 114. விதி மதி

✪ இயற்கை சக்தியே விதி. இதை அறிந்த அளவே மதி.

## 115. விடுதலை

✵ அகண்டாகாரத்திலிருந்து கலந்து நிற்கும்போது, எல்லைகட்டிய உணர்விலே தவித்துக் கொண்டிருக்கிறோமே, அதிலிருந்து விடுதலை உண்டாகும்.

## 116. விளைவு

❀ ஒவ்வொரு இயக்கத்திலும் ஒரு பயன் ஏற்படுவது விளைவு. சூரியன் தன்னியக்கம் - அதன் கதிர்கள் தொடரியக்கம் - பொருள் களில் உள்ள சூடு தூண்டப்பட்டு அவை ஆடடைதல் பிரதிபலிப் பியக்கம் - அந்த சூட்டினால் ஏற்படுகின்ற மாறுதல்கள் விளைவு.

## 117. விளங்காதது ஏன்?

✻ அமாவாசை கழிந்த மூன்றாம் நாள் சந்திரன் சிறு பிறையாகத் தோன்றும். அதை பலர் பார்ப்பார்கள். ஒரு சிலருக்கு உடனே தெரிந்துவிடும். இன்னும் சிலருக்கு நன்றாக உற்றுப் பார்த்த பின்பு தெரியும். மற்றும் சிலருக்கு, பார்த்தவர்கள் அடையாள மாக அதன் இடத்தை சுட்டிக் காட்டத் தெரிவதும் உண்டு. கடைசி வரையில் தெரிந்துகொள்ள முடியாதவர்களும் உண்டு. இது போன்று உள்நாட்டப் பயிற்சியிலும், தன்னையறியும் வகையிலும் பலதரப்பட்ட பேதநிலைகள் உண்டு.

## 118. விழிப்பு

➢ எப்போதும் விழிப்போடு சிந்தித்து ஆற்றும் செயல்களினால் முன்வினையின் தீமையும் தடுக்கப்படும். எதிர்காலமும் இனிமையாக இருக்கும்.

- ➢ இன்னும் வேண்டும், மேலும் வேண்டும் என்ற பேராசையை விடுத்து விழிப்போடு எண்ணம், சொல், செயல்களைப் பயன்படுத்துவோம்.

## 119. விந்துசக்தி

- ❖ மனிதனுடைய பிறப்பு, இறப்பு என்ற இரண்டு விந்துநாதத்தைச் சார்ந்துள்ளன. விந்துநாதம் கழித்த இடத்திலேதான் பிறப்பு உண்டாகிறது. அவ்வாறே விந்து கழிந்த இடத்திலேதான் மனிதன் இறக்கின்றான். உயிர், உடலையொட்டி இருந்தாலும் வித்துதான் உயிரைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. மனிதன் 120 ஆண்டுகள் உயிர் வாழக் கூடியவன். விந்துநாதம் உயிர்த் துகள்களைப் பிடித்து வைத்துள்ளது.
- ❖ பிறப்பு இறப்பும் வித்துக் கழிவினால் ஆம்.
- ❖ விந்து உற்பத்தி மூளையில்; மிகுதியானது தங்குமிடம் கரு மையம் எனும் உடல் மையத்தில்.
- ❖ விந்துவின் மூலம்தான் பிறவித்தொடர். இந்தத் தத்துவத்தை உணர்ந்தவரே தன்னையறிய வல்லவர்கள்.
- ❖ விந்துநாதம் இணைந்த நாள் முதற்கொண்டு உயிர்பிரியும் வரைக்கும், குழந்தைகளாக இருந்தாலும் - முதியவர்களாக இருந்தாலும் விந்தாவது மின் குறுக்கால் கொட்டிப் போனால், அதுதான் மரணம்.
- ❖ ஏழாவது தாதுவான விந்தின் உற்பத்தி இளவயதில் அதிகமாக இருக்கும். வயதானவர்களுக்குக் குறைவாக இருக்கும். ஆனால் உயிரைத் தாங்கும் அளவு இருக்கும். வயது முதிர்ச்சியில் விந்துவின் அளவும், அதற்குத் தகுந்தவாறு உயிர்ச்சக்தியின் அளவும் குறையும். அதனால்தான் முதுமையில் பலவீனம் ஏற்படுகிறது. உறுப்புகள் செயலிழக்கின்றன.

## 120. விதி விவேகம்

- ⁎ வேகமாய் இருப்பதை விதி என்போம். வேகத்தில் நுட்பமும் கூடியபின் விவேகம் என்போம்.

## 121. விபத்து

✪ பகைமை உணர்வினால் ஏற்படக்கூடிய சாபம் தீயவுளைவுகளை அடிக்கடி ஏற்படுத்தும். நோய்களை உண்ணுபண்ணும். பல தற்செயலான விபத்துக்களைப் பார்க்கிறோம். அந்த விபத்துக்களில் பல கணவன் மனைவி உறவில் பெற்ற சாபப்பதிவுகள்தான் காரணமாக அமைகின்றன. அந்தந்த இடத்தில் அவை செயல் பட்டு விபத்துக்களாக நடைபெறுகிறது.

## 122. வியாபாரி

✤ தண்டனைக்கு அகப்படாத குற்றவாளிகள் எவ்வளவு பேர் உலகில் இருக்கின்றார்கள்! வியாபாரி என்ற முத்திரையின் கீழே பகல் கொள்ளைக்காரர்கள் பலர் இல்லையா?

## 123. விழிப்புநிலை

➯ உணர்ச்சிகளில் மயங்காமல் வாழும் தெளிவுநிலையே விழிப்பு நிலை ஆகும்.

➯ எப்போதும் விழிப்போடும் சிந்தனையோடும் ஆற்றும் செயல் களினால் முன்வினையின் தீமைகள் தடுக்கப்படும். நல்லதையே ஒவ்வொரு செயலிலும் செய்துகொண்டே வந்தால் இறைவனுடைய ஆற்றலையே நாம் நம்மிடத்தில் காணக்கூடிய அளவுக்கு ஒரு விழிப்பு நிலை வந்துவிடுகிறது.

➯ மனதை விரித்து இறைநிலையோடு இருக்க விழிப்பு நிலையில் இருக்கப் பழகலாம்.

## 124. விலங்குகள்

✪ உயிர் வகையில் விலங்கினத்திற்கு உணவு உற்பத்தி செய்யத் தெரியாது. அதனால் ஒன்றையொன்று கொன்று தின்று வாழ்கின்றன.

## 125. விலங்கினச் செயல்

✵ இறைவனுடைய ஆற்றலை நாம் காணக்கூடிய அளவுக்கு ஒரு விழிப்புநிலை வந்துவிடுகிறது.

✵ மனிதனாக வாழ்ந்தது எத்தனை காலமோ, எத்தனை பிறவிகளோ, அதைவிட விலங்கினமாக வாழ்ந்த பிறவிகள்தான் அதிகம். அதனால் விலங்கினக் குணம் நம்மிடம் அதிகமாக இருக்கும்.

✵ விலங்கினத்தின் பறித்துண்ணும் செயல் இயல்பாக வந்து கொண்டிருக்கிறது. அவ்வளவும் கரு மையத்தில் பதிகிறது. இரண்டறிவுள்ள உயிரினம் முதல் ஐயறிவுள்ள விலங்கினம் வரையில் தொடர்ந்து வந்து இன்னும் மனிதனிடம் தொடர்ந்து வருகிறது. அந்த நாளிலிருந்து இந்தநாள் வரை எத்தனை கோடி தலைமுறையானாலும் சரி அந்தப் பதிவு விட்டு வராது. சூழ்நிலைக்கேற்ப எங்கெங்கே வாய்ப்பு கிடைக்கிறதோ அங்கெல்லாம் இந்த விலங்கினச் செயல் முதலில் வருகிறது.

## 126. வினைப்பதிவு

❀ மனதிலும் உடலிலும் நோய் தோன்றி பின் நிலைத்து இருப்பதே வினைப்பதிவாகும்.

❀ முன்னோர்கள் செய்த வினைப்பதிவு வித்தில் உண்டு.

❀ இதுவரையில் பல பிறவித் தொடராகச் சேர்க்கப்பட்டனவும், இப்பிறவியிலும் அதிகரிக்கப்பட்டனவும் ஆகிய வினைப் பதிவுகள் அனைத்தும் உடலில் நோயாகவும், மனதில் கவலை யாகவும் உள்ளன.

## 127. வினைத்தொடர்

✻ கொண்டுவந்தது வினைத்தொடர் தான் கொண்டு போகப் போவதும் வினைத்தொடர்தான் நல்வினையோடு வாழ்வோம்.

## 128. வினைகள்

➢ எப்போதும் விழிப்போடும் சிந்தனையோடும் ஆற்றும் செயல் களினால் முன்வினையின் தீமைகள் தடுக்கப்படும்.

## 129. வினைப்பயன்

❖ உண்மையை உணர முடியாமல் தடுப்பதுதான் வினைப்பயன்.

## 130. விஞ்ஞானம்

▲ விண் என்ற ஒரு அறிவை வைத்துக்கொண்டு அதிலிருந்து வளர்வது விஞ்ஞானம்.

▲ அணுவுக்கு மூலம் எது என்ற அடிப்படையை விட்டுவிட்டு அணுக்களின் கூட்டு சேர்க்கையால் ஆகியுள்ள பொருள் களினுடைய தன்மைகளை ஆராய்ந்து வாழ்வில் பயனாகக் கொள்வதற்கான வழிமுறைகளையும் அதற்குத் தகுந்த பல கருவிகளையும் கண்டுபிடித்துச் செயல்படுத்தும் ஒரு சிறந்த கலைதான் ''விஞ்ஞானம்'' ஆகும்.

▲ கண்ணால் பார்ப்பது, புலன்களால் உணர்வது, கருவிகளால் உணர்வது, காலம், தூரம், பருமன், வேகம் என்ற அளவைகளால் அறிவது எல்லாம் விஞ்ஞானம். விண் என்ற ஒரு அறிவை வைத்துக்கொண்டு அதிலிருந்து வளர்ப்பது விஞ்ஞானம்.

▲ தத்துவமும், விஞ்ஞானமும் வேறுவேறு அல்ல. விஞ்ஞானத்தைக் கொண்டும் தத்துவத்தை உணரலாம்.

▲ விண் என்ற நுண்துகளைப் பற்றிய அதிலிருந்து தொடங்கக்கூடிய அறிவை விண், ஞானம், விஞ்ஞானம் என்று சொல்கிறோம்.

## 131. விஞ்ஞானிகள்

✻ ஒட்டுமொத்த மனிதகுல மேன்மையையே தங்களது முதன்மை யான நோக்கமாகக் கொண்டால் பிறவியை நல்ல முறையிலே பயன்படுத்திக் கொண்டவர்களாக விஞ்ஞானிகள் திகழ்வார்கள்.

✻ அறிவின் ரகசியத்தை அறிந்து கொள்ளாமல் விஞ்ஞானம் அனுபோகப் பொருள்களையும், அழிவுக்கான பொருள்களையும் உற்பத்தி செய்துகொண்டிருக்குமானால் உலகம் அழிவுப் பாதைக்குச் செல்வதை இன்றைய விஞ்ஞானிகள் துரிதப் படுத்துபவர்களாவார்கள்.

✻ நமது மனவளக்கலையின் மூலம் எண்ணிறந்த மக்கள் மறை பொருள் விளக்கம் பெற்றுள்ளார்கள். அவர்களைப் போலவே விஞ்ஞானிகள் பலரும் மறைபொருள் விளக்கம் பெற முன்வர வேண்டும். அவர்கள் மூலமே அறிவு ஒளி உலகத்தில் பரவுவது எளிதாக இருக்கும்.

- மறைபொருள் விளக்கம் கொண்ட போதனைகள் மூலமும், நாம் ஆற்றிக்கொண்டு இருக்கிறோம். மனிதகுலத் தேவையையும் சங்கத்தின் நோக்கத்தையும் உணர்ந்து விஞ்ஞானிகளும் நம்மோடு ஒன்றுபட்டுத் தொண்டாற்ற வேண்டும்.

## 132. விருப்பம்

- விருப்பத்தை ஒழித்துவிட முயலவேண்டாம். வெறுப்பை ஒழித்தால் அதுவே மேன்மை நல்கும்.

## 133. விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

- விஞ்ஞானம் விளக்கைப் போன்றது. மெய்ஞானம் சூரியனைப் போன்றது.
- விஞ்ஞானத்தின் பயனாய் பொருள் பெருகும் அளவிற்கு விளைவறிந்து அளவுமுறை பிறழாது வாழ மெய்ஞ்ஞானம் மக்களிடை மேலோங்க வேண்டும். மிக இன்றியமையாத இதை முதலில் செய்வோம்.
- ஞாலத்தை அறிவது விஞ்ஞானம். மூலத்தை உணர்வது மெய்ஞ்ஞானம்.
- மனிதனுடைய அறிவு வளம் மேன்மை பெறுவதற்காக, அகத்தவத்தால் அறிவிற்கு ஞானியர்கள் வழங்கியுள்ள இயற்கைத் தத்துவமும், விண்ணியலார் பலர் தொடர்ந்து ஆய்ந்து கண் ஆக்கப்பூர்வமானவிஞ்ஞானமும் மிகப்பெரிய அளவில் துணையாக இருந்திருக்கின்றன. ஆதிகாலத்தில் மனிதனுடைய வாழ்க்கை முறைகளைக் கருத்தில்கொண்டு, இன்றுள்ள நிலைமையை ஒத்திட்டுப் பார்ப்போம். அப்படிப் பார்க்கிறபோது தத்துவமும் விஞ்ஞானமும், மனித இனத்தினுடைய வாழ்க்கை வளத்தை நாளுக்குநாள் உயர்த்துகிற வகையில் எல்லோரும் அதிசயிக்கின்ற வண்ணம் முன்னேறியிருக்கின்றன என்பது தெரியவரும்.

## 134. விண்

- விண் அல்லது உயிர்த்துகள் என்பது இறைத்துகள்களின் தொகுப்பு ஆகும். விண் என்ற உயிர்த்துகளும் தன்னைத்தானே சுற்றிக்

கொண்டிருக்கின்றது. உள்ளே இருந்து இறைத்துகள்கள் வெளியேறி காந்த அலையாக விரிவலையாக சுத்தவெளியில் கரைகிறது. சுடப்பொருட்களில் விண் என்றும் - உயிரினங்களில் உயிர்த்துகள் என்றும் பெயர். விண்ணின் வேகம் குறைந்தால் விண் என்பதை எலக்ட்ரான், புரோட்டான், நியூட்ரான் என்று வெவ்வேறு வேகத்திற்கு ஏற்ப பெயரிட்டு அழைக்கிறோம்.

- விண் என்பது சிறிய கடவுள்.
- ஆதியெனும் இருப்பு நிலை சுத்தவெளி. பரமாணு, இருப்பு நிலையின் தன்னடக்க ஆற்றலால் தானே தனக்குள் துண்டு பட்டு நுண்ணிய அளவில் தற்சுழல் அலையாக எழுச்சி பெற்று இயங்கும் விண்.
- விண் என்ற சுழற்சி எத்தனை வேகத்தில் சுற்றுக்கிறது என்பதை, இதுவரை யாரும் கண்டுபிடிக்கவில்லை. இனிமேலும் யாராலும் கண்டுபிடிக்கவும் முடியாது.
- மனம் காந்தத்திலிருந்து வருகிறது. காந்தம் விரிவலையிலிருந்து வருகிறது. விரிவலை விண்ணிலிருந்து வருகிறது. விண்ணோ வெளியிலிருந்து வருகிறது.
- அசையாத இருப்பு நிலையிலிருந்து எழுந்த சுழற்சி வேகம் விண்ணாகும்.

## 135. விண்துகள்

- துவக்கத்தில் விண்துகளானது தனது உச்சபட்ச வேகத்தில் சுழல்வதால், அதன் தள்ளும் ஆற்றல் மிகவும் அதிகமாயிருக்கும். அதன் காரணமாக, அது மற்ற துகள்களைத் தன் அருகே நெருங்கவிடாமல் சற்றுத் தொலைவிலேயே தள்ளி நிறுத்தும்.
- ஒவ்வொரு விண்துகளும் விரைவாகச் சுழலுகின்றபோது, இறைநிலையின் சூழ்ந்தழுத்தும் ஆற்றலால், அது கரைந்து உள்ளிருக்கின்ற இறைத்துகள் காந்த ஆற்றலைப் பெற்று, வெளியேறிக்கொண்டே இருக்கின்றன.
- விண்துகள்களின் சுழல் விரைவுக்கேற்ப எலக்ட்ரான், புரோட்டான், நியூட்ரான், கருத்துகளை (பிளாக்ஹோல்) என்று நான்கு வகையாக அவற்றைப் பிரிக்கிறோம்.

- ✪ பேரியக்க மண்டலத்தில் எத்தகைய அலைகள் இருந்தபோதிலும், அவை எல்லாம் விண்துகள்களின் கரைசலேயாகும். விண் துகளினுடைய சுழற்சியால் உருவாகிச் சக்திகளம் முழுவதும் பரவி நிற்கின்ற நிழல் அலைத்துகள்கள்தான் வான்காந்தத்துக்கு அடிப்படையாக அமைகின்றன.

## 136. விநாயகன்

- ✵ வினைக்கு நாயகன். தான் செய்யும் வினைகளுக்குத் தானே காரணகர்த்தாவாக இருத்தல்.
- ✵ ஐந்து கரத்தனை என்பது நிலம், நீர், காற்று, நெருப்பு, விண் ஆகிய பஞ்சபூதங்கள்.

## 137. வீட்டோ பவர்

- ❀ திருடனிடத்தில் சாவி - ஐந்து நாடுகளிடத்தில் வீட்டோ பவர்.

## 138. வீடுபேறு

- ✻ முட்டைக்குள்ளிருக்கும் கரு வளர்ந்தால் மூடிய ஓடு உடைந்து குஞ்சு வெளிவந்து இன்பம் துய்ப்பதுபோல், அறம் செய்து தூய்மை பெற்றால், வினை, புலன்மயக்கம் நீங்கும். வீடுபேறு எனும் இன்பம் கிட்டும்.
- ✻ மனிதனிடம் ஏற்பட்டுள்ள களங்கங்கள் பாவப் பதிவுகள் நீங்கினால்தான் உயிருக்கு வீடுபேறு.
- ✻ இரண்டுக்கும் ஒரே வழிதான். வாழ்க்கையில் வெற்றி அடைந்தால் வீடுபேறு தானே வரும். முதலில் எண்ணத்தை எந்த வகையில் வைத்துக் கொள்கிறோம் என்பதைப் பொறுத்தே வாழ்வின் வெற்றி அமையும். எண்ணத்தை விழிப்பு நிலையில் வைத்திருந்தால்தான் வாழ்வில் வெற்றி கிடைக்கும். விழிப்புநிலை வீடுபேற்றையும் தரவல்லது.

## 139. வெட்டவெளி

- ➢ வெட்டவெளி என்ற தத்துவமே அனைத்திற்கும் ஆதாரமாகவும், மூலசக்தியாகவும் உள்ள சர்வ வல்லமையும் உடைய ஒரு உறுதிப்

பொருள் என்றும், அதுவே ஆதியாகவும் அனாதியாகவும் உள்ள பூரணப் பொருள் எனவும் திடமாகக் கூறுகிறேன்.

## 140. வெளி

❖ புள்ளியே எழுத்துக்களுக்கெல்லாம் பூத ஐந்துக்கும் மூலம் வெளி.

## 141. வெற்றி

▲ அடுத்தவரது வாதத்தை வெல்வது வெற்றியல்ல. அவர் மனத்தை வெல்வதுதான் உண்மையான வெற்றி.

▲ தனக்கும் துன்பமில்லாது பிறருக்கும் துன்பம் விளைவிக்காத வாழ்க்கையில், நமக்கு என்னென்ன தேவையோ, அப்படிப்பட்ட சூழ்நிலை தானாகவே அமையும். இதற்காகக் கெஞ்சிக் கேட்டு ஒன்றும் நாம் பெறவேண்டியதே இல்லை. எந்த இடத்திலே, எந்தக் காலத்திலே, எந்த நோக்கத்தோடு, எந்தச் செயலை நீ எவ்வளவு திறமையாகச் செய்கிறாயோ அதற்குத் தகுந்தவாறே உனக்கு விளைவும் வரும். வெற்றியும் வரும்.

▲ ஒருவர் வெற்றியை எல்லோரும் கொண்டாட வேண்டும். வாழத்துக்களைப் பரிமாற வேண்டும்.

## 142. வெறுப்பு

⁎ விருப்பத்தை ஒழித்துவிட முயலவேண்டாம். வெறுப்பை ஒழித்தால் அதுவே மேன்மை நல்கும்.

⁎ விருப்பமே சீவனது இயக்கச் சான்று. வெறுப்பு அறிவின் குறையை விளக்கும் ஆடி.

⁎ மனவளக்கலையில் ஒருவருக்கு வெறுப்புணர்ச்சி ஏற்பட வாய்ப்பே இல்லை. எடுக்க எடுக்கக் குறையாத இன்பச் சுரங்கமன்றோ மனவளக்கலை. ஆனால் எடுக்க வேண்டுமே! அதற்குரிய மனஉயர்வும் செயல் திறமுமே கர்மயோகம்.

## 143. வேதம்

✪ இந்திய நாட்டின் பஸ்ட் மேனுவல் (FIRST MANUAL) வேதம்தான்.

- இயற்கையே ஈஸ்வரனாய் எல்லாமாய்த் தானுமாய் - இருக்கும் நிலை இயங்குநிலை இவற்றைத் தன் அகநோக்குப் பயிற்சியினால் உள்ளுணர்ந்தோர் பரந்த நிலைப் பேரறிவில் பாடும் பேசும் எழுதும் பல கருத்தும் வேதமாம்.
- இயற்கை அமைப்பினை நிகழ்ச்சிகளை முறையாய் எடுத்து விளக்கிடும் தொகுப்பதுவே வேதம்.
- அறநெறிகளைப் போதிக்கும் நூல் இயற்கை அமைப்பைக் கூறுமிடத்து வேதம் ஆகவும் மதிக்கப் பெறுகின்றது.
- ஓதிக்கொண்டிருப்பதற்காக வேதம் தோற்றுவிக்கப்பட வில்லை. அதன் உட்கருத்தை உணர்ந்து ஒழுகுவதற்காகவே வகுக்கப்பட்டது.

## 144. வேகம்

- வேகம் என்பது மூன்று. மனவேகம், உயிர் வேகம், உடல் வேகம். இந்த மூன்றுக்கும் ஓர் இணக்கம் வேண்டும். அவ்விணக்கம் இல்லை என்றால் நோய் வரும். எண்ணங்களில் குளறுபடி வரும்.

## 145. வேதாந்தம்

- வேதாந்தம் பேசுவதால் கிட்டிடாது.
- நிலம், நீர், அனல், காற்று, அணு, வெளி என்ற ஆறு தத்துவங் களையும் உடல் - உணவு - அறிவு இவற்றையும் முறைப்படுத்தி எழுதிய விளக்கம் வேதாந்தம்.

## 146. வேதாந்தமும் சித்தாந்தமும்

- வேதாந்தி சித்தாந்தியானாலன்றி வீடுபேறு கிட்டாது வெற்றுப் பேச்சால் வாதாடி வாழ்நாளைக் கழிப்பதல்லால் வந்துலகில் பிறந்த பயன் வழுக்கிப் போகும்.
- உயிர் உயர்வு பெறாமல் பிரம்மத்தை உணர்வது வேதாந்தம். உயிர் உணர்வு பெற்று பிரம்மத்தை அறிவது சித்தாந்தம்.

## 147. வேதமும் சாஸ்திரமும்

✵ இன்ப துன்ப விளைவுகளால் மனித இனத் தொடர்பால் ஏற்பட்ட திறமைகளின் தொகுப்பு சாஸ்திரமாம்.

## 148. வேண்டுதல்

❀ எப்பொழுது, எது தேவையோ, அப்பொழுது அதைக் கொடு இறைவா.

## 149. வேண்டாமை

✻ கேப்டலிஸம் கம்யூனிசம் சோஸலிஸம் வேண்டாம். கெடுமதியால் லஞ்சம் வாங்கும் ஆட்சியாளர் வேண்டாம். ஓட்டுக்காகக் காசு வாங்கும் கொடுக்கும் ஆட்சி வேண்டாம். உழைப்போரை நசுக்கும் சர்வ அதிகாரம் வேண்டாம். நாட்டுநலம் காத்து சுயநலம் பேணி வாழும் நல்ல கல்வி ஆட்சிமுறை வகுத்திடுதல் வேண்டாம். பாட்டுக்களில் கூத்துக்களில் கற்பொழுக்கம் காப்போம். பரந்த அறிவில் உழைப்பைப் பங்கு போட்டுக் கொள்வோம்.

## 150. வேலைவாய்ப்பு

➢ படிப்படியாக வேலை நேரத்தைக் குறைத்து அதன் மூலம்தான் வேலைவாய்ப்பைப் பங்கிட முடியும்.

## 151. வேற்றுமை

❖ ஒற்றுமைக்கு எல்லையுண்டு என்று சொன்னால் வேற்றுமைக்கு வித்தன்றோ! ஆய்ந்து தேர்வீர்.

## 152. வைசியர்கள்

▲ உற்பத்தியான பொருட்களை இடமாற்றி வைக்கக் கூடியவர்களை வைசியர்கள் என்று சொன்னார்கள்.

## 153. நட்பு

- ⁕ தன்முனைப்பு, பேராசை, பிறர்வளம் பறித்தல், பிறர் தேவையும், உணர்வும் அறியாமல் அல்லது மதியாமல் சுயநல உணர்வோடு குறுகிய மனநிலையில் செயல்படுதல், நன்றியுணர்வு இளமை இவைதான் ஒருவர் வாழும் சூழ்நிலை அல்லது சமுதாயத்தில் உள்ள மக்களோடு அல்லது உறவினரோடு நட்பு கெடுவதற்குக் காரணம்.
- ⁕ கணவன் மனைவி நட்பு உலகிலேயே மதிப்புமிக்கது.
- ⁕ நட்புக்கோர் நோக்கமுண்டு நாடுபவர் தரம் ஒக்கும். கட்புலனுக் கெட்டாது. கருத்தை ஊன்றிக் காண்பீர்! உட்பகையைச் சுயநலத்தை உள்வைத்தும் நடிப்பார்கள். நுட்பமுடன் ஆராய்ந்து நோதல் தவிர்த்தே வாழ்வோம்.
- ⁕ நட்பு எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த அளவுக்கு வாழ்க்கையில் வெற்றியும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். மாறாக வெறுப் புணர்ச்சியை மனதில் வைத்துக் கொண்டிருந்தால் அது விரயம் தானே தவிர நன்மை இல்லை.
- ⁕ குடும்ப உறுப்பினர் அனைவருக்குள்ளும் உறுதியான நெருக்கமான, உண்மையான இனிய நட்பு நிலை வேண்டும்.
- ⁕ எல்லோரும் ஒன்றுதான் அவர்களுக்கு நலமேதான் செய்ய வேண்டும். யாருக்கும் தீமை செய்யக் கூடாது என்ற அன்பும் பண்பும் உண்டாவதுதான் நட்பு. உடல்நலம், மனநலம், நட்புநலம் இந்த மூன்றும் இருந்தால்தான் மனிதன் மனிதனாக வாழ முடியும்.

## 154. நல்வழி

- ✪ மனத்தின் குறைகளைப் போக்கியாக வேண்டும். நல்வழியில் தீர்மானமாக நிற்கும் சுயபலத்தை மனத்திற்கு ஊட்டியாக வேண்டும். அதை யார் செய்வது? மனம்தான் தனக்குத் தானே வைத்தியம் செய்துகொள்ள வேண்டும்.

## 155. நவக்கிரக தவம்

- ✤ சூரியன், புதன், வெள்ளி, சந்திரன், செவ்வாய், வியாழன், சனி, இராகு, கேது ஆகிய ஒன்பது கோள்களின்மீது மனத்தைச் செலுத்தி தவம் செய்வதே நவக்கிரக தவம்.

✤ நவக்கிரகத் தவத்தினால் நவக்கிரகங்களிலிருந்து வரும் காந்த அலைக்கதிர் வீச்சுகளினால் விளையும் தீமைகளைப் பெரும் பாலும் குறைத்துக் கொள்ளவும் தடுத்துக் கொள்ளவும் முடிகிறது.

✤ கிரகங்களின் மேல் மனம் வைத்துத் தவம் செய்யும்போது வாழ்க்கையில் புகழ், நீடித்த ஆயுள், வெற்றி, செல்வம், கல்வி, மகிழ்ச்சி, நல்ல மனைவி, அழகு, உடல்நலம், மனநலம், நட்பு பெற்றோர்களின் அன்பு, புதியன கண்டுபிடித்தல், எதிரிகளிடமிருந்து பாதுகாப்பு, அறிவு மேன்மை, மெய்ஞ்ஞானம், உலகம் சுற்றும் வாய்ப்பு ஆகியவற்றை அளிக்கிறது.

✤ நவக்கிரகத் தவத்தினால் மனத்தின் விரியும் தன்மை உச்சநிலையை அடைகின்றது. உயிர்க் கலப்பு பெறுகிறது. அன்பும் கருணையும் இயல்பாக மேலோங்குகின்றன. உயிரின் களங்கங்கள் நீங்கி உள்ளொளி பொங்குகின்றது. வாழ்வு இனிமையாகப் பயன் மிக்கதாக மலர்கிறது. மனத்திற்கும் தூய்மையும் பெருமளவில் கிடைக்கின்றது. மனவளம் மிகுதியாகப் பெருகி, ஆன்மிக வளர்ச்சி மிகுதி பெறுகின்றது.

## 156. நற்றொண்டு

➪ தனிமனிதன் சொத்துரிமையின் கீழ் வாழும் மக்கள் தங்கள் பொருள்- வருவாய் அல்லது அறிவு உடல் ஆற்றல்கள் இவற்றில் நூறில் ஒரு பங்காகிலும் சமுதாய நலனுக்கென ஒதுக்கி பயன்படுத்துவது சமுதாயத்தைச் சிறப்பிக்கச் செய்யும் நற்றொண்டு ஆகும்.

## 157. நன்றி

✪ மனம் வருந்தச் செய்து அவர்கள் கருமைய ஆற்றலிலிருந்து புறப்பட்ட எரிவு அலைகள் தாக்கிப் பதிவாகி அவ்வப்போது துன்பங்களை விளைவித்து வரும். இதையுணர்ந்து குடும்ப உறுப்பினர்கள், சுற்றத்தார், நண்பர்கள், எவர் தொடர்பினால் இருந்தாலும் அவர்களிடம் மன்னிப்பு கேட்டும் அவர்களுக்கு நன்றி கூறி மகிழ்ச்சியூட்டியும் இவற்றைச் சீர்செய்யலாம்.

## 158. நண்பர்கள்

✵ வஞ்சகர் எதிரிகளாய் வந்துவிட்டால் வியப்பில்லை. நண்பர்கள் வஞ்சகராய் வளர்ந்தால்தான் பெருந்தொல்லை.

## 159. நாகரிகம்

❀ எண்ணம் - சொல் - செயல் மூன்றும் ஒன்றுபட்டால்தான் அறிவு பூரணம் அடையும் அதுதான் நாகரிகம். இதைத்தான் திருவள்ளுவரும் நெஞ்சம், மனம், பேச்சு இவற்றிற்கிடையே முரணில்லாது இருப்பதுதான் நாகரிகம்.

## 160. நாட்டுப்பற்று

✻ இந்த உலகம் பல நாடுகளாகப் பிளக்கப்பட்டுள்ளது. நாட்டுப்பற்று என்ற விலங்கு இந்த உலகத்தின் அறிவிற்குக் காரணமாயிருக்கிறது.

## 161. நார்மடி

➢ முதன்முதலில் துணி உடுத்தியவர்கள் பெண்கள்தான். மாதவிடாயை மூடுவதற்காக இலைகளையும், தழைகளையும் கட்டிக் கொண்டார்கள். பிறகு நாரை எடுத்து உடுத்திக் கொண்டார்கள். அதுவே நார்மடி என்று வந்தது.

## 162. நாராயணன்

❖ இறைநிலையே விண்ணாகிக் காற்றாகி, நெருப்பாகி, நீராகியது. பரிணாமத்தில் நீர் ஒரு முக்கியமான பொருள். நீரே கெட்டிப் பொருளாகவும் ஆனது. உயிரினங்களிலே நீரே அதிகம். இந்தக் கருத்தில் பரிணாமத்தில் நீருக்கு ஒரு முக்கியத்துவம் இருப்பதை உணர்ந்த பெரியவர்கள் இறைவன் நீரில் உறைகிறான் என்றார்கள். இதுவே நாராயணன் வந்த கதை. நாரம் என்றால் நீர். அயனம் என்றால் மாற்றம். அவ்வளவுதான். நாரம் + அயனம் = நாராயணம். நீரினது மாற்றமே உயிரினங்கள். மனித உரு தொடங்க வந்தபோது நாராயணம் நாராயணன் ஆனது.

## 163. நாமம்

▲ நாம் + அம் என்பது நாமம் ஆயிற்று. பிரணவப் பொருளாக உள்ளதுதான் அம். அதைக் கண்டுகொண்டோம். நாம் அம் ஆனோம். அதுதான் நாமம். நெற்றியில் இரண்டு நரம்புகள் சிலருக்கு வெளிப்படையாகவே தெரியும். அவற்றில் குளிர்காற்று பட்டால் உடல்நலம் கெடும். அதை உணர்ந்து அந்த நரம்பு களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக நாமக் கட்டியை இழைத்துப் போட்டுக் கொண்டார்கள். மனதை மேலே கொண்டு போகச் சிகப்புப் பொடியால் மேல் நோக்கித் துரியம் வரை இழுத்து விட்டார்கள். இந்தச் செயல் அகக்கண்ணுக்கு, புறக்கண்ணுக்கு ஏற்றவாறு சடங்காக ஆனது இன்றைய 'நாமம்'.

## 164. நான் யார்?

⁕ நான் யார்? என்பதற்கு விடை கிடைத்தால் தெய்வநிலை அறியலாம். மெய்ப்பொருள் உணரலாம். அறிவு என்ன என்பது உணரப்படும்.

⁕ நான் யார்? எங்கிருந்து வந்தேன்? எங்கே போக வேண்டும்? என்பதையெல்லாம் தெரிந்துகொள்வதற்குத் தன்னிலை விளக்கம் அல்லது தெய்வநிலை விளக்கம் என்ற பொருளைப் பற்றி ஆராய்ச்சி செய்வதே 'நான் யார்?' என்ற பயிற்சியாகும் சுத்தவெளி என்ற இறையாற்றலே நானாக இருக்கிறது என்று உணர்வதுதான் நான் யார்? என்ற பயிற்சி.

⁕ இறைவனே நான் ஆக இருக்கிறான் என்ற உண்மையைத் தெளிவாக உணர்ந்த நிலையிலே தன்முனைப்பு எழவே எழாது. அந்நிலையில் சிறிய நான் அற்றுப் போகும்.

⁕ நான் யார்? என்று கேட்கும்போது என்னை இந்த உலகிற்கு அனுப்பியவர் யார்? இந்த உலகத்தை நிர்வகித்துக்கொண்டு இருப்பது யார்? நான் எங்கிருந்து வந்தேன்? எங்கு போக வேண்டும்? அது எப்பேர்ப்பட்ட இடம்? என்றெல்லாம் எண்ணி அந்த எண்ணத்திலே, ஒரு எல்லை காண, ஒரு எல்லை வகுத்துக் கொள்ளக்கூடிய கேள்விதான் நான் யார்? என்பது. நான் யார்? என்பது இரண்டே வார்த்தைகள்தான். அதை மாத்திரம் புரிந்து கொண்டு விட்டால் இந்தப் பிரபஞ்சத்தின் ரகசியம் அவ்வளவும் விளங்கிவிடும்.

- ⁕ உன்னை அறிந்து கொள்ளாமல் கடவுளைப் பற்றி அறிய ஆவல் கொள்வது கடைக்கால் இல்லாமல் கட்டடம் எழுப்ப முனைவது போலாகும்.
- ⁕ உன்னை யார் என தெரிந்துகொள்ள வேண்டுமாயின், அதற்கு எந்தக் கருவியும் பயன்படாது. நீ உன் உள் ஒடுங்கித்தான் பார்த்தாக வேண்டும். இப்பயிற்சியே பகுத்தறிவோடு தொகுத்துணர்வு.
- ⁕ உலகில் மனிதர்கள், தெய்வம், மனிதன், விதி, மதி, பிறப்பு, இறப்பு, ஞானம் என்ற வார்த்தைகளின் அர்த்தமும் தத்துவமும் அறிந்துகொள்ள வேண்டுமென்றால், எங்கும் எல்லாவற்றிலும் நிறைந்து இயங்கும் பேராதார சக்தியை (எட்டர்னல் பவர்) பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டியது அவசியமாகும். இந்த ஒரு சக்தியின் தன்மையை அறியும் இடத்தில் அதுவே 'நான்' எனக் கண்டு, தனிமனிதனுக்கு எழும் சந்தேகங்கள் அனைத்தையும் முடித்துக் கொள்வான். அவ்விடத்தில் அன்பு, கருணை, ஒடுக்கம், கடமை, பற்றற்றநிலை அனைத்தும் ஏற்படும்.

## 165. நிகழ்காலம்

- ✪ வருங்காலத்தைக் கடந்த காலமாக மாற்றுகிற இயந்திரம் நிகழ்காலம்.

## 166. நிலையாமை

- ✤ எவரும் எதுவும் பிறக்கும்போது கொண்டு வந்ததில்லை. இறக்கும் போது கொண்டு போவதுமில்லை.

## 167. நிறைமனம்

- ➭ ஆசையை ஒழுங்குபடுத்தினால் அதற்குப் பெயர் நிறைமனம். பொருட்கள் எண்ணிக்கையும் ஆசைகளின் எண்ணிக்கையும் குறைந்து, தன்னிடம் இருப்பவைகளே வாழ்க்கைக்குப் போதும் என்ற அளவில் மனம் மகிழ்ச்சியடையும்போது அது நிறைமனம் ஆகிறது. பேராசை நிறைமனமாக மாற்றம் பெறுகிறது. வாழ்வில் நிம்மதி வருகிறது. அமைதி உண்டாகிறது.
- ➭ ஆசை முறைகெட்டுப் போனால் பேராசை. முறைப்படுத்தப்பட்ட ஆசை நிறைமனம்.

## 168. நியதி

✪ ஒரு ரோஜா பதியன் வைக்கிறோம். அந்த ரோஜா பூதான் பூக்கிறது. எந்த நியதிக்குக் கீழ் இத்தகு இயக்கம் தடுமாற்ற மில்லாமல் நடைபெறுகிறதோ, அந்த நியதியை அறிந்து மதித்துப் பயன் கொள்ள வேண்டும்.

## 169. நிழல் விண்

✵ விண்ணைப் போலவே இன்னொரு விண் உற்பத்தியாகிறது. அதுதான் தத்துவ ஞானிகளையும் விஞ்ஞானிகளையும் இது வரைக்கும் ஏமாற்றிக் கொண்டே இருக்கிறது. அதற்குப் பெயர்தான் நிழல் விண்.

## 170. நினைத்தலும் – மறத்தலும்

❀ மனிதன், தனக்கு ஒருவர் வாழ்நாள் முழுதும் செய்த நன்மை களை மறதியில் வைத்திருப்பான். ஆனால் தனக்கு இழைக்கப் பட்ட சிறு தீமை அல்லது அவமதிப்பு என்று அவன் கருதுவதை என்றும் நினைவில் வைத்திருக்கும் பண்பற்ற பண்பே நட்பு நலத்தைக் கெடுப்பது. அமைதி நிலையில் சிந்தித்து, நன்மை களை நினைவிலும், தீமைகளை மறதியிலும் வைக்க, மனதில் மகிழ்ச்சியும், நட்பும் இருக்கும்.

## 171. நிஷ்காமிய கர்மம்

✻ துறவு ஆன்மீகத்தின், அதாவது அருள்துறையின் உள்நாடி. ஆகவே வெறுத்து ஒதுக்குவது துறவாகாது. அறநிலை உணர்ந்து, தொடர்பு மற்றும் உறவினைச் சரியாகக் கணக்கிட்டு அனுபோம் கொள்ளும் மனநிலைதான் துறவு. இதைத்தான் நிஷ்காமியம் என்று சொன்னார்கள்.

## 172. நீர்

➢ இலேசான காற்றும் அழுத்தக்காற்றும் சேர்ந்து நீர் உண்டாகிறது.

➢ காந்த சக்தியானது நீரில் சுவையாக மாற்றம் அடைகிறது.

- ➢ விண்துகள்களின் கூட்டு இயக்கத்தில் பதினாறு துகள்களின் சேர்க்கையை உயிர்க்காற்று என்று வழங்குகின்றோம். ஆக்ஸிஜன் மூலக அணுவும் - ஹைட்ரஜன் நீரக மூலக அணுவும் கூடினால் நீர்.

## 173. நூல்கள்

- ❖ தத்துவம் என்றால் இயற்கை. இயற்கையில் நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகளைச் சீர்தூக்கி ஆராய்ந்து, அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய நெறிமுறைகளையெல்லாம் விளக்குவது சாஸ்திரம் ஆகும். தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட நூல்களை முதல் நூல் என்று சொல்வார்கள்.
- ❖ விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட நூல்களை அதாவது ஆராய்ச்சி, பழக்கம், வழக்கம், வாழ்க்கை இவற்றையெல்லாம் ஆராய்ந்து வகுத்த நெறிமுறைகள் அடங்கிய நூல்களை வழிநூல் என்று சொல்வார்கள்.
- ❖ தத்துவம், விஞ்ஞானம் இரண்டையும் அறியாத சாதாரண மக்களுக்கு அவற்றின் உட்கருத்தை மையக் கருத்தாக வைத்து, சிறுசிறு கதைகளைப் புனைந்து அதன் சுமூகமாக மக்களுக்குக் கருத்தை ஊட்டுவது சார்பு நூல். அவைதான் புராணங்கள்.
- ❖ முதல் நூல், சார்பு நூல், வழிநூல் இம்மூன்று நூல்களையும் ஆராய்ந்து பார்த்தால் முழுமையாக விளக்க முடியாமல் விடுபட்டுப் போனவை மூன்று. அவை இறைநிலை, நுண்விண், காந்தம், மனவளக்கலை இம்மூன்றுக்கும் முழுமையான விளக்கத்தை அளிக்கிறது.

## 174. நெசவு

- ▲ நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை. நெய்பவர் நெசவில் நேர்மையைக் கடைப்பிடித்தால்.

## 175. நேசித்தல்

- ⁕ நம்மை நோகடிப்பவர்களை நாம் நேசிக்கலாம். நம்மை நேசிப்பவர்களை ஒருபோதும் நோகடிக்கக் கூடாது.

## 176. நேர்மை

✪ வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியாக இருக்க நேர்மையை மட்டும் பின்பற்று.

## 177. நேர்நிறை உணர்வு

✤ நம்மை உருவாக்கி வாழவைக்கும் சமுதாயத்திற்கு நம் ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும். பிறப்பால் அனைவரும் சமமே செயல், திறன் வேறுபாடு கடமைகளை ஆற்றுவதற்கே உரியன. இந்த நினைவை அழுத்தமாகக் கொண்டால் உயர்வு தாழ்வு மனப்பான்மை எனும் உளநோய் நீங்கிவிடும். பிறப்பால் அமைந்திருக்கும் நேர் சம உணர்வு ஒளி வீசும். இந்த முறையில் உயர்வுதாழ்வு மனப்பான்மையை ஒழுங்கு செய்து கொள்ள வேண்டும்.

## 178. நேரம் பார்க்கலாமா?

➭ மனிதன் எடுக்கின்ற காரியத்தை வெற்றிகரமாக முடிக்க இயற்கையின் துணையை நாடுதல் என்பது பழக்கத்திலிருந்து வருகிறது. நமக்கு ஏற்ற கோள்களின் நிலைகளிலிருந்து நன்மையே கிடைக்கின்ற காலத்தைக் கணிக்கவே வாரம், நட்சத்திரம், திதி, யோகம், கரணம் என்ற ஐந்தையும் பார்க்கின்ற பழக்கத்தை வைத்துள்ளார்கள். இந்த விஞ்ஞான காலத்தில் இவ்வளவையும் பொருத்திப் பார்க்கவே முடியாது.

## 179. நோய்

✪ நாம் சமுதாயத்தில் ஓர் அங்கம். சமுதாயத்தினிடமிருந்து பெற்ற பொருட்கள், வாய்ப்புகள் வசதிகள் மூலமாகத்தான் நாம் இந்த உடலையும் அறிவையும் உருவாக்கிக் கொண்டுள்ளோம். எனவே, இந்த உடல் சமுதாயத்தின் சொத்து. அதனைக் கெடுப்பதற்கு நமக்கு அதிகாரம் இல்லை. நலமாக வைத்துக் கொள்ள வேண்டியது நமது கடமை.

✪ சீவகாந்த மின்குறுக்குத்தான் நோய்களாக உருவாகிறது.

✪ உணவு, உறக்கம், உழைப்பு, உடலுறவு, எண்ணம் இந்த ஐந்தையும் அலட்சியப்படுத்தக்கூடாது. அதுபோல மிகையாக அனுபவிக்கவும்

கூடாது. முரண்பாடாகவும் அனுபவிக்கக் கூடாது. இந்த மூன்று விதிகளைக் கடைப்பிடித்தால் நோய்த் தடுப்பிற்கு வேறு மருந்து வேண்டியதில்லை.

✪ உடலுக்கும் உயிருக்கும் எப்போது பிணக்கு ஏற்பட்டாலும் அந்தப் பிணக்குத்தான் நோய்.

✪ நோயைத் தீர்த்துக் கொள்வதற்கும் மேலாக சிறந்த ஒரு முறை என்னவென்றால், நோய் வராமலே தடுத்துக் கொள்ளக்கூடிய ஒரு விழிப்பு நிலை.

✪ நோயற்ற உடலை உடையவர்கள்தான் அமைதியாக, மகிழ்ச்சியாக வாழ முடியும். அவர்களுக்கு அறிவும் திறன்பட இயங்கும். ஆன்மீக உணர்வு பெற்ற இயற்கை இன்பங்களையும் துய்த்து மகிழ முடியும். எனவே ஒவ்வொருவரும் நோயற்று வாழ வழி கண்டு நின்று ஒழுகி வாழ வேண்டும்.

✪ இயற்கை அமைப்புப்படி நலமாக இருக்கின்றவாறுதான் உடல் உள்ளது. மனிதன்தான் உடலினது இயக்கச் சீர்மையை அறியாது அளவு மீறியும், முறை மாறியும் புலன்களை இயக்கி, நோயை உண்டு பண்ணிக் கொள்ளுகிறான்.

✪ நோய் வருவதைத் தடுக்க உணவு, உழைப்பு, உறக்கம், உடலுறவு, எண்ணம் இந்த ஐவகையிலும் அலட்சியம் காட்டாமல் காலத்தோடும் - அளவோடும் - முறையோடும் இவைகளை நிறைவு செய்து வரவேண்டும்.

✪ இரத்தத்தையும், சதைகளையும் இரசாயன முறையில் சீரமைக்கிற முறையில் அலோபதி, யுனானி, ஆயுர்வேதம், உடற்பயிற்சி - உணவு மாற்றம் இவையடங்கும்.

## 180. நோயாளி

✵ நம் உறவினரில் ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று கேள்விப்பட்டவுடன் பார்க்கச் செல்கிறோம். அப்படிச் செல்லும்போது அவருக்கு பழங்கள், ரொட்டி இவை வாங்கிச் செல்கிறோம். ஜீவகாந்தக் குறைவினால் உடல்நலம் கெட்டுள்ளார். ஜீவகாந்தம் நிறைந்தவர்கள் அவரை பார்க்கச் செல்கிறார்கள். இங்கு 'பார்த்தல்' என்பதுதான் முக்கியம். நோயாளியின் வலது கண்ணை பார்க்கும்போது நம் ஜீவகாந்தம் நோயாளியின்

வலது கண் வழியாக அவரது உடலில் பாய்ச்சப்படுகிறது. ஏன் வலது கண்ணைப் பார்த்துக் கொண்டே, அவரிடம் பேசும்போது அவருக்கு சற்று ஆற்றல் கிடைத்து படுத்திருப்பவர் எழுந்து உட்காருவார். பிறகு நம் கரங்களால் பழம், ரொட்டி இவற்றைத் தொட்டுக் கொடுப்பதால் அவற்றின் வழியாகவும் ஜீவகாந்தம் நோயாளிக்குக் கிடைக்கிறது.

## 181. நோயற்ற வாழ்வு

❀ மனத்தூய்மை, ஒழுங்கான உணவு, அளவான உழைப்பு இவற்றுடன் கூடிய வாழ்க்கை, நோயில்லா உடல்நலத்தோடு இருக்க உதவும். பொறாமை, கோபம், வஞ்சம், கவலை, காம எண்ணங்கள் இவை உடல் காந்த சக்தியினை அளவுக்கு மீறி அழித்துவிடும்.

## 182. நோன்பு

* தெய்வம் அரூபமானது, எங்கும் நீக்கமற நிறைந்துள்ளது. பூரணம், எல்லாம்வல்லது. அழிவற்றது. அன்பும் கருணையும் உடையது. நேர்மை தவறாமலும் குறையாமலும் அறிவாட்சி நடத்துவது என்ற விளக்கி அதை அறிய வேண்டுமானால், அடைய வேண்டுமானால், கட + உள் என்று குறிப்பிட்டுக் கூறினார்கள். ஏனெனில் அலைநிலையிலுள்ள மனத்தில் அடித்தளமான பொருள் நிலையாக உள்ளதால் - மனஅலைகளை சுருக்கிக் குறைத்து உள்சென்று முடிவில் அலை, நிலையாக பொருள் எதுவோ அதுவே தெய்வம். அங்குதான் நீ அறிவாக இருக்கும் உண்மை விளங்கும். இவ்வாறு இறையுணர்வும் அறநெறி பிறழாத வாழ்வும் நோன்பு எனப்படுகிறது.

## 183. பக்தன்

➢ காரணம் அறியாமல் பக்தி செய்பவன் பக்தன். காரணம் என்னவென காண முயற்சிப்பவன் யோகி.

➢ ஓம் என்று செபிப்பவனை பக்தன் என்போம். உட்பொருள் உணர்ந்தவனை ஞானி என்போம்.

## 184. பக்தி

❖ அறநெறியை பிறர் உணர்த்தி தான் பின்பற்றும் முறை பக்தி வழியாகும். தானே உணர்ந்து பொறுப்போடு ஆற்றி வாழும் வழி 'ஞான' வழியாகும்.

❖ வளர்ப்போர் சொல்லிக் கொடுத்ததைத் திருப்பித் திருப்பிச் சொல்லும் கிளியைப் போன்று - தன் தாயார் சுட்டிக்காட்டிய ஒருவன் தான் தன் தகப்பன் என்று உறுதியாகச் சொல்லும் மகனின் மனோநிலை போன்ற பெரியோர்களால் எழுதப்பட்டுள்ள கருத்துக்களே சரி என்று நம்பி உறுதிகொண்டிருக்கும் நிலையே பக்தி.

❖ அறிவு அறிவுக்கு அடிமையாவதே பக்தி. அறிவை அறிவால் அறியப் பழகுதல் யோகம். அறிவை அறிவால் அறிந்த நிலையே முக்தி. அறிவை அறிந்தோர் அன்பின் அறமே ஞானம்.

❖ பெரியவர்கள் அறிவில் தெளிந்தவர்கள் சொற்படி அவர்கள் வழியில் செயல்புரிந்து தன்னை ஆன்மீக வாழ்வுக்குத் தகுதியாக்கிக் கொள்வது பகுதி பக்தி யோகம்.

## 185. பகை

▲ ஒருவரையும் பகைத்துக் கொள்ளாத இன்மொழியனாக இருந்தால் அது உலகையே உனக்கு வசப்படுத்திக் கொடுக்கும். வாழ்வை வெற்றிகரமானதாக்கித் தரும்.

## 186. பசித்திரு – தனித்திரு – விழித்திரு

* பசித்திரு - நான் யார்? அறிவா? உயிரா? உடலா? இம்மூன்றும் வேற வேறா? இவற்றிற்கு மூலமும் முடிவும் யாது? என்பது போன்ற விளக்கங்களைத் தெரிந்து கொள்வதில் ஆர்வத்தோடு இரு என்பது.

* தனித்திரு - எந்த வெளிப் பொருளையும் நிகழ்ச்சியையும் அறிவு நாடாமல் உன்னையே நோக்கி அது நிற்க வேண்டும் என்பதே.

* விழித்திரு - பழைய ஞாபகங்கள் அடிக்கடி அறிவில் பிரதி பலிப்பதால் சிந்தனை அடிக்கடி திசைமாற்றம் அடையக்கூடும். அதனால் ஆன்மீகத் துறைக்கு முரணாக நீ செயலில் ஈடுபட நேரிடக் கூடும். ஆகையால் நீ மிகவும் உஷாராக, உன் நிலையில் மாறுபாடு அடையாமல் விழிப்பாயிரு என்று வலியுறுத்திக் கூறுவதே 'விழித்திரு' என்பதாகும்.

## 187. பஞ்சபூத தவம்

- நிலம், நீர், நெருப்பு, காற்று, விண் என்ற ஐந்து பௌதிகப் பிரிவுகளின்மீது மனத்தைச் செலுத்தி தவம் செய்வதே பஞ்சபூத தவம். ஐந்து பௌதிகப் பிரிவுகளிடையேயும் நமது அறிவையும், மனத்தையும், சீவகாந்த சக்தியையும் செலுத்தி நமக்கு வலிமையைத் தேடிக் கொள்கின்ற தவமே பஞ்சபூத தவம்.
- பஞ்சபூத தவம் செய்வதால் நோய் எதிர்ப்பு சக்தி கூடுகிறது. எந்தப் பொருளோடும் சக்தியோடும் இணைந்து பயன் கொள்ள முடிகிறது. உடலுக்கும், உயிருக்கும், ஊருக்கும் ஆக்கமும் கிடைக்கிறது. எந்தப் பொருள் சக்தியால் விளையக்கூடிய தீமைகளிலிருந்து காப்பு பெற முடிகிறது. அந்தப் பொருள் சக்தியைப் பற்றிய முழு விளக்கமும் தெளிவும் பெற்றுக் காப்பு பெற முடிகிறது.

## 188. பஞ்ச தன் மாத்திரைகள்

- அலைகளின் அந்த வேறுபாடுகள்தான் அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் என்ற பஞ்ச தன் மாத்திரைகளாகும்.

## 189. பணம்

- பணத்தைக் கொடுப்பவன் கடவுளே என்கிறீர். படைத்தவன் மனிதனோ கொடுப்பவன் கடவுளோ?
- பண்டங்கள் மாற்றுவதற்குப் பொது மதிப்பாய் பணம் என்ற கருவியினைத் தோற்றுவித்தார்.
- மெல்ல மெல்ல பணம் என்ற நச்சை முன்னே முறித்துவிட்டால், சிக்கல் பல தீர்ந்தே போகும்.

## 190. பண்பு

- பண்பு, கனிவு, துணிவு மூன்றும் மனித வளத்தை உயர்த்த வல்லது.
- பணிவு என்பதற்கு அடிமைத்தனம் என்று பொருள் கொள்ள வேண்டாம். ஒத்துப்போதல் என்ற விதத்தில் சமநிலை நேர் உணர்வாகவே பணிவினைக் கருத வேண்டும்.

- ✳ கனிவு என்பது பிறர் விருப்பத்தைக் கருணையோடும் விளைவறிந்த விழிப்போடும் நிறைவேற்றும் இரக்க உணர்வாகும்.
- ✳ உணவு என்பது செயலில் கொள்ளும் தன்னம்பிக்கை ஆகும்.
- ✳ உணவில் எளிமை! உழைப்பில் கடுமை, ஒழுக்கத்தில் உணர்வு! உத்தமர் இயல்பு!
- ✳ உடையில் ஒழுக்கம் உள்ளத்தில் கருணை நடையில் கண்ணியம் நல்லோர் பண்பு.
- ✳ பணத்திற்கும், பண்புக்கும் நடக்கும் போட்டியில் குணத்தில் மனிதர்கள் குறைந்தோராகின்றனர்.
- ✳ ஆறாவது அறிவு போதிய வளர்ச்சி பெற்றால்தான் மனிதனுக்குப் பிறரை மதித்து ஒத்தும் உதவியும் வாழும் பண்பு அமையும்.
- ✳ சிந்தனையுடன் செயலும் செயலுடன் சிந்தனையும் பதிந்து நிற்கப் பழகுதல் நற்பண்பு.

## 191. பண்பாடு

- ✪ வாழ்க்கைச் செலவிற்கேற்ற வரவில்லையேல் பண்பாட்டை வளர்க்கவோ காக்கவோ வழியில்லை.
- ✪ ஆறாம் - தத்துவ ஞானம் இவை எந்த அளவு ஓங்குகின்றன, அந்த அளவே சமுதாயம் பண்பாட்டில் உயரும். மக்கள் சீரும் சிறப்பும் பெற்று இனிது வாழ்வார்கள்.
- ✪ கடமைகளைத் திறம்பட ஆற்ற மனிதனுக்கு அமையும் செயல் ஒழுக்கமும், அறிவுத்திறனும் ‘பண்பாடு’ என்று வழங்கப்படுகிறது.
- ✪ இந்திய நாடு அடிமையாக நீண்ட காலம் இருந்தது. இக் காரணத்தால் மக்கள் பண்பாட்டில் உயர்வதற்கு வாய்ப்பில்லாமல் போனதோடு, உயர்ந்த பண்பாடுகள் குலைக்கப்பட்டும் விட்டன.

## 192. பணிவு

- ✤ புயலில் பெரும் மரங்கள் சரியும். கட்டடங்கள் இடியும். ஆனால் வளைந்து நிற்கும் புல் பாதிக்கப்படுவதில்லை. பணிவின் பெருமை இத்தகையது.

## 193. பதவி

- எந்தப் பதவியாயிருந்தாலும், மக்களுக்குப் பணியாற்றுவதற்காகத்தான் அது ஏற்படுத்தப்பட்டிருக்கிறதே தவிர அதிகாரம் புரிவதற்காக இல்லை.

- அருள்துறைப் பதவியோ இன்னும் ஒரு படி மேலே போய் பணிவதற்காகவே என்பதை உணர்ந்துகொண்டு அதிகார உணர்வின்றி தொண்டு மனப்பான்மையோடு, தொண்டுக்காகவே வகிக்கப்பட வேண்டியதாகும். மற்ற பதவியாளர்களையும், பணியாளர்களையும் கூடத் தோழர்களாகவே கருதி, அவர் களுடைய அன்பையும், ஆலோசனைகளையும், உதவிகளையும், ஒத்துழைப்பையும் அருள்துறைப் பதவியாளர்கள் தேடிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

- மக்களுக்கு வழிகாட்ட வேண்டிய தலைவர்கள் பதவிக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஓர் இழிவான நிலை நாடுகளில் பரவலாக உள்ளது.

## 194. பதிவுகள்

- மனித உடலில் சீவகாந்தம் சுழன்றோடி நடுமையத்தில் திணிவு பெற்று கருமையமாக விளங்குகின்றது. இந்தக் கரு மையத்தில் எல்லாப் பதிவுகளும் ஆகின்றன. சீவகாந்தமே கருமையத்தி லிருந்து எண்ணமாக மலர்கிறது. நாம் செய்கின்ற செயல்களும் அதன் விளைவுகளும் கருமையத்தில் பதிவாகின்றன. இந்தப் பதிவுகளை 1. கருவமைப்புப் பதிவு (சாஞ்சித கர்மம்); 2. மேலடுக்குப் பதிவு (பிராரப்த கர்மம்) என்று சொல்வார்கள்.

- உடலிலே நோய், உள்ளத்திலே களங்கம், இவையே பதிவுகள் இருப்பதற்கு அடையாளம்.

- சிற்றுயிரிலிருந்து ஒவ்வொரு உடலும் எடுத்துக்கொண்டே வரும் போது ஒவ்வொரு உடலிலேயும் என்னென்ன அனுபவங்கள் நடந்ததோ அந்த அனுபவங்கள் எல்லாம் அந்த காந்த ஆற்றலில் திணிவுபெற்றிருக்கிறது. அதேபோல மனிதன் வரையில் வந்த எல்லா ஆற்றல்களும் கருமையத்தில் இருப்பாக இருக்கும். அவ்வாறு தனது பெற்றோர் வரைக்கும் வந்த பதிவுகள் சஞ்சித கர்மம் என்றழைக்கப்படுகிறது.

- ஒருவரின் 3வது வயது முதல் இன்றுவரை ஒருவர் செய்த செயல்களும் விளைவுகளும் இன்ப துன்ப அனுபவங்களும் கருமையத்தில் பதிவு செய்யப்படுகின்றன. இத்தகைய பதிவு களும் தன்மாற்ற விளைவுகளும் கருமையத்தில் உள்ளன. இவை தன்வினைப் பதிவுகள் அல்லது பிராரப்த கர்மம் எனப்படுகிறது.
- முன்வினை பதிவுகள், தன்வினை பதிவுகள் ஆகிய இரண்டு பதிவுகளே ஒருவரது அறிவாட்சி தரம் ஆகும். இந்தப் பதிவு களுக்கேற்ப ஒரு மனிதன் உலகத்தோடு தொடர்பு கொள்ளும் போது விருப்பம் செயல் உருவாகின்றது. இதுவே ஆகாம்ய கர்மம்.
- மனிதகுல வாழ்வில் பல தவறான உணர்ச்சிவயப்பட்ட எண்ணங்களும், செயல்களும் உருவாகின்றன. இவை பாவப் பதிவுகளாகக் கருமையத்தில் பதிவாகின்றன.
- தன் பதிவுகள் அனைத்தும் நீக்கிவிட்டால் மனிதனுக்கு மீண்டும் பிறவி ஏற்படாது. அதற்கு அறுகுணங்களை சீரமைத்துக் கொண்டும் பழிசெயல்களை நீக்கியும் வாழ்ந்து முழுமைப்பேறு அடையலாம். மீண்டும் பிறவி ஏற்படாது. தவத்தில் முழுமைப் பேறு பெற்று பிறவித் தொடர் அறுபடும்.
- தேவையில்லாதவைகளைக் கழிக்க வேண்டுமானால், மூளைச் செல் பதிவுகளை மாற்றியமைத்தால்தான் முடியுமே தவிர வேறு வழியில்லை.
- எந்தச் செயலும் புலன்கள், உறுப்புக்கள் இவற்றில் இயக்கப் பதிவாக அமையும். வித்து அணுக்களில் பரம்பரைத் தரப்பதிவாக அமையும். மூளையில் எண்ணப் பதிவாக அமையும். இம்மூன்று பதிவுகளும் சேர்ந்து உயிரணுக்களில் பரிணாமச் சிறப்பாற்றலாக அமையும்.
- இதுவரை நம் கருமையப் பதிவுக்கேற்றவாறு செயல்கள் ஆற்றி வந்தோம். அதில் எழும் தீய விளைவைத் தடுக்க உரிய பயிற்சிகளைச் செய்து மீண்டும் அந்தப் பதிவுக்கு மேல் நல்ல பதிவு கொடுக்க வேண்டும்.

## 195. பரமாணு

- பிரபஞ்சத்தின் அடிப்படை இயக்க ஆற்றல்தான் நுண்ணிய விண்துகள் (பரமாணு) ஆகும். அதுதான், அடிப்படையான, எல்லாவற்றுக்கும் ஆதாரமான நுண்ணியக்க மூலக்கூறு.

## 196. பரிணாமம்

❀ முதல் விண்ணான வேதான் முதல் எல்லாத் தோற்றங்களும், எண்ணிலடங்காத பெயர்களை உடையது.

❀ உலகம், அண்டங்கள், உயிரினங்கள், பொருள்கள் பலதும் அணுவின் கூட்டுப் பக்குவப் பரிணாமம்.

## 197. பற்று

* பிறரைக் கெடுத்துத் தான் மட்டுமே வாழ நினைத்தால் ஆசை. தான் மட்டும் வாழ நினைத்தால் பற்று.

## 198. பற்றற்ற வாழ்க்கை

➢ நெற்றி உச்சியில் ஞாபகமாயிரு. உற்றுற்றுப் பார்த்திடு - உன்னை - உலகை - பின் - கற்றபடி நட கருத்துடன் விழிப்புடன் - பற்றற்று வாழும் பழக்கம் உண்டாகிவிடும்.

## 199. பற்றற்ற நிலை

❖ மனிதன் அனுபோக அனுபவ ஆராய்ச்சிகளினால் அறிவு வளர்ச்சி பெற்று தன்னிலை விளக்கம் பெறும்போது உருவ அளவிலே மனிதர்கள் வேறுபட்டிருந்தாலும் உயிர் என்ற நிலையால் ஒன்றுபட்டே ஏகமாகவே இருப்பது அறிவிற்கும் தெளிவாக விளங்கிவிடுகிறது. அப்போது பிரபஞ்சத்தில் உள்ள சில பொருட்களை மாத்திரம் தனதென்று எண்ணிக் கொள்ளும் பற்றுதல்கள் தானாகவே விடுபட்டுப் போகின்றன.

❖ தேவையுணர்வாலும், தொடர்ந்துவந்த பழக்கத்தாலும் கிடைத்துள்ள சந்தர்ப்ப சூழ்நிலைகளாலும் அறிவின் வளர்ச்சிக்கேற்றவாறு ஒவ்வொரு மனிதனும் தேசம், மதம், சாதி, மொழி, இனம், பொருட்கள், பந்துக்கள் என்றவைகள்மீது உரிமை கொண்டாடு கிறான். அந்தந்த எல்லையில், குறுகியும் நிற்கிறான். இத்தகைய நினைவை நிலையை பற்று என்று சொல்லுகிறோம். ஆனால் உயிர் நிலையை அறிந்து கொண்ட பேரறிவின் சிகரமே பற்றற்ற நிலையாகும்.

## 200. பற்றும் பாசமும்

▲ இயக்கங்களுக்கெல்லாம் ஈர்ப்புத் தத்துவம் மூலம் பயத்துக் கெல்லாம் மூலம் பற்றும் பாசமும்.

## 201. பயிற்சி

⁕ முன்பு மனதை இயக்கிப் பதிவுகளைப் பெற்று ஒரு தன்மையை நாம் கொண்டுள்ளோம். அதை மாற்றி மனத்தை நம்முடைய விருப்பப்படி நடத்தி நாம் அடைய வேண்டிய எல்லா இலட்சியங்களையும் அடைய, அதற்கென ஒரு பயிற்சி வேண்டும்.

## 202. பழக்கம்

✪ பழக்கத்தால் மனிதன் உயரவும் முடியும் தாழவும் முடியும்.

✪ இந்தப் பழக்கம் நமக்குத் தேவைதானா? இதிலிருந்து விடுபட முடியாதா? என யாருமே சிந்திப்பதில்லை.

## 203. பாசம்

✤ உருவ நிலையில் கொண்ட தொடர்பால் உதிக்கும் இச்சையே பாசம்.

✤ உணர்ச்சிவயப்பட்ட நிலையிலிருந்து மனவிரிவுக்கும், விழிப்பு நிலைக்கும் வருவது என்று சொன்னால் சிந்தனையும், தெளிவும், தெளிந்த நிலையில் செயல்படுகின்ற பழக்கமும் வேண்டும்.

## 204. பாடகன்

➪ நான் நல்ல பாடகனாக ஆகவேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தால்தான் நல்ல வாத்தியார். நீங்கள் செய்யும் பயிற்சி இரண்டும் சேர்ந்தால்தான் பாடகனாக ஆக்குவார்கள்.

## 205. பாய்மப் பொருள்

✪ பாய்மப் பொருள் என்றால் எல்லா இடங்களிலும் ஊடுருவிப் பாயத்தக்க, எல்லாவற்றையும் ஊடுருவிப் பார்க்கத்தக்க, தங்கு

தடையில்லாத பொருள். அது எதுவாக இருக்க முடியும்? இறை நிலை ஒன்றுதான் எல்லா இடங்களிலும் ஊடுருவிப் பாயத்தக்கது.

✪ பாய்மப் பொருள் அலையாக இருந்தாலும் சில இடங்களில் ஊடுருவிப் பாயும். சில இடங்களில் தங்கிவிடும். காற்றடிக்கிறது. ஊடுருவிப் பாய முடியாது. தடைபடுகிற இடத்தில் சற்று வளைத்துப் போகும். எதுவுமே தனக்குத் தடையாக இல்லாமல் ஊடுருவிப் போகக்கூடியது சுத்தவெளி மட்டும்தான். எங்கும் நிறைந்த ஒரேயொரு பொருள் அது.

## 206. பாலியல் வாழ்க்கை

✵ குண்டலினி தீட்சை எடுத்து ஒரு பத்துப் பதினைந்து நாட்களுக்கு வேண்டுமானால் உடலுறவை நிறுத்தி வைப்பது நன்மையாக அமையும். அதனால், நெற்றிக் கண்ணில் உயிர் தரும் உணர்வு சீக்கிரமாகவும், பளிச்செனவும் வெளிப்படும். அதன்பிறகு, மகப்பேற்றுக்கும், வாழ்க்கைத்துணையின் தேவைக்கும், தக்கவாறு சிற்றின்ப விஷயங்களை வைத்துக் கொள்ளலாம். உங்களைப் பொறுத்தவரையில் ‘அது’ எந்த அளவு தேவை என்பதைக் காலத்தால் நீங்களே தீர்மானித்துக் கொள்வீர்கள். எனவே தவத்திற்கு இல்லற ஒழுக்கம் ஒரு பிரச்சினையே இல்லை.

## 207. பாலுறவு

❀ உடலினுடைய தேவையொன்று எழுந்து நிற்கின்றபோது, பசி என்று வைத்துக் கொள்ளுங்கள், பசிக்கு முறைப்படி காலத்தோடு உணவு கொள்ளவில்லையென்றால் எந்தப் பணியைச் செய்ய முடியும்? அதேபோல ஒவ்வொரு உணர்ச்சியும் காலத்தாலே அதை முறையாகத் தீர்த்துக் கொள்வதற்கு வழிவகுக்கவில்லை யென்றால் என்ன ஆகும்? சாக்கடைக்குக் கால்வாய் கட்டவில்லை யென்றால் என்ன ஆகும்? வீட்டில்தானே எல்லா அசுத்தமும், அழுக்கும் தேங்கும். அதேபோல பாலுறவிற்கு ஒரு குறிப்பிட்ட முறைப்படி வாய்க்கால் ஒன்று கட்டாயம் வேண்டும்.

❀ குண்டலினி யோகிகளுக்குப் பாலுறவு வேட்பில் இருக்காது. அதாவது வேட்பு அல்லது விழைவு இருந்தாலும், வெறி அல்லது தவிப்பு இருக்காது. பாலுறவு என்பதே ஓர் இரண்டாம்பட்சமான சங்கதியாகிவிடும்.

❀ சாதாரணமாக குடும்பத்தில் பிணக்குகள் தோன்றுவதற்குப் பாலுறவும் ஒரு முக்கியக் காரணமாகும். தவிப்பும் - ஏமாற்றமும் தோன்றாத வகையில் தம்பதிகள், ஒருவர் மற்றவரின் மனப் போக்கிற்கும், உடல்தேவைக்கும் மதிப்பளித்து தங்கள் பாலுறவு வேட்கையைக் குண்டலினி யோகத்தின் மூலம் மாற்றி அமைத்து, இனிமையோடு வாழ்க்கை நடத்த வேண்டும்.

## 208. பாலுறவு கல்வி

* பாலுறவு பற்றிய கல்வி இன்றைய உலகிற்கு மிகமிக அவசிய மானது. தற்போதுள்ள கல்வி முறையில் இரண்டு வகையிலே இருட்டடிப்பு வந்திருக்கின்றது. ஒன்று பாலுறவில். அடுத்து ஆன்மீகத்தில். ஆன்மீக அறிவு மனிதனுக்கு தேவையே இல்லை என ஒரு சாரார் ஒதுக்கி விட்டனர்.

* பாலுறவைப் பொறுத்தமட்டிலே அது அவசியம் என்றாலும், அது பாவம், கேவலம் என்ற ஒரு கருத்தும், அதைத் தவிர வேறு இன்பமே இல்லை என்ற நினைப்பும் நிலவியுள்ளன. இந்தக் குழப்பங்கள் தீர்த்து தெளிவான முறையிலே அறிவு வரவேண்டும்.

## 209. பாவம் புண்ணியம்

➢ ஒருவரது எண்ணம், சொல், செயல் இவைகளினால் எதனாலேனும், தனக்கோ, பிறருக்கோ, தற்காலத்திலோ, பிற்காலத்திலோ, உடலுணர்ச்சிக்கோ, பகுத்தறிவுக்கோ துன்பம் விளைவதாக இருந்தால் அத்தகைய செயல்கள் 'பாவம்' எனப்படும்.

➢ எதற்காக நாம் பிறந்தோம் என்று தெரிந்துகொண்டால் அந்த வழியை அடைவதற்கு, அந்த எல்லையை அடைவதற்கு, வாழ்க்கைப் பயணத்தை சரியாக நடத்துவதற்கு, ஏற்றது எந்தெந்தச் செயலோ, அந்தச் செயலெல்லாம் புண்ணியம். அந்த அருட்பயணத்தை அறிவின் முழுமையை நோக்கி நாம் எடுத்துக் கொண்டிருக்கிற பயணத்தை, தடுக்கவோ, திசை மாற்றவோ, தாமதிக்கவோ செய்யக்கூடிய செயலும் பாவமாகிவிடும்.

## 210. பாவப் பதிவுகள்

❖ பாவப்பதிவுகள் இருவழிகளில் வெளிப்படும். 1. உடலில் நோய்; 2. உள்ளத்தில் களங்கம்.

❖ துன்பம் தரும் செயல்கள் அனைத்தும் பாவங்கள். அவையே பாவப் பதிவுகள். அன்றாட வாழ்வில் நமது மனம், மொழி, செயல்களை நலம் தரும் முறையில் திட்டமிட்டவாறு செயல் படுத்திப் பழிச்செயல் பதிவுகளை நீக்கிக் கொள்ளலாம்.

❖ பாவப்பதிவுகளை மூன்று வழிகளில் போக்கலாம். 1. பிராயச் சித்தம்; 2. உணர்ந்து திருந்தி அழித்தல் அல்லது மேல்பதிவு; 3. பழிச்செயல் பதிவு முறித்தல் அல்லது சமன் செய்தல்.

## 211. பாவாடையும் பூவாடையும்

▲ பாவை என்றால் பொம்மை. பொம்மைகளைக் கைகளில் வைத்துக்கொண்டு ஆட்டினால்தான் ஆடும். தானாக ஆடாது. ஒன்றும் செய்யாது. பிறர் சொல்லக் கேட்டு நடக்கும் குழந்தை வயதில் இருப்பவர்களையெல்லாம் பாவையர்கள் என்று சொல்கிறார்கள். சிறுவயதில் உள்ள சிறுமிகளைப் பாவையர்கள் என்கிறோம்.

▲ பாவையர்கள் உடுத்தக்கூடிய ஆடையை பாவை + ஆடை = பாவாடை என்கிறோம். பூவையர் என்றால் பூப்படைந்தவர்கள். பூப்படைந்த பெண்கள் அணியக்கூடிய ஆடைக்கு பூவை + ஆடை = பூவாடை. பாவாடை உடுத்தக்கூடிய காலத்திலேயே பூவாடை உடுத்துபவர்களைப்போல பெண் குழந்தைகள் உயர்ந் தவர்களாக இருக்க வேண்டும். அந்த நோக்கத்தோடு எண்ணங் களையும் செயல்களையும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

## 212. பிச்சை

⁎ தன் ஆற்றலை வளர்த்துக்கொண்டு தன்னிறைவு பெற்ற நிலையில் எப்போதுமே பிறருக்கு ஏதாவது உதவி செய்துகொண்டு இருக்கும்போது மிகுந்த செல்வந்தனாக இருப்பதுபோன்ற உணர்வு உண்டாகும். அப்படிப்பட்டவனுக்கு, பற்றாக்குறை

என்பதே இல்லை. தன் ஆற்றலை வளர்த்துக் கொள்ளவில்லை என்றால் பிறரிடமிருந்து எதிர்பார்த்தாக வேண்டும். அது பிச்சை எடுப்பதற்கு ஒப்பானதாகும்.

## 213. பிசாசு

- உயிர் உடலை விட்ட பிறகு அது கலைய முடியாது. அடுப்பில் இருந்து புகை வருகிறது. புகை உடனே காற்றில் கலைவ தில்லை. மெதுவாக (கொஞ்ச நேரம் வரை) மேலே எழும்பி பிறகு கலைகிறது. அதைப் பார்க்கிறோம் அல்லவா? அந்த மாதிரி உடலிலிருந்து வெளியேறி தனியாகக் கலைந்து போகக்கூடிய காலம் வரையில் உள்ள உயிரின் நிலைக்கு பிசாசு என்று பெயர்.

## 214. பிணக்குகள்

- சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், தியாகம் இந்த மூன்றை சரியாகத் தெரிந்துகொண்டோமானால் எங்கெங்கும் உள்ள பிணக்குகள் தீர்ந்துவிடும்.
- பிணக்குகள் நிலையாகக் கொண்டால் நமது நோக்கம் நிறைவு பெறாது. நமது நோக்கத்தை முதன்மையாகக் கொண்டால், பிணக்குகள் அனைத்தும் கலைந்து, கரைந்து நறுமணமும், அன்பும் வீசும் நட்பாக ஒளிரும்.

## 215. பிடரிக்கண் தவம்

- இந்தத் தவமுறையைப் பயில்வோர்க்குச் சிலசமயம் பிடரியில் குண்டலினி சக்தியின் அலைகள் தாக்கும். அதனால் சிலு சிலுப்பும் அதைத் தொடர்ந்து ஒருவித இன்பமும் அங்கே உண்டாகும். இதுவரையில் நிலைக்க முடியாமல் பம்பரத்தைப் போல் பலன்கள் வழியாகச் சுழன்று பழகிவிட்ட அறிவிற்கு இவ்வித உணர்ச்சியின் மூலம் அநேக நன்மைகள் உண்டாகும். கடலில் மிதக்கும் கப்பல் காற்றால் அலைக்கப்படாமல் இருக்க, நங்கூரம் போட்டதைப்போல் - அறிவு உணர்ச்சி களால் அலைப்புறலாமல் அமைதியோடு நிலைபெறும். இதனால் அறிவுக்கு வேகமும் திறமையும் நாளுக்குநாள் கூடிக்கொண்டே இருக்கும்.

## 216. பிரபஞ்சம்

✪ பிரபஞ்சத்தின் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்குப் போக *3000* கோடி வருடம் ஆகும்.

✪ பிரபஞ்சத்தில் காணும் எப்பொருளும் அணுக்களின் கூட்டமே.

✪ கொள்ளலும் தள்ளலும்தான் பிரபஞ்சத்தை நடத்திக் கொண்டிருக்கின்றன.

## 217. பிரபஞ்ச இரகசியம்

✵ சுத்தவெளி, விண்துகள், வான்காந்தம் ஆகியவற்றின் பெருமை யினையும், சிறப்பினையும், தெய்வீகத் தன்மையினையும் தெளிவாக உணர்ந்துகொண்டால், வேறு அறிய வேண்டிய பிரபஞ்ச இரகசியம் எதுவும் மிச்சமில்லை.

## 218. பிரவிர்த்தி மார்க்கம்

❀ எண்ணத்தை மயக்கத்தில் விட்டுவிட்டால், பஞ்ச மகா பாதகங்கள் என்னும் பழிச்செயல்கள் அவற்றின் விளைவான துன்பங்கள் என்று அடுக்கடுக்காக வரும். வாழ்வு நரகமாகும். மனஅமைதியை இழந்து தவிக்க நேரிடும். இந்த நிலையில் பிறவிக் கடலை எங்கே நீந்துவது? மீண்டும் பிறவிதான். மீண்டும் துன்பந்தான். இதைத்தான் பிரவிர்த்தி மார்க்கம் என்று சொன்னார்கள்.

## 219. பிரணவம்

✻ ஓம். அதற்கு மூலஒலியே பிரணவமாம்.

## 220. பிரம்மஞானம்

➢ விஞ்ஞானம் வேறு மெய்ஞ்ஞானம் வேறு அல்ல. விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் எதை நாடிச் செல்கின்றன என்றால் இறை நிலை என்ற ஆதிநிலையை உண்மைநிலையை நோக்கிச் செல்கின்றன. மெய்ப்பொருளை நாடி தேடிக் கொண்டேபோவது மெய்ஞ்ஞானம். விண்ணை அடிப்படையாகக் கொண்டு மேலும்

மேலும் தேடிக்கொண்டே போவது விஞ்ஞானம். ஆனால் இவ்விரண்டும் சேரும் இடம் பிரம்மஞானம்.

- பேராற்றல் பெற்ற உயிரினங்களில் ஆறறிவோடு உள்ள மனிதன்தான் சிறப்பு வாய்ந்தவன். அதுமாத்திரம் அல்லாது பிரபஞ்சத்திலேயே ஆதிநிலையிலிருந்து மனநிலை வரையில் நடந்த எல்லா நிகழ்ச்சிகளையும் ஒரே பார்வையாக அகக் காட்சியாகக் காணக்கூடிய வல்லமை உடைய அறிவுடையவன். அத்தகைய நிலையில் அந்த அறிவுக்குப் பெயர் பிரம்மஞானம்.

- பிரம்ம நிலையில் இருப்பாக இருந்த பூரணம், விரைவு, அறிவு என்ற மூன்று தன்மைகளும் அதன் இயக்கச் சிறப்பான பரிணாமம், இயல்பூக்கம், கூர்தலறம் ஆகிய திறன்களும் இப்போது மனித உடலுக்குள் அமைந்து, விரிந்து, நிறைந்து ஆற்றும் சிறப்புகளையும் உணரும்போது, மனித மனத்தின் பூரண தத்துவம் விளங்குகின்றது. மனம் தன்னைப் பற்றி உணரும் அளவே அதன் மதிப்பு ஆகும். மனம் கொடுக்கும் மதிப்பேதான், மதிப்பின் அளவேதான் பேரியக்க மண்டலம். இவ்வாறு மனம் விரிந்து முழுமை பெறும்போதுதான், அது தன் இருப்பு நிலையான பிரம்மத்தையும், இயக்க அலையான மனதையும் ஒன்றாகக் காணுகின்றது. இந்தப் பெரும் பேறான அகக்காட்சியே ‘பிரம்ம ஞானம்’.

- உலகம் அமைதியாக வாழவேண்டும். போர் இன்றி, உலகம் போரைத் துறந்து அன்பும், பண்பும் நிறைந்து கடமை உணர் வோடு மக்கள் வாழவேண்டும். அதற்கு மேலாக பிரம்மஞானம் என்பது எல்லா மக்களுக்கும் வயதுவந்த அனைவருக்கும் கிட்ட வேண்டும்.

- தன்னையறிந்தால்தான் சரியாக வாழ முடியும். தன்னை அறிவதுதான் பிரம்மஞானம். முதலில் மனமாக இருக்கிறோம். மனதிற்கு அடித்தளத்தில் போகும்போதோ, அறிவாக இருக்கிறோம். அந்த அறிவை யார் என்று பார்க்கிறபோது இறைவனாக இருக்கிறோம். அப்போது அடுத்தவன் யார்?

- இறைநிலை என்பது சுத்தவெளிதான் - அதற்கான ஆதாரங்களை யெல்லாம் உலகுக்கு விளக்கி, உலகம் முழுமையாக இறைத் தத்துவத்தை உணர்ந்து கொள்வதற்கு நாம் பிரம்மஞானம் என்ற பயிற்சியைக் கொடுத்து வருகிறோம்.

## 221. பிரம்மம்

❖ பிரம்மம் எந்தெந்த இடத்தில் அறிவாக, அறிவு நிலையாக உயிர்நிலைகளில் தன்மையாக இயங்கிக்கொண்டே இருக்கிறதோ அந்தத் தன்மைக்குத் தகுந்தவாறு பல பெயர்களாக வழங்கிக் கொண்டே வருகிறோம்.

❖ பிரம்மம், பூரணம், அறிவு, ஆற்றல் எல்லாம் ஒன்றே.

❖ முதலில் மனமாக இருக்கிறோம். மனதிற்கு அடித்தளத்தில் போகும் போதோ - அறிவாக இருக்கிறோம். அந்த அறிவை யார் என்று பார்க்கிறபோது இறைவனாக இருக்கிறோம். அப்போது அடுத்தவன் யார்? அவனும் பிரம்மத்தினுடைய சொரூபம்தான்.

## 222. பிராம்மணீயம்

▲ பிராம்மணீயம் என்பது குறிப்பிட்ட மக்களுக்குத்தான் உரிமை யானது என்றோ, மற்றவர்களுக்கு அது தேவையில்லை என்றோ கூறுவது பொருத்தமற்றதாகும்.

## 223. பிராமணன்

⁕ பிரம்மத்தை அறிந்தவன் பிராமணன். சாதாரண மனிதன் புலனளவிலே அஞ்ஞானியாய் இருக்கிறான். தன்னை நோக்கி அறிந்தவன் இரண்டாவது பாதையை நோக்கியபோது பார்ப்பனன் எனப்படுகிறான். அதற்கும் மேலாக பிரம்மத்தை அறியும்போது பிராமணன் எனப்படுகிறான்.

## 224. பிறப்புரிமை

✪ உலகில் பிறந்துள்ள யாவரும் வாழத்தான் வேண்டும். வாழ்க்கை வசதிகளைத் தேட, பெற, காக்க, துய்க்க பிறருக்கு தர எல்லோருக்கும் உரிமை உண்டு. இதுவே பிறப்புரிமை.

## 225. பிறவி

✤ திறவுகோல் இல்லாத பூட்டைத் திறக்க முடியாதது போல் துறவிகளின் அறிவை அறிய முடியாது.

- ✤ நாதவிந்துவின் சேர்க்கையே எல்லாப் பிறவிகளுக்கும் முன் தொடர்பும் பின்தொடர்பும் ஆகும். அதாவது தாய், தகப்பன் முன்பிறவி, மக்கள் பின்பிறவியாகும்.
- ✤ பொருளல்லவற்றைப் பொருளென்று உணரும் மருளினால், பிறவி எடுத்து எதை அடைய வேண்டுமோ அதை அடையாது மனிதப் பிறவி மாண்பற்ற பிறவியாகப் போகிறது.
- ✤ ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றுவிதக் குற்றங்களின் காரணமாகப் பிறவிகள் தொடர்ந்துகொண்டே போகின்றன. பிறவித் தொடருக்கும் மக்கட்பேறுதானே வழி. அந்தப் பேற்றைப் பெறுவதற்காக உயிராற்றலானது மூலாதாரத்தில் இறங்கி மையங்கொண்டுள்ளது.

## 226. பிறவிக்கடல்

- பிறவிக்கடல் நீந்துதல் என்ற பெரிய காரணத்திற்காக நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

## 227. பிறவித்தொடர்

- ✪ உலகப் பொருட்களைத் துய்த்தும், நிறைவு பெறாமல் அவற்றைப் பற்றி மனதைப் பறிகொடுத்து நிற்பது. நிறைவு பெறும் வரையில் உலகக் கவர்ச்சியினால் பிறவித் தொடர் நீளுகிறது.
- ✪ இயற்கை ஒழுங்கமைப்பின், காரணம், விளைவு என்ற சட்ட ஒழுங்கு அறியாமல் தவறுகளைச் செய்து பழிச்சுமைப் பதிவுகளை தனது ஆன்மாவின் களங்கமாக ஏற்றுக்கொள்ளு கிறான். இக்களங்கம் நீங்கித் தூய்மை பெறும் வரையில் வான் கவர்ச்சி கிட்டாது. உலகுக்கு கவர்ச்சிக்கு ஆளாகிப் பிறவித் தொடர் நீள்கிறது.
- ✪ தற்சோதனை மூலம் தனது பாவப் பதிவுகளை உணர்ந்து 1. பிராயச்சித்தம்; 2. கடமையறத்தால் அழித்து ஒழித்தல்; 3. பரம்பொருளுணர்வால் தூய்மை ஆக்குதல் என்ற மூன்று வழிகளால் பாவப்பதிவுகளை நீக்கித் தூய்மை பெற்றால்தான் பிறவித் தொடர் அறும்.
- ✪ நான் எங்கிருந்து எவ்வாறு இவ்வுடலுடன் கூடிய சீவனாக ஏன் வந்தேன் என்ற உண்மைகள் அறியும்வரையில் வான் கவர்ச்சி

கிட்டாது. பூ கவர்ச்சியில் தான் சிக்கி ஆன்மா தவித்துக் கொண்டிருக்கும். தவத்தாலும், தத்துவ விளக்கத்தாலும் பரம் பொருளுணர்வு பெற்று சீவனைப் பரத்தோடு அறிவின் முழுமையில் ஐக்கியப்படுத்தும் வரைக்கும் பிறவி நீடித்துக்கொண்டு போகும்.

✪ உண்மையிலேயே பிறவிக்கடலை நீந்தி, பரம்பொருளோடு கலப்புற்று உய்ய வேண்டுமென ஆர்வம் உடையோர் மெய் விளக்கத் தவமன்றத்தில் தொடர்பு கொள்ளுங்கள்.

## 228. பிறவியின் நோக்கம்

✵ உனக்கு முன்னும் பின்னும், சூழ்ந்தும், ஊடுருவியும், செயல் ஆற்றிக் கொண்டிருப்பது இயற்கையின் பேராற்றல். இது அணு முதற்கொண்டு, அண்டம் ஈறாக ஒழுங்கு தவறாமல், இயங்கிக் கொண்டிருக்கிறது. மனிதச் செயல் ஒவ்வொன்றுக்கும் தக்க விளைவை இன்பமாகவோ, துன்பமாகவோ அளித்துக் கொண்டிருக் கிறது. இந்த உண்மையை மறவாதே! இப்பேராற்றலை மதித்து உனது செயலில் அளவு முறை, ஒழுங்கு இவற்றைக் கடைப்பிடி. இதுவே உணர்ந்த தெய்வ வழிபாடாகும். அப்பேராற்றலோடு இணைந்த மனம் - உணர்ந்த நம்பிக்கை கொண்ட மனம் என்றும் வெற்றியும் - மகிழ்ச்சியும் - அமைதியும் பெற்று நிறைவு நிலையிலிருந்து வரும். பிறவியின் நோக்கமும் ஈடேறும்.

## 229. பிழைப்பு

❀ மனிதன் செத்துக்கொண்டே இருப்பதிலிருந்து தப்பித்துக்கொண்டே இருப்பதைத்தான் பிழைப்பு என்று சொல்வது ஆகும். மரணத்தி லிருந்து தப்புவது பிழைப்பு.

## 230. புகழ்

✻ புகழை விரும்புவையேல் அந்த வேட்பே புகழ் அணுகாமல் துரத்தும் சக்தியாகும்.

✻ மனிதன் எவ்வளவு தெரிந்துகொண்டிருக்கின்றான் என்பதில் புகழ் இல்லை. என்ன நல்ல செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக் கின்றான் என்பதில்தான் புகழ் இருக்கிறது. புகழ் என்பது தன்முனைப்புக்குப் போடும் தூபமில்லை. உங்கள் செயலில்

நல்விளைவினால் பயனடையும் மக்கள் உள்ளங்களுக்குக் கொடுக்கும் மதிப்புணர்வே புகழ் ஆகும். நீங்கள் புகழைத் தேடுவீர்களானால் உங்களது இந்தப் புகழ் மோகமே உங்களது அந்தப் புகழை விரட்டி அடிக்கக்கூடிய சாட்டையாகும்.

* தன் புகழைத் தானே பேசித் தருக்குறுவோன் செய்கையினால் நன்மையிரா.
* கடமையின் மூலமாகப் பெறும் புகழ்தான் உயர் புகழாகும்.
* உலகத்துக்கு நன்மையான காரியங்களைச் செய்து அதனால் மக்கள் பயனடைந்து, மனநிறைவு பெற்று அளிக்கக்கூடிய வாழ்த்துத் தான் புகழ்.
* செய்த செயலாலே பயன் பெற்றவர்கள் உள்ளம் பொங்கி வருகிறது பாருங்கள். அந்தப் பூரிப்பிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டியதுதான் புகழாகும்.

## 231. புகைபிடித்தல்

- புகையிலைப் புகையில் உள்ள நிக்கோட்டின் என்ற நச்சுப் பொருள் ஜீவவித்துக் குழம்பின் சுரப்பியை வறட்சியுறச் செய்து விடுகிறது. அது மனித உடலின் மொத்த இயக்கத்தையும் பழுதுறச் செய்து விடுகிறது. எனவே, மனவளக்கலையும் பயில்வது, புகையும் பிடிப்பது என்பது எப்படிப்பட்டது என்றால், ஓட்டை உள்ள ஒரு பாத்திரத்தில் நீர் சேமிப்பதுபோல் ஆகும்.
- புகைப்பிடித்தலை விடுதல், வேண்டாத அனுபவங்களை விடுதல், இதெல்லாம் ஆன்ம தூய்மைக்கும், அறிவு மேம்பாட்டிற்கும் உரிய முன்நிபந்தனைகள் ஆகும். ஒருவரால் புகைப்பிடிப்பதை விட முடியவில்லை என்றால், அவர் தனது வாழ்க்கையில் வேறு எதைச் சாதித்துவிட முடியும்? ஆகவேதான் புகைபிடித்தல் விஷயத்தில் நான் அவ்வளவு கண்டிப்பாக இருக்கிறேன். அதுவும் அவர்கள் நன்மைக்காக என்பதினாலேயே.
- புகைப்பிடிப்பதை விடுங்கள், அல்லது மனவளக்கலையை விட்டுவிடுங்கள். புகை, யோகம் இந்த இரண்டிலே எதையோ ஒன்றை மட்டும் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் புகைக்கும், யோகத்திற்கும் ஒத்துக்கொள்வது இல்லை. அவை இரு துருவங்கள் மாதிரி. ஒன்று இருக்கும் இடத்தில் இருக்க இன்னொன்றால் முடியாது.

## 232. புலனடக்கம்

❖ முதன்முதலாகச் சித்திரம் எழுதப் பழகுபவனுக்கு எண்ணத்தில் உள்ளபடி உருவம் அமைவதில்லை. பழகப் பழக எந்தவிதமாக எண்ணுகிறானோ, அவ்விதமே அவன் எழுதும் உருவமும் அமைந்துவிடுகிறது. இதுபோன்ற ஆராய்ச்சி முடிவுகளில் அறிவின் விழிப்புடன் செயலாற்ற வேண்டுமென முயற்சிப்பவர்களுக்கு ஐம்புலன்களும் உடனே கட்டுப்பட்டுவிடா. பழகப்பழக, எதை எண்ணுகிறார்களோ அவ்விதத்திலேயே செயலாற்றும் திறமையும், வல்லமையும் ஏற்பட்டுவிடும். ஆகவே பொறுமையோடு திடமனத்துடன் நீடித்துப் பழகி இலட்சிய எல்லையை அடைய வேண்டும்.

❖ நின்றிடு அகண்டாகாரம் நிலையினில் வென்றிடுவாய் புலன் ஐந்தையும் வெற்றியே.

## 233. புலன் அறிவு

▲ ஐம்புலன் வழியாகத் தனக்கும் பிற தோற்றங்கட்கும் அல்லது இருவேறு தோற்றங்கட்கும் இடையே - பருமன் - விரைவு - காலம் - தூரம் ஆகிய நான்கு வகையில் ஒன்றோடொன்றை ஒப்பிட்டுக் காணும் வேறுபாட்டை உணர்வதும் அவ்வாறு உணரும்போது உடலுக்கும் உயிருக்கும் இடையே ஏற்படும் உயிராற்றலின் சிதைவான அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மனம் உணர்வு இவை மூலம் இன்பமாகவோ துன்பமாகவோ அனுபவமாகக் கொள்வதும் புலன்அறிவு ஆகும்.

▲ புலனறிவானது - தன்வரையில் எல்லை கட்டிக்கொண்டு தனது நிலை மறந்த உணர்ச்சிவயமாகிச் சூழ்நிலைகட்கொப்ப ஆறு குணங்களாக மனம் மாற்றமடைகிறது. இந்த நிலையில்தான் துன்பங்களைப் பெருக்கும் பழிச் செயல்களும் அவற்றின் பதிவுகளும் ஏற்படுகின்றன.

## 234. புலன்கள்

⁕ புறப்பொருளோடு புலன்கள் மூலம் தொடர்பு கொள்ளுகின்ற போது, நாமே அப்பொருளாக மாறிவிடுகிறோம்.

## 235. புலன்கவர்ச்சி

✪ புலன்கவர்ச்சியில் சிக்கி நிற்கும்போது விளைவறியாமல் எண்ணுதலும் பேசுதலும் செயல்புரிதலும் இயல்பு.

## 236. புலால்

✤ கொல்லான் புலாலை கைகூப்பி மறுத்தானை எல்லா உயிரும் தொழும்.

## 237. புராணம்

➭ உண்மைச் சம்பவங்களையும் நிஜக் கதாபாத்திரங்களையும் வைத்துக்கொண்டு, கற்பனைச் சம்பவங்களையும், பாத்திரங் களையும் சேர்த்துக்கொண்டு கதைகள் புனைந்து இயற்கை உண்மைகளும் வாழ்வின் உண்மைகளும் கலை மற்றும் அழகு தோன்ற விளக்கப்படும்போது, அவ்விளக்க நூல்களைப் புராணங்கள் என்கிறோம். முழுக்கமுழுக்கக் கற்பனைச் சம்பவங்கள் கதா பாத்திரங்கள் கொண்ட புராணங்களும் உண்டு.

## 238. புறம்பேசுதல்

✪ உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசினால் உள்ளொளி தீயாகி உடலைக் கெடுத்துவிடும்.

## 239. புண்ணியம்

✵ எண்ணம், சொல், செயல் ஆகிய ஏதொன்றாலும் தனக்கோ, பிறருக்கோ, தற்காலத்திலோ, பிற்காலத்திலோ, அறிவிற்கோ, உடலுக்கோ, துன்பம் தராது விழிப்போடு துன்பங்கள் நீங்கும் வகையில் செய்யப்படும் செயல்கள் யாவும் புண்ணியம் எனப்படும்.

## 240. பூரணம்

❀ எங்கும் நிறைந்தது. வற்றாயிருப்பு.

❀ பூரணம், பிரம்மம், அறிவு, ஆற்றல் எல்லாம் ஒன்றே.

❀ தமிழில் வற்றாயிருப்பு என்ற பெயரை அதிகமாகக் கேட்டு இருக்க மாட்டீர்கள். 'பூரணம்' என்ற ஒரு வார்த்தை இருக்கிறது இல்லையா? பூர்ணம் என்பது வடமொழி வார்த்தை. அதற்கு 'அட்சயம்' என்று சொல்வார்கள். சயம் என்றால் குறைந்து கொண்டே போவது. அதற்கு 'அ' போட்டுவிட்டால் அ + சயம் = அட்சயம். குறையவே குறையாது. எவ்வளவு எடுத்தாலும் அது குறையாது. அத்தகைய ஒரு தன்மை உடையது இறையாற்றல்.

## 241. பூஜ்யம்

* பூஜ்யம்தான் முழுமையான எண். மற்ற எண்களுக்கு மதிப்பு வைத்திருக்கிறோம். பூஜ்யத்திற்கு மதிப்பு ஒன்றுமில்லை என நினைக்கிறோம். ஆனால், அதுவா ஒன்றுமில்லை? 1 என்ற எண்ணினை எடுத்துக் கொள்ளுங்கள். பூஜ்யத்திற்குப் பின்னால் இந்த 1ஐ வையுங்கள். இப்போது அதன் மதிப்பு 10. பூஜ்யமோ ஒன்றுமில்லை. ஒன்றுமில்லாததை மதித்து அதற்குப் பின்னால் 1ஐ வைத்தால், அதன் மதிப்பு பத்தாகிவிட்டது. பூஜ்யத்திற்கு ஒன்றுமே இல்லாதபோதும் பூஜ்யத்தை அலட்சியப்படுத்தி 1ஐ முன்னால் போட்டால் 1இன் மதிப்பு பத்தில் ஒன்று. அது போன்று இறைவனே நிறைவானவன். தனக்கென்று தனி மதிப்பு இல்லாதவன். யார் அவனைச் சேர்ந்தார்களோ, அவர்களுடைய மதிப்பை உயர்த்தக்கூடியவன்.

## 242. பெண்

➢ பிரபஞ்ச உற்பத்தியில் உயிரினத் தோற்றங்கள் யாவும் இயற்கை பெண்ணினத்திடம்தானே ஒப்புவித்திருக்கிறது? அது பெண்ணினத் திடம் உள்ள பெருமை.

➢ ஆண்களைப்போல் பெண்களுக்கும் எல்லாத் துறைகளிலும் சம உரிமை அளிக்கப்படும். மேலும் இயற்கையாக பெண்பாலுக்கென அமைந்த உடலமைப்புக்கள் ஒத்த அவசியமான வசதிகளும் அளிக்கப்படும் என்பது உலக அமைதிக்கான தீர்மானங்களில் முக்கியமானதாகும்.

➢ விலைக்காக பெண்மைதனைப் பயன்படுத்தும் வீணர்களின் செய்கைக்கு முடிவு காண்போம்.

- பெண் வயிற்றிலுருவாகிப் பின்னு மந்த பெண் கொடுத்த பால் உண்டே வளர்ந்து மேலும் பெண் துணையால் வாழுகின்ற பெருமை கண்டு பெண்மைக்கே பெருமதிப்பு தந்து உள்ளோம்.
- எந்த வீட்டில் பெண்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்களோ அந்த வீட்டில் திருமகள் வசிப்பாள்.
- நம் நாட்டின் பண்பாட்டின்படி பெண்கள் இயற்கையிலேயே தியாகிகள்.
- பெண்கள் கணவன் வீட்டுக்கு வரும்போதே தாய்தந்தை பிறந்த வீட்டுச் சூழ்நிலை எல்லாவற்றையும் துறந்துதான் வருகிறார்கள்.
- பெண்ணினத்தை எங்கெவரும் எவ்விதத்தும் பெருமைகுன்ற அவமதித்தால் சகிக்க மாட்டோம். பெண்மைக்கு நமது கடன் ஆற்ற வாரீர் - பெருந்திரளாய் கூடி ஒரு முடிவு செய்வோம்.
- கற்பு, அன்பு, பொறுமை, சகிப்புத்தன்மை, தியாகம், தூய்மை, ஒற்றுமை ஆகிய குணங்களின் மொத்த உருவம்தான் பெண்.
- பெண் சிசுவைக் கொல்வது என்பது எதிர்கால ஆண்களின் வளமான வாழ்வைக் கொல்வதாகும்.
- பெண் துணையால் வாழ்கின்றோம் பெண்மையின் பெருமையை உணர்வோம்.
- ஆண்களுக்கு பெண்கள் அடிமையும் அல்லர் - உணர்ந்தவர்களும் அல்லர் - சமமானவர்களுமல்ல. ஆனால் இயற்கையமைப்பாலும் சமுதாய அமைப்பிலும் பெண்கள் ஒரு சிறப்பு நிலையுடையவர்கள் என்பதை அனைவரும் உணர்ந்து ஆண்களும் பெண்களும் ஒருங்கிணைந்த உயர்கருத்தில் வாழ வேண்டும்.
- பெண்ணினத்திற்கு ஆண்கள் செய்ய வேண்டிய கடமைகளை, நன்றி உணர்வுகளை ஆண் மக்கள் மறந்துவிட்டிருக்கிறார்கள்.

## 243. பெரியோன்

- அறிவு, சுகம், பொருள், அரசியல், விஞ்ஞானம் ஐந்து தத்துவங்கள் அறிந்தவன் பெரியோன்.

## 244. பெருமை

▲ யார் ஒருவர் பெருமையை எண்ணி, அந்தப் பெருமையைத் தன் பெருமையாக நினைக்கிறார்களோ, அந்தப் பெருமை அழிந்துவிடும். தான் எண்ணி வருவதல்ல பெருமை. தான் செய்யும் செயலினாலே, அதன் விளைவைத் துய்த்த மக்கள் காட்டும் உணர்வுதான் பெருமையே தவிர, தனக்குப் பெருமை வரவேண்டும் என்று நினைத்து, செய்த பெருமை பெறுவது என்பது ஏற்படாது. ‘செய்த செயலினாலே பலன் பெற்றவர்களின் உள்ளம் பொங்கி வருகிறது பாருங்கள்’. அந்தப் பூரிப்பிலே வரக்கூடியதுதான் பெருமை.

## 245. பெற்றோர்

⁎ குழந்தைகள் மனதில் நம்பிக்கையை செதுக்குகிற சிற்பிகள்தான் பெற்றோர்கள்.

⁎ பிள்ளைகள் மத்தியில் பெற்றோர் சண்டையிடாதீர்.

## 246. பேச்சும் எழுத்தும்

✻ இனிமையான பேச்சைக் கொண்டும் கருத்து செறிந்த எழுத்து வன்மையைக் கொண்டும் ஒரு மனிதன் உயர்ந்தவன் என்று எண்ணிவிடக் கூடாது. ஏன்? மனிதன் வாழ்க்கைமுறை, ஒழுக்கம் அவன் புரிந்துவரும் சமுதாய சேவை இவற்றையொட்டி அவன் கருத்துக்கள் பேச்சாகவோ எழுத்தாகவோ மலருமானால் அக்கருத்துக்களுக்கும் அவற்றை வெளியிடும் அறிஞர்களுக்கும் தலை வணங்குவோம். அவர்களோடு ஒத்துழைப்போம். அவர் களைப் பின்பற்றி நடப்போம்.

## 247. பேதமை

✤ ஓதி உணர்ந்தும், பிறர்க்குரைத்தும், தானடங்கா பேதமையே பேதமை.

## 248. பேட்டர்ன் – பிரிசிசன் – ரெகுலாரிட்டி

▲ பேட்டர்ன் என்பது ஸ்ட்ரக்சுரல் வேல்யு - அமைப்பு. அதாவது எல்லோருக்கும் உடல் அமைப்பு ஒரே மாதிரித்தானே இருக்கிறது?

இரண்டு கை - இரண்டு கால் - ஒரு வயிறு. இது பேட்டர்ன். ஒவ்வொன்றும் இவ்வாறுதான் இயங்க வேண்டும். தானாகவோ அல்லது இன்னொரு பொருளோடு சேர்ந்தோ இவ்வாறுதான் இயங்க வேண்டும் என்று ஒரு நிர்ணயம் இருக்கிறதல்லவா? அதுதான் பிரிசிசன். அதேபோல, காலத்தால் ஒவ்வொரு மாற்றம், ஒவ்வொரு சிறப்பு உண்டாகிக் கொண்டேயிருக்கும். இதுதான் ரெகுலாரிட்டி என்பது.

## 249. பேரணு

- பேரணு (எலிமென்ட்) என்கின்ற ஒரு பொருள் பற்றியும், அதன் அமைப்பு பற்றியும் விளங்கிக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

## 250. பேரறிவு

- பஞ்சபூதங்கள், பஞ்ச தன் மாத்திரைகள், அவற்றை உணரும் மனம்.
- தன்னைப் பற்றிய அறிவுதான் உண்மையான பேரறிவு, சக்தி, வாழ்வின் பயன்.

## 251. பேராற்றல்

- பிரபஞ்சத்தை தாங்கிக் கொண்டிருப்பது. தன்னிறுக்க அழுத்தம் மற்றதைச் சூழ்ந்தழுத்தும் ஆற்றல் உடையது.

## 252. பேராசை

- முறைப்படுத்தாத ஆசை பேராசை. ஆசை முறைகெட்டுப் போனால் பேராசை...
- 'தான்', 'தனது' என்ற எண்ண எழுச்சி இரண்டுமே இச்சையின் வயப்பட்டவை. இவ்விரண்டும் சேர்ந்து பெற்ற முதல் குழந்தை பேராசை. எவ்வளவுதான் இருந்தாலும் அதற்கும் மேலே வேண்டும் என்ற பரபரப்பு ஒருவனுக்கு வருகிறது. ஏனெனில் எல்லாம்வல்ல

இறைநிலை அல்லவா அவனின் உள்ளே இயங்கிக் கொண்டிருக்கிறது. அது எங்கே இருந்தாலும் விரிவடைந்துகொண்டே இருக்கின்ற தன்மையுடையது.

- பேராசையில்லா எண்ணத்திற்கு எல்லாத் தேவைகளும் இயற்கையிலேயே கிடைக்கும்.

## 253. பேராசைக்காரர்கள்

- பேராசைக்காரர்கள் மத்தியில் நேர்மையுள்ளத்தோடு தொழில் புரிகின்ற சிலர்கள் எண்ணற்றோர் இருக்கின்றார்கள் என்றாலும் - பறை மேள சப்தத்திற்கு மத்தியில் வாசிக்கப்படுகின்ற புல்லாங்குழல் ஓசைபோலவே, அவர்களின் சேவை பூரண பயனளிக்க முடியவில்லை.

## 254. பேரின்பம்

- இன்பமும் துன்பமும் இல்லாத நிலையே அமைதி. நிலைத்தும், நீடித்தும், சலிப்பில்லாமலும் உள்ள அமைதியே பேரின்பம்.

- அமைதியென்ற உணர்ச்சியில் மனம் புலன் கவர்ச்சியிலிருந்து விடுபட்டு இயற்கையில் நடைபெறும் அற்புத நிகழ்ச்சிகளைக் கூர்ந்து நோக்கி மனம் நிறைவு பெறுமேயானால் - அதுதான் பேரின்பம்.

## 255. பேரியக்க மண்டலம்

- அது வியத்தகு ஆற்றல்கள் பல ஒருங்கிணைந்து செயல்படும் ஒரு பெருங்களம். இப்பெருங்களத்தில் கோடிக்கணக்கான நட்சத்திரங்களும் கோள்களும் ஒழுங்காக இயங்கிக் கொண்டிருக்கின்றன. தனித்தனியே அவை இயங்கிக் கொண்டிருக்கின்ற போதிலும் பல அண்டங்கள் ஒன்றுசேர்ந்து ஒரு சிறு தொகுப்பாகவும், அவற்றில் பல சேர்ந்து பெரும் தொகுப்பாகவும், அனைத்தும் ஒன்றுசேர்ந்து மனதுக்கு எட்டாத விரிவுடைய ஒரு மாபெரும் மண்டலமாகவும் இருப்பதே பேரியக்க மண்டலம் ஆகும்.

## 256. பேரொழுக்கம்

* பிறர் நலம் காத்துத் தன் கடன் ஆற்றும் வெற்றியே அறம் எனும் பேரொழுக்கம் ஆகும்.

## 257. பொங்கல்

➢ வெட்டவெளி என்ற பெரும்பானைக்குள்ளே வேகுதுபார் அண்டகோடி எனும் அரிசி - அட்டதிக்கும் அறிவாலே துழாவி விட்டேன் - ஆகாகா அதைச் சுவைக்க என்ன இன்பம்! - கிட்டி விட்ட தெந்தனுக்கு இந்தப் பொங்கல் கேட்டவர்க்கெல்லாம் தருவேன் தகுதியானால் - தொட்டுத்தான் அதைக் கொடுப்பேன் சூடேறாது - சுவைக்கச் சுவைக்க இன்பமிகும் சூட்சுமப் பொங்கல்.

## 258. பொய்

❖ பொய் கூறும் பழக்கம் இருந்தால் - உயிர் - அறிவு - மனம் இம் மூன்றும் அடிக்கடி பிணக்குற்று இவற்றிற்கிடையே பொருந்தா நிலைமை உருவாகிவிடும். இதனால் மனஅமைதியிராது. சிந்தனையில் சீர் அமையாது. இதனையறிந்து உண்மையே பேசிப் பழகிக் கொள்ள வேண்டும்.

## 259. பொருள்

▲ இல்லாததே இருப்பன. இருப்பன இல்லாதுபோம். நில்லாதவை நிகழ்ச்சியால் நின்ற மிச்சமே பொருள்.

▲ நிலையாக இருந்த ஒரு பொருள் அசைந்தது. அசைந்தால் அலை. நின்றால் நிலை. இருந்த நிலையில் மெய் எழுந்தால், இயக்கத்தில் உயிர். மொழி இலக்கணத்தில்கூட மெய் அசையாதது. ஒலிக்கும் போது உயிரெழுத்து அசைகிறது. இருப்பு நிலையாக இருந்தது தான் பொருள் என்றால் அது இயக்கத்திற்கு வரவில்லையெனில் பொருள் இல்லை.

▲ எது அசைந்து கொண்டிருக்கிறதோ, எது மாற்றம் அடைந்து கொண்டு இருக்கின்றதோ அது நிகழ்ச்சி. அந்த மாற்றத்தையும், அசைவையும் கழித்துவிட்டால் எது மிச்சம்? அது பொருள்.

## 260. பொன்

* பொன்னும் பணமும் புகை போன்றது.

## 261. பொருளாதாரம்

* பொருளாதாரத் துறையில் மனித வாழ்விற்குத் தேவை, தேவை யற்றவை, அளவு, இவற்றை நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்.
* பொருளாதார ஏற்றத்தாழ்வு என்பது மட்டும் நீங்கிவிட்டால் ஒழுக்கம், அறிவுடைமை, அன்பு, அமைதி, சமத்துவம், சமாதானம் அனைத்தும் ஏற்பட்டு விடும்.
* பொருட்களை வேகமாக உற்பத்தி செய்துவிடுவதால் மாத்திரம் பொருளாதார முன்னேற்றம் வந்துவிடாது.
* தனிமனிதன் வாழ்வில் அமைதி, சமுதாயத்தின் அமைதி, உலக அமைதி என்ற மூவகை அமைதிக்கும் பொருளாதார சமத்துவம் மிகவும் அவசியம்.

## 262. பொருந்தாத் திருமணம்

* வயது பொருந்தாத் திருமணத்தால் வாடிப்போன பெண்கள் எத்தனையோ பேர். இந்தக் குறையைப் போக்கி நிறைவு காணவேண்டும்.

## 263. பொறாமை

* பொறாமை வேறு சினம் வேறு அல்ல.
* பொறாமை என்பது பொறுக்க முடியாமை என்று பொருள் படும். பொருள், புகழ், அதிகாரம், அனுபோகம் என்ற நான்கு வகையில் தனக்கு மேலாகவோ - தனக்கு சமமாகவோ இருப்பதை அறியும்போது அதை பொறுக்க முடியாத ஒரு குறுகிய எல்லையையுடைய மயக்கமான மனோநிலையே பொறாமையாகும்.
* பொறாமை ஏற்பட்ட நெஞ்சத்தவனுக்குத் தான் எவ்வளவுதான் சிறப்பாக வாழ்ந்தாலும் அதில் திருப்தி ஏற்படாது. பிறருடைய

நிலையைக் கண்டு பொறாமைப்பட்டுக்கொண்டே இருப்பதால் தனது ஆற்றல் கரைந்து, கடமை மறந்து நாளாவட்டத்தில் பயனற்றவனாகவும் மாறிவிடுகிறான்.

- பொறாமை கொண்டவனுக்கு அவனுடைய முயற்சியில் பெரும் பகுதி பிறர் அடையும் இன்பங்களைக் கெடுத்து துன்பத்தை விளைவிக்கவே செலவாக நேரிடுகிறது. இதைத் தொடர்ந்து சமுதாய வாழ்வில் மக்களுக்கு பலவிதமான துன்பங்களும் ஏற்படுகின்றன. பெருகுகின்றன.
- நல்வாழ்வை விரும்பும் எவரும் தன்னிடம் பொறாமை என்பது ஏற்படும்போதே அதனை கூர்ந்தறிந்து போக்கிக் கொள்ள முயலவேண்டும்.

## 264. பொறுமை

- பொறுமையாக இருப்பது ஒரு பலமான கவசம்.
- பொறுமையை அளக்கும் அளவீடு எது? எந்த அளவீட்டாலும் அளக்க முடியாது. காரணம் அதற்கு எல்லை இல்லை. இறை நிலைக்கு எல்லை உண்டா? இல்லை. பொறுமைக்கு எல்லை உண்டா? இல்லை.
- எவ்வளவு பெரிய குழப்பமானாலும் பொறுமை ஒன்றினாலேயே வெற்றி கண்டுவிடலாம். கர்வம் இதற்கு உதவும்.

## 265. போகம்

- போகம் என்றாலே இன்பத்தை அனுபவிப்பதுதான். மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து புலன்களினால் நாம் அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணமாக, எந்தப் பொருளோடு தொடர்பு கொள்வதன் மூலம், இன்பத்தை அனுபவித்தாலும், அந்த அனுபோகம்தான் போகம். போகம் என்பது இல்லறத்தார்க்கும் துறவறத்தார்க்கும் பொதுவான வாழ்க்கை மகிழ்ச்சி.

## 266. போர்

- ஒரு போர் நிகழ்ந்தால் ஒரு பகுதி மக்கள் மற்ற பகுதியினரால் கொலை செய்யப்படுகிறார்கள். கொலையாளிகள் வெற்றி

பெற்றவர்களாக உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மீண்டும் ஒரு போர் வந்தால் இதேபோன்று வெற்றி பெற்ற கொலையாளிகள் மாத்திரம் மீதமாகிறார்கள். இவ்வாறு தொடர்ந்து சென்றால், உலகில் கொலையாளிகள் மாத்திரமேதாம் வாழ முடியும்.

❀ இரண்டு நாடுகளுக்கும் இடையே நடக்கும் போரின் விளைவு களையும், கொடுமைகளையும் தியானத்தின் மூலம் ஏற்படக்கூடிய மனஅமைதியினால் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும். நிறுத்த முடியாது. தியானம் செய்தாலும் தனிமனிதனுடைய மனோசக்திக்கு ஓர் எல்லை உண்டு. போர் வெறியர்கள் அத்தனை பேருடைய மனதையும் மாற்றக்கூடிய அளவுக்கு தியானம் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது என்றால் போர் நின்றுவிடும்.

❀ சமூகத்தில் அழிவை ஏற்படுத்தக்கூடிய கொடிய செயல்கள் எல்லாம் போர் முறைகளின் அடிப்படையில் வீரச் செயல் களாகவும், தேசப்பற்றுமிக்க செயல்களாகவும் மதிக்கப்படுகின்றன.

❀ பொருட்களை உருவாக்குவதில் மனித சமுதாயத்தின் ஒட்டு மொத்த உழைப்பும் உட்படுத்தப்பட்டிக்கிறது. சாதாரணக் குடிமகன் போரை விரும்பாதபோதிலும், அவன் நேரடியாகவோ, மறை முகமாகவோ தள்ளப்படுகிறான்.

## 267. போராட்டம்

* பழக்கத்திற்கும் கூர்ந்த விளக்கத்திற்கும் இடையே பாருலகில் மனிதரெல்லாம் போராடுகின்றார்.

## 268. யந்திரம்

➢ மந்திரங்களை உச்சரிக்கும்போது உச்சரிப்பவரின் ஜீவகாந்த ஆற்றல் உயருகிறது. அதேநேரத்தில் என்ன தேவையோ, அந்தக் கருத்தை மனம் இணைத்து அனுப்ப ஒரு மீடியம், ஒரு மையப் பொருள் வேண்டும். அது ஒரு உருவமாகவோ, படமாகவோ, மலராகவோ, தண்ணீராகவோ, தகடாகவோ இருக்கலாம். அதுதான் ‘யந்திரம்’ என்று சொல்லப்படுகிறது.

## 269. யுக்தி

❖ ஒவ்வொருவரிடமும் உள்ள ஆறாவது அறிவைக் கொண்டு ஆழ்ந்து சிந்திக்கும்போது, மனமானது உள்நோக்கி நின்று, அதற்கு அடிப்படையாக உள்ள இறைநிலையோடு தொடர்பு கொள்கிறது. அந்த நிலையில் ஒரு மனிதனுடைய சிக்கல் களுக்கு உள்ள தீர்வு களை உணரும் நுண்மையான அறிவாற்றலை யுக்தி என்பார்கள்.

## 270. யுத்தம்

▲ பெருந்துன்பம் விளைவிப்பது யுத்தம் ஒன்றேயாகும். யுத்தம் நிறுத்தப்பட்டால் - பொருளாதார வளர்ச்சி எல்லா பின்தங்கிய நாடுகளையும் மிகக் குறுகிய காலத்திலேயே முன்னேறச் செய்துவிடும்.

## 271. யோகம்

- எண்ணம் தானாக எழுந்து அலையாமல் எண்ணத்தில் எண்ணமாய் இருப்பதே யோகம்.
- பிறவித் தொடரை அறுக்கும் விதத்தில் தூயசெயல் செய்து - வாழும் வாழ்வே யோகம்.
- வினை விளைவையறிந்து அறநெறி வாழ்வு வாழ்வது யோகம்.
- பிற உயிர்களின் துன்பம் நீக்க, தொண்டாற்றி இன்பம் காணும் வாழ்வே யோகம்.
- மயக்கநிலை மாயை; விளக்க நிலை ஞானம்; மயக்க நிலையிலிருந்து விளக்க நிலைக்கு மாற்றமடையும் முயற்சி நிலையே யோகம்.
- இயற்கைக்கும், அறிவுக்கும் உள்ள தொடர்பறிந்து இனிமை காத்தல். இது அறிவே தெய்வமாக உள்ளதை அறிந்து வாழும் பேறு. இவையே யோகம் கற்று வாழ்வதின் நோக்கமாகும்.
- ஜீவகாந்தம் எங்கே உற்பத்தி ஆகிறதோ அங்கேயே மனதைக் கொண்டுவந்து நிறுத்தி விடுகிறோம். அதுதான் தவம். நுண்ணிய நிலைக்கு வந்தவுடன் உண்மை நிலையை உணரத்தக்க அளவுக்கு அறிவுக்கு ஒரு திருப்பம் தரவேண்டும். அத்தகு திறமை உண்டாகத்

தவம் வேண்டும். தூக்கத்துக்குரிய நிலை வந்தும் விழிப்போடு இருக்கிறபோதுதான் ‘சாக்கரம்’ அதுதான் யோகம்.

- யோகம் என்றால் ஒரு சிறந்த வாழ்க்கை நெறி. உடலுக்கும், உயிருக்குமிடையே இனிமை காத்தல்; மனதுக்கும் உயிருக்கும் இடையே உள்ள இனிமை காத்தல்; அதேபோன்ற சமுதாயத்துக்கும் தனிமனிதனுக்கும் இடையே இனிமை காத்தல். இயற்கைக்கும் அறிவுக்கும் இடையே உள்ள இனிமை காத்தல்.
- மயக்கநிலையிலிருந்து ஆன்மா தன்னை விடுவித்துக் கொள்ள ஏற்ற பயிற்சியே யோகம்.
- யோகம் என்ற வார்த்தையே மனத்தூய்மை, வினைத்தூய்மை, பெற்று இறைநிலையோடு மனதை இணைக்கச் செய்கின்ற அற்புதமான கலையைத்தான் குறிக்கும்.
- யோகம் என்றால் இயற்கையின் இனிமை காத்து, இனிமையாக மகிழ்ச்சியாக, நிறைவாக வாழ்க்கை நடத்துவதுதான் யோகம்.

## 272. யோக சித்தி

- மனிதனுடைய அறிதுயில் நிலையையே யோக சித்தி என்றார்கள்.

## 273. யோக வாழ்க்கை

- பிறந்து வந்ததன் நோக்கம் தெளிவாகி, வாழ்க்கையின் குறிக்கோள் விளங்கிவிட்டதாலே விழிப்பு நிலை அடைந்த சாதகன் பிறவியின் பெருநோக்கம் மறவாது தன் செயல்கள் அனைத்தையும் ஒழுங்கு செய்து கொள்ளப் பயிற்சி பெற்றுவிடுகிறான். ‘நான் யார்’ என்ற கேள்விக்கே விடை கண்டு அந்த விடையின் வெளிச்சத்திலே மனத்தூய்மை - வினைத்தூய்மை பெற்று பிறருக்கு வழிகாட்டும் அளவுக்கு தன்னை உயர்த்திக் கொள்ளும் வாழ்க்கையே யோக வாழ்க்கையாகும்.

## 274. யோகான்

- மிக நுண்ணிய காந்த நிலையமே யோகான் எனும் துகள். இந்தத் துகளில் இறைநிலை பொருளாகவும், அலைநிலை இயக்கமாகவும் விளங்குகின்றன.

## 275. யோகி

✪ பார்ப்பவன் யார் எனப் பார்ப்பவன் பார்ப்பனன் - யோகி.

## 276. யோசித்தல் – நேசித்தல் – யாசித்தல்

✵ மனமே இறைநிலையாக மாறும் தன்மை உடையது. கடவுள் என்பது மனத்தின் தோற்றமே. மனம் இயங்காதபோது இவ்வுலகம் தெரியவில்லை. பிரபஞ்சம் இல்லை. இறைவனும் இல்லை. அப்படியெனில் மனமே இறைவனைவிட உயர்ந்ததா என்றால் இரண்டும் வேறல்ல. இறைவனே தான் நம்முள் மனமாக இயங்குகிறான். மனத்தின் அலை வேகம் குறைந்தால் அதன் கருவான அறிவாகி விடும். அறிவே தெய்வமாகவும் உள்ளது. மனம் அறிவானால் 'நான்' அவனாகிவிடுகிறேன். இதை அறிய ஆழ்ந்து நினைத்தல் வேண்டும். இது 'யோசித்தல்'.

✵ ஆழ்ந்த சிந்தனையோடு, அவனருளாலே அவனை அறிய முடியும். அதற்கு அவனை நம்முள் வைத்து இடையறாது வேண்டல் வேண்டும். இது யாசித்தல்.

✵ அவனை அறிந்த தெளிவில், அவனே அனைத்து உயிர்களாகப் பரிணமித்து வந்துள்ளதை அறிந்துகொண்டு, அனைத்து உயிர் களோடும் அன்பு செய்தல் வேண்டும். இது நேசித்தல்.

## 277. ராக்கிங்

❀ நட்புநலம் என்னும் மனிதகுல வாழ்வின் நல்லூற்றினது பெருமையை உணர்ந்து பெற்றோர்கள், கல்லூரிக் காப்பாளர்கள், அரசாங்கம், பொதுமக்கள் என எல்லாத் தரப்பினர்களும் கூடிப் பேசி இத்துறையில் போதிய அக்கறை எடுத்துக்கொண்டு மாணவ சமுதாயம் அமைதியுடனும், மகிழ்ச்சியுடனும் கல்வி கற்ற வாழ்வில் வெற்றியைக் காண வேண்டும். ஒவ்வொரு மாணவனுடைய வாழ்க்கை வளமும், உடல் மற்றும் மனநலமும் சமுதாயத்திற்கே பெருநிதி என்பதை அனைவரும் உணர்ந்து ராக்கிங் என்னும் வேண்டா நிகழ்ச்சிகளை ஒழித்து கடமை செய்து நிறைவு பெறுவோம்.

## 278. லஞ்சம்

* செல்லரித்த புத்தகம்போல் மனிதகுல வாழ்வை சீர்குலைக்கும் நச்சு அன்றோ லஞ்சம் எனும் தீமை.
* வல்லமையில் மிக்கோரும் வாழ்வின் வளம் ஓங்க - வலிந்து வந்து சமூகத் தொண்டாற்றும் அன்பர்கட்குப் புல்லர்களின் கையூட்டு லஞ்சம் உளம் பாய்ந்தால் - பொறுப்பு - கடமை - நீதி பகைந்து போம் விளைவாய் மெல்ல மெல்ல லஞ்சப் பணம் கைமாறிச் சுழல - மிக விரைவில் நீதி கெடும்.

## 279. ராசி

* எந்த ராசியில் பிறந்தவர்களாக இருந்தாலும் மனம் என்பது உண்டு. உயிர் என்பது உண்டு. உடல் என்பது உண்டு. இறைவன் என்பது உண்டு. ஆகையினால் எல்லோரும் தியானம் செய்யலாம். அதனுடைய உயர்வைப் பெறலாம். செய்தால் செயலுக்கு விளைவு உண்டு. அந்தச் செயலுக்கு விளைவு என்பதைத் தெரிந்துகொண்டோமானால் யார் எந்த முயற்சி எந்த அளவில் செய்கிறார்களோ அதற்குத் தகுந்த பலன் கட்டாயம் உண்டு. அதற்கு ராசி வேண்டியதேயில்லை. அதற்குமேல் ராசி சரியாக அமைந்துவிடும்.

## 280. ஞானம்

* ஞானம் என்பது வாழ்க்கை விளக்கு ஆகும்.
* ஒரு தத்துவத்தைச் சந்தேகமற, மாற்ற முடியாது, மாற்ற முடியாத வகையில் அறிந்துகொண்ட திடநிலை ஞானம் எனப்படும்.
* ஞானம் என்றால் அறிவின் தெளிவு என்பது பொதுவான விளக்கம்.
* மனிதன் எளிதாகவும், செம்மையாகவும் வாழ்வதற்கு ஞானம் உதவுகின்றது.
* வாழ்வில் ஞானம் இடம்பெறும் அளவிற்கே மக்களுக்குச் சிறப்பு, வாழ்வில் அமைதியும், மகிழ்ச்சியும் கிடைக்கும்.
* தேகமற, மாற முடியாத, மாற்ற முடியாத வகையில் அறிந்து கொண்ட திடநிலை ஞானம் எனப்படும்.

- ❖ எந்த சூழ்நிலையிலும் சினம் ஒருவனை அணுகவில்லையெனில் அவன் ஞானம் பெற்றுவிட்டான் என்று பொருள்.
- ❖ ஒருவர் பெற்ற ஞானத்தைப் பரிசோதிக்கும் இடம் குடும்ப அமைதியாகும்.
- ❖ அறிவு என்பது அறியப்படுவது ஞானம் என்பது உணரப்படுவது.
- ❖ அறிவை ஏடுகளில் பெறலாம். ஞானத்தை தவத்தால் பெறலாம்.
- ❖ அறிவு அழிவுக்குத் துணை போகும் - ஞானம் ஆக்கத்திற்கு அச்சாணியாக இருக்கும்.
- ❖ வாழ்க்கையையும் வாழ்க்கையின் நோக்கத்தையும் அந்நோக்கத்திற் கேற்ப வாழும் முறை என்ன என்பதை அறிந்துகொள்வது ஞானம்.
- ❖ எல்லாம்வல்ல பரம்பொருள் எனக்கு வேண்டியதை எல்லாம் உரிய காலத்தில் கிடைக்குமாறு உருவாக்கி வைத்திருக்கும்பொழுது, அந்த பரம்பொருள் இயற்கையாக, பிரபஞ்சமாக, உலகமாக, மக்களாக என்னுடைய அறிவாக இருந்துகொண்டு எல்லா வற்றையும் அளித்துக்கொண்டே இருக்கிறபோது நான் எதற்காக அது இல்லை, இது இல்லை என்று குறைபட்டுக் கொள்ள வேண்டும்? பிச்சை எடுக்க வேண்டும்? என்ற தெளிவு உங்களுக்கு ஏற்படுவதுதான் ஞானம்.
- ❖ இயற்கை, சமுதாயம், சூழ்நிலை, தேவை, பழக்கம் என்ற ஐந்து கோணங்களையும் ஒப்பிட்டு சிந்தித்துக் கணித்தும் முற்கால அனுபவம், தற்காலச் சூழ்நிலை, எதிர்கால விளைவுகள் இவற்றின் தொடரை மறவாமலும் வாழும் முழுமை பெற்ற அறிவே ஞானம் ஆகும்.
- ❖ யாரும் ஞானத்திற்காக தம் வாழ்வை அர்ப்பணிக்கத் தேவை யில்லை. காஷாயம் தரித்துக் காடேக வேண்டியதில்லை. நாட்டில் வாழ்வதற்குத்தான் ஞானம் பயன்பட வேண்டும்.
- ❖ வாழ்வில் ஞானமும் ஞானத்தில் வாழ்வும் இணையும் நன்னாளை அண்மையில் கொண்டுவரும் பொறுப்பு நமதாக உள்ளது.
- ❖ இயற்கையமைப்பையும் எண்ணத்தின் ஆற்றலையும் அறிந்து, முற்கால அனுபவ ஞாபகத்தோடு, பிற்கால விளைவுகளை யூகித்து, தற்காலத் தேவைகளைச் சூழ்நிலைகளுக்கேற்பப் பிறருடைய இன்ப, துன்ப இயல்பறிந்து அன்போடும், பண்போடும், எண்ணம், சொல், செயல் இவைகளைப் பயன்படுத்தி வாழ்ந்து வரும் பேரறமே ஞானம் எனப் பேசப்படுகின்றது.

## 281. ஞானாசிரியர்கள்

▲ ஞானாசிரியர்கள் தங்கள் தங்கள் குடும்பத்திலே கணவன், மனைவி உறவிலே, இனிமை காப்பதில் எவ்வாறு நடந்து கொண்டு வெற்றி அடைகிறார்கள் என்பதைப் பொறுத்தேதான், குடும்பத்தி லிருந்தும், வெளியிலிருந்தும் (சமுதாயத்திலிருந்தும்) ஞானாசிரியர் கட்கு ஆதரவு வரும்.

▲ உயிரோ இறைவனுடைய இயக்க மண்டல அறிவோ தெய்வ சொரூபமாகவே இருக்கிறது. உடலோ சமுதாயத்தினுடைய ஒரு கொடை. இதில் 'நான்' எங்கே இருக்கிறது? 'என்னுடையது எங்கே இருக்கிறது?' இந்தக் கருத்தில் ஒரு ஞானாசிரியன் ஒன்றியிருக்க வேண்டும்.

▲ அறிவை இறைவனோடு இணைத்தாயிற்றென்றால் உடலைச் சமுதாயத்துக்கு அர்ப்பணம் செய்துவிட வேண்டும். இப்போது நானென்றோ எனது என்றோ ஒன்றும் மிச்சமில்லை. அதுவே தன்முனைப்பு அற்ற இடம். 'தான்' என்பதும் 'தனது' என்பதும் எப்போது வருகின்றன என்றால் தன்னை ஏதோ ஒரு உருவமாக, ஒரு பெரிய கட்டடம்போல, நினைத்துக்கொள்ளும்போதுதான்.

▲ இறைவனுடைய ஆற்றல் முழுவதும் ஒரு ஞானாசிரியனுக்கு இருக்கலாம். ஆனால் அதைச் செயல்படுத்தும்போது, மனித உருவிலேயே இருக்கும் ஒரு ஞானாசிரியனுக்கு, ஓர் எல்லை வந்துவிடுகிறது. குளமும் குடமும் மாதிரி என்று வைத்துக் கொள்ளுங்கள்.

## 282. ஞானவாழ்வு

⁕ *1.* இயற்கை விதி; *2.* சமுதாய அமைப்பு; *3.* இன்ப துன்ப உணர்ச்சிகள் ஆகிய மூன்று கோணங்களின் இணைப்பிலே வாழ்வு நடைபெறுகின்றது. இம்மூன்று துறைகளையும் பற்றித் தெளிவாக அறிந்து அறிவிலே முழுமைப் பெற்று வாழ்வதே ஞானவாழ்வு ஆகும்.

⁕ வெளிச்சத்தில் தேவையான பொருட்களை எளிதாக இனங்கண்டு கொள்வதைப்போல, படிகள் இருப்பதை அறிந்து எச்சரிக்கையோடு

அடிவைத்து நடப்பதுபோல, முறையாக அடுக்கி வைத்த பொருட்களில் தேவையான ஒன்றை எளிதாக எடுத்துக்கொள்ள முடிவதைப்போல, ஒரு பொருளின் கொள்முதல் விலை நினைவில் உள்ள வணிகன் விற்பனை விலையைச் சரியாகக் கூறுவதுபோல, வாழ்க்கையைத் தெளிவாகவும், சரியாகவும், திறமையோடும் நடந்த ஞானம் உதவுகின்றது. ஞானத்தை புறக்கணித்த வாழ்வு நிறைவற்றது. இனிமையற்றது. அமைதியற்றது.

## 283. ஞானயோகம்

- உயிருக்கு பரத்திற்கும் உயர் அறிவில் ஒழுகுவது ஞானயோகம்.
- முற்றும் உணர்ந்தபின் ஒரு சிறு குடும்பத்திற்குத் தனது கடமையை ஆற்றுவதற்குப் பதில் உலக சமுதாயத்தையே ஒரு குடும்ப மாகக் கொண்டு கடமையாற்றி வாழுகின்ற பெரும் பேறு ஞானயோகம் ஆகும்.
- வேண்டுவோர்க்கும், தகுதியுடையோர்க்கும் இல்லறத்திலேயே ராஜயோகம் பயின்று, ஞானயோகம் என்னும் முழுமைப்பேறு அடைய உதவி செய்கின்ற கடமையே உலக சமுதாய சேவா சங்கத்தின் பெருநோக்கமாகும்.
- புலன் மயக்க நிலையிலிருந்து தெளிந்து புலன்களை அடக்கி யாளுகின்ற ஆட்சி வல்லமை பெற, மனவளக்கலை பயிலும் பிரிவு ராஜயோகம்.

## 284. ஞானவழி

- தானே உணர்ந்து பொறுப்போடு ஆற்றி வாழும் வழி ஞான வழியாகும்.

## 285. ஞானநெறி – பக்திநெறி

- தானே விளங்கிக் கொண்டு வாழ்வது, ஞானநெறி. விளங்கியவர் விளக்க, அதைப் பின்பற்றி வாழ்வது, பக்திநெறி.

## 286. ஞானி

✪ எண்ணத்தை ஆராய்ச்சியிலும் தூய்மையிலும் வைத்திருப்பவன் அறிஞன் மகான் ஞானி.

✪ ஞானியானவன் தான் வாழும் வகையறிந்து தெளிவோடு வாழ்வதோடு, வாழத் தெரியாதவர்களை நல்வாழ்வு எனும் பாதையில் நடத்திச் செல்லும் பேரொளியாகவும் இருக்கின்றன.

✪ ஓம் என்று செபிப்பவனை பக்தன் என்போம், உட்பொருள் உணர்ந்தவனை ஞானி என்போம்.

✪ தன்னிலும் தன் சீடன் உயர்ந்து விளங்கினால் குரு அதைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைவார். தானே அந்த உயர்வை அடைந்திருந்தால் எவ்வளவு மகிழ்ச்சி அடைவாரோ அதைக் காட்டிலும் அதிக மகிழ்ச்சி அடைவார். இது அறிவின் உயிர் நிலையிலே இருக்கக்கூடிய ஒரு பெரிய ஞானியின் விலை.

## 287. மக்கட்பேறு

✵ ஒரு பத்தாண்டு நல்ல முறையில் நமது யோக முறையைப் பழகிவிட்டால், மக்கட்பேறு ஏற்படவே ஏற்படாது. எளிமையான, உயர்வான குடும்பக் கட்டுப்பாடாக எதிர்கால உலக சமுதாயத் திற்கும் நமது இந்த யோகமுறை பயன்தரப் போகிறது.

## 288. மக்கட்பேறின்மை

❀ மக்கட்பேறின்மைக்கு மூன்று காரணங்கள் உண்டு. 1. இளமையில் திருமணம் மறுத்து சன்னியாசம் கொள்ளுதல்; 2. உடல்நலக் கேட்டினால் விந்து கெட்டுப் போய்விடல்; 3. வினைகள் கழிக்கப் பெற்றுப் பரம்பொருளோடு உயிர் இணைந்து நிற்கின்ற தவம் சித்தியாகிவிட்டிருத்தல்.

## 289. மகிழ்போகம்

✻ ஐந்து புலன்கள் மூலமாக இந்த உலகத்தை நல்ல முறையில் எல்லா இன்பங்களையும் ஆனந்தமாக அனுபவித்துக் கொள்ள வேண்டும்.

## 290. மதம்

- வாழ்க்கையை வாழத் தெரியாதவர்களுக்கும், வாழ்க்கை அனுபவமில்லாதவர்களுக்கும் வாழ்க்கையை அறிந்துகொண்டவன் வகுத்துக் காட்டும் வாழ்க்கை நெறி மதம் ஆகும்.
- இறைஉணர்வு, அறவழி போதிப்பதற்கு இதுவரையிலே மகான்கள் எடுத்த முயற்சிதான் அந்தந்தக் காலத்தில் அந்தந்த இடத்திலே தோன்றிய மதம். அவர்கள் சொன்னவற்றுக்குக் காலத்திற்கேற்ற மாற்றம் கொடுக்காமல் அப்படியே வைத்துக்கொண்டு, சடங்குகளாக்கி, 'இதற்கு மேலேயும் போகக் கூடாது, கீழேயும் வரக்கூடாது' என்று சட்டம் போட்டுள்ளார்களே அதுதான் மதம்.
- எந்த மதமும் அதைத் தொடங்கி வைத்த பேரறிஞர்களால் உருவாக்கப் பெற்றிருந்ததே. ஆனால் பின்னர் மதத்தின் அடிப்படைக் கருத்துக்கள் அமுக்கப் பெற்றுச் சடங்குகளும், கற்பனைகளும் முதலிடம் பெற்றன.
- ஆகவே - எதிர்காலத்திற்கும் அனைத்துலக மக்களுக்கும், பொதுவானதாக ஒரேவிதமான வாழ்க்கை ஒழுக்கங்களைப் போதிக்கும் விதிமுறைகளும் தத்துவ விளக்கங்களும் அமைந்த எல்லா மதங்களின் உட்கருத்தையும் அடக்கமாகக் கொண்ட, ஓர் உயரிய நன்னெறி மார்க்கமே போதுமானதாகும்.
- இன்று எல்லா மதங்களின் அடிப்படை நோக்கமும் ஒன்றே என நாம் கண்டுவிட்டதால், இனியும் பல பேதமான பெயர்களைக் கொண்ட வேறுவேறு மதங்கள் மனித இனத்திற்குத் தேவையில்லை.
- உன் மதமே உலகத்தில் உயர்வென்று பேசுகிறீர். எம்மதத்தாரிடம் இல்லை ஏழ்மை பஞ்சமா பாதகங்கள்?
- ஆன்மீகத் துறையினிலே முன்னேறும் அளவிற்கு அமைதியும் இன்பமும் உண்டாகும் மனிதனுக்கு.
- இறைவழிபாடும் அறநெறியும் இணைந்து வாழ்க்கை நெறியை உருவாக்குவதுதான் மதங்களின் நோக்கமாக இருந்தது.

## 291. மதகுருக்கள்

- இன்று ஆன்ம தரிசனம் இல்லாதவர்கள் பெரும்பாலும் மத குருக்களாக வந்துவிட்டமையால் சடங்குகளின் உட்பொருளை விளக்க இயலாதவர்களாகி விட்டனர்.

## 292. மரணம்

▲ இயற்கை விதி அறிந்தால் மரணமில்லாப் பெருவாழ்வு.

▲ மரண பயத்துக்குக் காரணம் அறியாமையே.

▲ உடலுக்கும் உயிருக்கும் பிரிவு ஏற்பட்டால் மரணம்.

▲ வாழ்வு என்பது உடலும் உயிரும் சேர்ந்திருப்பது. ஆயின் மரணம் என்பது உடலை விட்டு உயிர் பிரிந்துபோவது, உயிர் அவ்விதம் பிரிந்துவிடாமல் காக்க வேண்டுமாயின், அந்த உயிரினது நிலைக்களமான வித்துவை (விந்து அல்லது நாதம்) பத்திரமாக வைத்திருக்க வேண்டும். ஏனெனில், உயிரானது உடல் முழுவதும் பரவியிருந்தாலும், அங்கெல்லாம் அது மென்மையான அளவிலே தான் இருக்கும். ஆனால், வித்திலேயோவென்றால், அளவிலும் சரி, அழுத்தத்திலும் சரி, கூடுதலாக இருக்க முடியும். அவ்வாறு எந்த அளவுக்கு வித்தினது தரம் கூடுகிறதோ, அந்த அளவுக்கு உயிர் அங்கே செறிந்து, தேங்கி நிலை கொள்ளும். அந்த அளவிலேதான், நோயும் வராது - மரணமும் தள்ளிப் போகும்.

▲ மரணத்திற்குப் பின் ஆன்மாவின் நிலைகள் நான்கு. அவை: சாலோகம், சாமீபம், சாரூபம் மற்றும் சாயுச்சியம். உலகில் மேலே எழும்ப முடியாத பளு பெற்ற நிலை சாலோகம். நிவர்த்திக்காகக் காத்திருக்கும் நிலை அது. சாமீபம் என்பது சூரியமண்டலம். உலகியல் இன்பங்களில் ஓரளவு நிறைவு பெற்ற நிலையில் நிவர்த்திக்காக ஆன்மா காத்திருக்கும் நிலை அது. சாரூபம் என்பது பிரபஞ்சம். முழு தூய்மை பெற்ற நிலையில் பிரபஞ்ச உயிரோடு இங்கு ஆன்மா கலந்திருக்கும். சாயுச்சியம் என்பது முழுநிவர்த்திக்கப்புறம் சக்திகளத்தையும் விட்டு இறைநிலையோடு கலந்துவிட்ட நிலை. இது ஆத்ம சாதனையாளருக்குத்தான் சித்திக்கும்.

## 293. மரண தண்டனை

⁎ மரண தண்டனைச் சட்டத்தின் மூலம் குடும்பத்தலைவன் இறந்துவிடும்போது, அவனை நம்பி வாழ்ந்தவர்களுடைய நிலை என்னாவது?

## 294. மறை

- மனம், உயிர், மெய் என்று மூன்று பொருட்களும் மறை பொருட்கள். இந்த மறைபொருட்களைப் பற்றி விளக்கும் நூல் ‘மறை’ என்றே கூறப்பட்டது. மறை என்றால் ‘வேதம்’.
- சாதாரணமான பொருட்களைப் பற்றி அறிவது ‘விஞ்ஞானம் அல்லது கலை’ என்று சொல்லலாம். ஆனால் மறைபொருட் களைப் பற்றி கூறக்கூடிய - விளக்கக்கூடிய கலைதான் தத்துவ விளக்கம் என்றும், ‘மறை’ என்றும் கூறப்படுகிறது.

## 295. மறைபொருள்

- மறைபொருள் உண்மையைக் கணிதத்தால் கணிக்க முடியாது. ஐம்புலன்களால் தெளிவாகப் பிரித்து உணரலோ, நுண்ணிய விஞ்ஞானக் கருவிகளால் கணக்கிடவோ முடியாது.

## 296. மனம்

- மனம் ஒரு நிரந்தரமான பொருள் இல்லை. உயிரிலிருந்து தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கும் அலை இயக்கம்தான் மனம்.
- மனம் என்ற நிலத்தில் எது போட்டாலும் விளையும். ஆனால் எது போட வேண்டும் என்று சிந்தித்து போட வேண்டும்.
- மனம்தான் மனித வாழ்க்கையின் விளை நிலம்.
- தவறிழைப்பதும் மனம். இனி - தவறு செய்துவிடக் கூடாது என்று தீர்மானிப்பதும் அதே மனம். தவறு செய்யாத வழியைத் தேர்ந்து ஒழுக வேண்டியது மனமே. மனதைத் திருத்தாமல் புதிய வழியில் செல்ல எப்படி முடியும்.
- மனத்தின் தன்மை எதுவோ அதுதான் மனிதனுடைய தன்மை.
- மனத்தின் உயர்வு எதுவோ அதுவே மனிதனின் உயர்வும்.
- மனத்தை அடக்க நினைத்தால் அலையும். மனத்தை அறிய நினைத்தால் அடங்கும்.
- மனம், இயற்கை, சமுதாயம் என்ற முக்கோணத்துக்குள்தான் மனிதன் வாழ்ந்தாக வேண்டும்.

- மனம் தூய்மை அடைந்தால் அந்த வினாடியே இறையுணர்வு கிட்டும்.
- மனம் ஒரு மாயக் காந்தம்.
- மனமது இயற்கையின் மாபெரும் நிதி.
- மனதை உயர்த்தினால் மட்டில்லா இன்பமே.
- மனம் தூய்மையில் பூரணத்தை அடைந்து அமைதியாக இருப்பதே முழுமைப்பேறு.
- மனம் இல்லாத மனிதனே இல்லை.
- மனமே மனிதன்.
- விலங்குகளுக்கும் மனம் உண்டு.
- அன்றாடம் மனதைக் கழுவிக்கொண்டே இருங்கள்.
- மனத்தை முழுமையாக அறிந்த மனிதன் இல்லை.
- மனத்தின் மாண்பே மனிதனின் மாண்பு.
- மனமதை அடக்கிவிட்டால் மட்டில்லா இன்பம்.
- மனமதை தாழ்த்திவிட்டால் மயக்கத்தால் துன்பம்.
- மனமே மனிதனின் மாபெரும் நிதி.
- மனம், இதன் மனிதன் - மனம் இதயமானவனே மனிதன்.
- உயிரின் படர்க்கை நிலையே மனமாகும்.
- மனித மனம் ஒரு மறைபொருள். புலன்களுக்கு எட்டாதது. அது இல்லை என்று யாராலும் கூறமுடியாத ஒரு பேருண்மை.
- மனமென்னும் ஆற்றலுக்குள் உயிர், அறிவு, தெய்வம் மூன்றும் இருளில் நிழல் போன்று அடங்கியுள்ளன.
- மனமானது அலைச்சலாகவோ, உணர்ச்சிவயப்பட்டோ, கவலையாகவோ இருக்குமேயானால் உடல்நலம் கெடும்.
- மனமானது உயிர், உடல் இவற்றோடு எந்த அளவுக்கு ஒற்றுமையாக இயங்குகின்றதோ அந்த அளவுக்குத்தான் மனிதனின் அமைதி நிர்ணயிக்கப்படுகிறது.
- உயிருணர்வில் பெற்ற அறிவைக் கொண்டு பிரபஞ்சமொத்தத்தையும் அறியலாம். ஏனெனில், சிவனே சீவனாயிற்று. சீவனே மனம் ஆயிற்று. அதாவது சிவனே மனமாக இருக்கிறது.

- உணர்ச்சி என்று ஒன்று தனியாக இல்லை; உயிரே உணர்ச்சியாக மாற்றம் பெருகிறது என்பதை நன்றாக உணர்ந்துகொள்ள வேண்டும். உயிர் உணர்ச்சியாக மலரும் கட்டத்தில்தான் மனம் பிறக்கிறது.
- மனித மனம் என்பது இறைநிலையும், அதில் தோன்றும் காந்த அலையுமேயாகும்.
- மனதைவிடப் பெரிய பொருள் இந்த பிரபஞ்சத்திலேயே இல்லை. ஏனெனில் மனதைக் கொண்டுதான் மனதையும் அறியமுடியும். விஞ்ஞானத்தால் எவ்வளவோ கருவிகளைக் கொண்டும் அறிய முடியாத பிரபஞ்ச ஆற்றலாகிய (Unified Force) இறைவெளியைக்கூட மனம்தான் யூகித்துணருகிறது.
- தூங்குகின்றபோது மனம் ஒடுங்குகிறது என்பார்கள். அப்போதும் அது இயங்கிக்கொண்டுதான் இருக்கும். ஆனால் அது புலன்களைக் கடந்து சூக்குமத்தில் இயங்குகிறது.
- ஓரறிவு பொருளிலிருந்து ஆறறிவு வரையில் உயிர்களாகப் பரிணாமம் அடைந்த உச்சத்தில் மனிதன் இருக்கிறான்.
- மன இதன் என்ற இரண்டு வார்த்தை சேர்ந்ததுதான் மனிதன். மனதை இதமாக வைத்துக் கொள்ள வேண்டும். முரண்பாடாக இல்லாமல் (இதம் - இணக்கம்).

## 297. மன அமைதி

- மனம் அமைதி பெற்றால் உயிராற்றலும் அமைதி பெறும். உடல் செல்கள் அமைதி பெறும். இந்நிலையில் நான் உடல், மனம், உயிராற்றல் மூன்றும் ஒருங்கிணைந்து, பிணக்கின்றிச் செயல்படும்.
- இயற்கையில் முழுமையை உணர்ந்து, பிறவிப் பயனை எய்துவதற்கு மனிதனுக்கு மனஅமைதி தேவை.

## 298. மனத்திண்மை

- தவத்தின் மூலமாக மனத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டால், நுண்மைப்படுத்திக் கொண்டால், திடப்படுத்திக் கொண்டால், மனத்திண்மை (வில் பவர்) என்று சொல்லக்கூடிய ஒரு ஆற்றலைப்

பெற்றுக்கொண்டால், இவ்வுணர்வுகளைக் கொண்டு சிந்தனை செய்யச் செய்ய நமக்குள்ளாக உள்ள குறைபாடுகளை உணர்ந்து கொள்ள முடியும்.

## 299. மன இயக்கம்

❀ புலன்களோடு இணைந்து மனம் இயங்குகின்றபோது, அந்த மனஇயக்கத்தை பீட்டா அல்லது (பீட்டா வேவ்) அதாவது உணர்ச்சிவயப்பட்ட நிலை என்று கொள்ளலாம்.

❀ அமைதி நிலையான ஆல்பா அலை (ஆல்பா வேவ்) நொடிக்கு 87 முதல் 132 வரையில் ஓடக்கூடியது. அந்த நிலைதான் வானஇயல் (அஸ்டிரானமி) முதலிய அகண்ட காட்சிகள் உணரப்பெறும்.

❀ தீட்டா அலை (தீட்டா வேவ்) என்றொரு நிலை உள்ளது. இதில் மனஅலைச் சுழல் நொடிக்கு நான்கு முதல் ஏழு வரையில் அமையும். இந்த மனநிலையில் கோள்களின் உற்பத்தி இரகசியங்களும், இயக்க நியதிகளும் விளக்கமாகும்.

❀ டெல்டா அலை (டெல்டா வேவ்) ஒரு நொடிக்கு ஒன்று முதல் மூன்று வரையில் சுழற்சி உடையது. இது பொதுவாக மனித அறிவுக்குக் கிடைப்பதே அரிதாக இருக்கும். நோயுற்று, அறிவியக்கம் தடைபட்டபோது கோமா என்று சொல்வார்களே அதுதான் இது.

❀ நோயாளிகளிடத்தில் டெல்டா வேவ் ஆனது கோமா எனப்படும். தவச்சீலர்களுக்கு இறைநிலையும், தன்னிலை விளக்கமும் பெறுகின்ற அறிவின் முழுமை நிலை இது.

## 300. மனித ஆற்றல்

* மனம் வேறு, செயல் வேறு, விளைவுகள் வேறு என்று மனித ஆற்றல் சிதறுண்டு போகின்றது.

## 301. மனித வாழ்வு

➢ மனித வாழ்வு என்பது இறைநிலையை நாடிய அறிவின் பயணம்.

## 302. மனோதிடம்

❖ ஒன்றையே நினைந்து நினைந்து அதில் தானே தன்னை நிலை நிறுத்திக் கொண்டு பழகக்கூடிய உளப்பயிற்சியே மனோதிடத்தை (வில்பவர்) உண்டாக்கும்.

## 303. மந்திரம்

▲ வாழ்வில் மனிதன் ஒரு பொருளையோ, நலத்தையோ, உயர்வையோ அடைவதற்கு ஏற்படுத்திய ஒலி அமைப்புகளுக்கு மந்திரம் என்று பெயர். அவ்வாறு அமைந்த சொல்லை உச்சரிக்கும்போது சொல்லின் முதலுக்கும் முடிவுக்கும் இடைப்பட்ட ஒலியே மந்திரம் எனப்படும்.

▲ மந்திரங்களை உச்சரிக்கும்போது மூளை மனம் அடிமனத்திற்குச் செல்கிறது. அடிமனம் என்பது இறைநிலையோடு தொடர்புடையது. முழுமையின் பின்னும் முறையிட்டுக் கேட்டால், முழுமை அதைக் கொடுக்கும். அதற்கு உடலும் மனமும் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும். அதற்காகவே பாட்டில் மந்திரங்களை இணைத்து வைத்துள்ளார்கள்.

## 304. மயக்கம்

⁂ அறிவு நிலையை மறந்து புலன்களின் உணர்ச்சி நிலைகளில் மயக்கம் ஏற்படுகிறது. இந்த அறிவின் மயக்க நிலையில் எழும் எந்தச் செயலும் மனிதவாழ்வுக்கு நன்மை தராது.

⁂ உணர்ந்தால் தெளிவு; உணராவிட்டால் மயக்கம்.

## 305. மழை வாழ்த்து

✪ ஏரி, குளம், கிணறு, ஆறு எல்லாம் நிரம்பி வழிய மாரி, அளவாய்ப் பொழிக! மக்கள் வளமாய் வாழ்க!

## 306. மனவளம்

✤ உயிருக்கும் உடலுக்கும் ஒத்த உறவு, இனிமையான உறவு இருக்கும் வரையில்தான் உடல்நலம் மனநலம் பாதுகாக்கப் பெறும்.

- ✤ மனத்தை எந்த அளவில் உயர்த்திக் கொள்கிறோமோ, தூய்மை செய்து கொள்கிறோமோ, வலுப்படுத்திக் கொள்கிறோமோ, நெறிப்படுத்திக் கொள்கிறோமோ, அந்த அளவிலேதான் மனிதனுடைய வாழ்வு, மனிதனுடைய மதிப்பு, மனிதனுடைய வெற்றி, மனிதனுடைய எல்லா வளங்களும் அமையும்.
- ✤ மனவளம் என்பதுதான் நமது சங்கத்தினுடையவும் நமது பயிற்சி முறைகளினுடையவும் உன்னத நோக்கம்.

## 307. மன அலைச்சுழல்

- மயக்கம் தீர்ந்து தெளிவுபெற வேண்டுமானால், முறையான உளப்பயிற்சியின் மூலம் மன அலைச்சுழல் விரைவைக் குறைத்து, அறிவானது இறைநிலையோடு ஒன்றுபட வேண்டும்.
- நாம் விரும்பும் முறையிலே நம்முடைய மனதை இயக்கப் பழகிக் கொண்டால் என்ன நினைக்கின்றோமோ அந்த நினைவிற்கேற்றவாறு மன அலைச்சுழல் ஒடுங்கிவிடும்.

## 308. மனவளக்கலை

- ✪ தான் உயரவும், பிறரை உயர்த்தவும் ஏற்ற பயிற்சியும் தொண்டும் மனவளக்கலையில் அடங்கியுள்ளன.
- ✪ பழக்கத்திற்கும், விளக்கத்திற்கும் இடையே போராடிக் கொண்டிருக்கக்கூடிய மனதின் பழக்கத்தை முறையாக மாற்றிக் கொண்டு விளக்கத்தை நல்விளக்கமாகப் பெற்று அதன் வழியே வாழ்க்கையை அமைத்துக் கொள்ள உள்ள முறையான பயிற்சியே மனவளக்கலை.
- ✪ ஓடுகின்ற மனதை உயிரில் லயிக்கின்றபடி செய்வதுதான் தவம் - மனவளக்கலை.
- ✪ வாழ்நாள் முழுவதும் மனவளக்கலையைப் பயில்வதனால்தான் நான் உயர்ந்துகொண்டே வருகிறேன் என்று உணருங்கள்.
- ✪ தன்னிடம் இருக்கும் கறையே மறதியாக வெளிப்படுகிறது. மனவளக்கலை மறதியைப் போக்கும் விழிப்பை உண்டாக்கும். மனவளக்கலையிலும் மனிதன் தெய்வமாகத் தன்னை உயர்த்திக் கொள்ள முடியும்.

- இறைவன் வழியே அறிவைச் செலுத்தி வாழக்கூடிய பயன்பாடு தான் இறைவழிபாடு என்பதைத் தெரிந்துகொண்டு, இயற்கையின் இனிமையைப் பாதுகாத்து இன்புற்று வாழ உதவும் ஓர் ஒப்பற்ற கலைதான் மனவளக்கலை.
- மன்ற வாழ்வு என்பது இறைநிலையை நாடிய அறிவின் பயணம்.
- மனம், உயிர், உடல் இம்மூன்றிலும் ஒற்றுமையான இயக்கத்தை பாதுகாக்க ஏற்ற ஒரே சாதனம் மனவளக்கலைதான். மனதையும், உயிரையும் விளங்கிக் கொண்ட பின்னர்தான் தேவையில்லாத அனைத்தையும் தள்ளுவதற்கு மனதினால் இயல்கிறது.
- நேரடியாக பரம்பொருளோடு இணைந்து தவமிருப்பது முதலிலேயே முடியாது. அதற்குப் பல படித்தளமாகப் பயிற்சிகள் வேண்டும். அந்தப் பயிற்சியைத்தான் நாம் இங்கு சொல்லிக் கொடுக்கிறோம், மனவளக்கலையிலே.
- சீரியதான வாழ்க்கை நெறியைப் பற்றிய குறிப்புகளை - இதுவரையிலே துண்டுதுண்டாக எங்கெங்கோ கிடந்ததை எல்லாம் - இப்பொழுது சேகரித்துச் சேர்த்துவிட்டோம். இதை ஒழுங்குப்படுத்தி மனவளக்கலை என்ற பெயராலே கொண்டு வந்துவிட்டோம்.

## 309. மனநிறைவு

- மனநிறைவாக வாழ்வதற்கு இறைஉணர்வும் உயிர் உணர்வும் வேண்டும்.

## 310. மனிதன்

- உடல் - உயிர் - மனம் என்ற மூன்று தத்துவங்களின் ஒரு உன்னதமான இணைப்புதான் மனிதன்.
- மரத்தினிலே விதையும் அந்த வித்தினில் மரம்போல், மனிதனுக்குள் தெய்வம், அந்த தெய்வத்திற்குள் மனிதன்.
- மனம், இதன், மனிதன். இதன் என்றால் அன்பும் கருணையுமாக ஒத்தும் உதவியும் இருப்பது என்று பொருள்.
- உலகில் உள்ள எல்லாத் தோற்றங்களிலும் எல்லா உயிர்களிலும் சிறந்த மேலான ஒரு இயக்க நிலை மனித உருவம்.

❀ எல்லாம்வல்ல, இறைநிலையை முழுமையாக எடுத்துக்காட்டி பிரதிபலிக்கும் கண்ணாடி மனிதனே.

❀ உலகிலேயே மிக உயர்ந்த பிறப்பு மனிதப் பிறப்பு.

❀ மனிதனுடைய அறிவானது பிரபஞ்சத்திற்கு ஆதிபொருளாக உள்ள தெய்வநிலை.

❀ மனித உருவம் இறைநிலையின் ஆற்றல்கள் அனைத்தும் உள்ளடக்கமாகப் பெற்று அதன் பெருமையை அன்பு, கருணை, அறம், ஞானம் என்ற மதிப்புமிக்க அறிவு செறிந்த செயல்களால் மற்ற மக்களுக்கும், உயிரினங்களுக்கும் விளக்கிக் கொண்டிருக்கும் இறைவனின் தூதுவர்.

❀ மனிதனுடைய நான்கு உணர்வுகள் இன்பம், துன்பம், அமைதி, பேரின்பம் ஆகியன உண்டு.

❀ இன்பமும் அமைதியும் மனத்திற்குள்ளிருந்துதான் வரவேண்டும். அதற்கு மனம் தன்னையே நன்கு பூரணமாக அறிந்து கொள்ள வேண்டும். மனம் தனது மூலமான உயிரில் ஒடுங்கிப் பின்னர் உயிரின் மூலமான இறைநிலையை எய்தினால் அறிவாகிறது. அந்நிலையைப் பெற்ற மனத்தினைக் கொண்ட மனிதனும் தெய்வமும் தரத்தில் ஒன்றே.

❀ ஆறாவது அறிவைக் கொண்ட இந்த மனிதனின் வாழ்வின் நோக்கம் - அறிவு முழுமை பெற வேண்டும்.

❀ சாதாரண மனிதன் புலனளவிலே அஞ்ஞானியாக இருக்கிறான்.

❀ சந்தர்ப்பவசமாக இருவேறுபட்ட விலங்கினங்களின் உடலுறவி லிருந்து ஆதிகால மனிதன் தோன்றினான்.

❀ மனம் + இதம் = மனிதன். இதம் என்றால் அன்பும் கருணையுமாக ஒத்தும் உதவியும் இருப்பது என்று பொருள்.

❀ வாழ்க்கை நெறி, மனம், இயற்கை, சமுதாயம் என்ற முக்கோணத் துக்குள்தான் மனிதன் வாழ்ந்தாக வேண்டும்.

❀ ஆணவம், கன்மம், மாயை இந்த மூன்றினுடைய மூட்டைதான் 'மனிதன்' என்ற பிரகிருதி. மனிதன் படுகின்ற துன்பங்கள் அத்தனைக்கும் உற்பத்தி ஸ்தானம் இம்மூன்றே.

❀ மனம் இல்லா மனிதனும் இல்லை. மனதை அறிந்த மனிதனும் இல்லை.

- ❀ பரு உருவம் உடல், நுண்ணுருவம் உயிர், பிரணவ உருவம் சீவகாந்த அலை இம்மூன்றும் அடங்கிய திருவுருவமே மனிதன்.
- ❀ விலங்குக்கும், தேவனுக்கும் இடையிலிருப்பவன்தான் மனிதன்.
- ❀ மனிதனின் வாழ்வைச் சீர்குலைக்கும் பகைவனாக மனிதனே இருக்கிறான்.
- ❀ நீண்டகால மனித இனச் சரித்திரத்தை அறிவால் விரிந்து நினைந்து பார்த்தோமானால் இக்கால மக்கள் ஒவ்வொருவருடைய அறிவும் வியத்தகு முறையில் சிறந்துள்ளது என்பது விளங்கும்.
- ❀ இயற்கையின் ஒரு சிறு கூறுதான் மனிதன். ஆனாலும் பேரியக்க மண்டலத்தில் விளங்கும் எல்லாச் சிறப்புகளும் நுணுக்கமாக உள்ளடக்கம் பெற்ற திருவுருவமாக மனிதன் திகழ்கிறான்.

## 311. மனித இனம்

- ✻ மனித இனம் மற்றவர்களோடு பிணக்கின்றி வாழ வேண்டியது மிக அவசியமாகின்றது.

## 312. மனிதன் முழுமையாக

- ➢ பழக்கத்திற்கும் விளக்கத்திற்கும் இடையே போராடிக் கொண்டிருக்கக் கூடிய மனத்தின் பழக்கத்தை முறையாக மாற்றிக் கொள்ள நல்விளக்கம் பெற்று அதன் வழியே வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முறையான பயிற்சிதான் மனவளக்கலை.
- ➢ வாழ்வின் நோக்கம், தேவைகள், விருப்பங்கள் இவற்றை மதிப்பிட்டுக் கொள்ள வேண்டும். இவை ஒன்றுக்கொன்று முரண்படாத வகையில் அமைத்துக் கொள்ளவும் வேண்டும்.
- ➢ தனக்கு அமைந்துள்ள சூழ்நிலைகளையும், வாய்ப்புகளையும் கணித்துக் கொள்ள வேண்டும்.
- ➢ இயற்கையின் ஒழுங்கமைப்பையும், அதன் ஆற்றலின் விளைவான தவறற்ற காரண விளைவு விதியையும் உணர்ந்து போற்றியும், மதித்தும் நடக்க வேண்டும்.
- ➢ வாழ்வில் அடைய வேண்டிய லட்சியங்களையும், ஆற்ற வேண்டிய செயல்களையும் வரிசையாகத் தொகுத்துக் கொள்ள வேண்டும்.

- ➢ இத்தகைய வாழ்வுக்குத் தன்னை தகுதியாக்கிக் கொள்வதற்கு உரிய உடல் வலிமையையும், திறனையும் அறிவையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றிற்கெல்லாம் தேவைப்படக்கூடிய முறையான உடற்பயிற்சி, உளப்பயிற்சி, சிந்தனை இவற்றைப் பழகிக் கொள்ள வேண்டும்.
- ➢ விழிப்போடும், விடாமுயற்சியோடும், எண்ணம், சொல், செயல் இவற்றைப் பயன்படுத்த வேண்டும்.
- ➢ அவ்வப்போது ஏற்படும் தவறுகளை 1. அகத்தாய்வு; 2. செயல் திருத்தம் என்ற இரண்டு வழிகளாலும் திருத்தித் தன்னைத் தூய்மையாக்கிக் கொண்டே இருக்க வேண்டும்.

## 313. மனிதநேயம்

- ❖ மனிதனை மனிதன் நேசிக்க வேண்டும். மதித்து நடக்க வேண்டும். கூடுமானவரை ஒருவரை ஒருவர் எப்போதும் வாழ்க வாழ்க என்று வாழ்த்திக் கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் நேசம் வளரும், வெறுப்பு நீங்கும். நன்மை ஏற்படும்.

## 314. மன்னிப்பு

- ▲ இருப்புக்கட்டிய சினமே வஞ்சமாக மாறியது. யார் நமது தேவையைத் தடை செய்தாரோ, சினம் கொண்டாரோ, அவரை மன்னித்து விடுவதே சிறப்பு. இதனால் மன்னிப்பு வஞ்சத்தைப் போக்குகிறது.
- ▲ நீங்கள் உங்கள் வாழ்க்கையில் யாரை தீயவர்கள், கொடியவர்கள் என நினைக்கின்றீர்களோ, அவர்களை இந்த நிமிடமே மன்னித்து விடுங்கள். பிரச்சனை முடிந்தது. அப்படியில்லாமல் பழிக்குப்பழி என்று இறங்கினால் அதற்கு முடிவே இல்லை.
- ▲ பிறர் அறியாமையை மன்னிப்பதும் தனது அறியாமையை அகற்றுவதும் அறிவுடைமை.

## 315. மனையடி சாஸ்திரம்

- ⁎ நான்கு சுவர்களை அமைக்கும்பொழுது அதற்குள் உண்டாகும் காந்தக்களம் மனிதனுக்கு நன்மை செய்வதாக அமைவதோ அல்லது தீமை விளைவிப்பதாக அமைவதோ உண்டு. என்ன

*நீளத்தில் அகல - உயரத்தில் அறை அமைந்தால் அதில் எவ்வாறு காந்தக்களம் அமையும்? அந்தக் காந்தக்களத்தில் வாழும் மனிதர்களுக்கு என்னென்ன நன்மை - தீமைகள் எல்லாம் உண்டாகும் என்று கணக்கிட்டு அறிந்து கூறும் கலைதான் மனையடி சாஸ்திரம். அவ்வாறு நன்மை செய்யக்கூடிய ஒரு காந்தக் களத்தில் வசிப்பது நல்லது.*

## 316. மறைபொருள்

✪ *மறைபொருள் மூன்றாகும். 1. ஒருங்கிணைப்பு ஆற்றல் என்ற தெய்வநிலை. இதுவே எல்லாம்வல்ல இறைநிலை என்று கூறுவர். 2. அதற்கடுத்தபடியாக ஒவ்வொரு உடலிலும் ஓடிக் கொண்டிருக்கும் உயிர். 3. ஜீவகாந்த சக்தி. அதனுடைய ஆற்றல் தான் மணமாகவும் விளங்கிக் கொண்டிருக்கிறது. இம்மூன்றையும் உணர வேண்டுமானால் சிந்தனை வேண்டும்.*

## 317. மணமக்கள்

✤ *அணுவும் அதன் இயக்கமும்போல மணமக்கள் நெறிபிறழாது வாழ்வீர்.*

## 318. மாக்கோல கவிகள்

✪ *நான், சிந்தித்து சிந்தித்து மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்து என்ற நூலில் எழுதியுள்ள கவிகள் பல. அதில் உள்ள கவிகள் ஒவ்வொன்றையும் பல தடவைகள் நீங்கள் படிக்க வேண்டும். இல்லை என்றால், அந்தக் கவிகளினுடைய முழு அர்த்தத்தையும், நான் எந்த அறிவு நிலையில் இருந்துகொண்டு எழுதினேன் என்பதையும் உணர்ந்துகொள்ள முடியாது.*

## 319. மாதாவிடாய்

✪ *மூத்திரம் நான்கு அல்லது ஐந்து மணி நேரத்திற்கொரு முறை கழிகிறது. மாதவிடாய் மாதத்திற்கொரு முறை போகிறது. இரண்டும் கழிவுப்பொருட்கள்தான். ஆனால் மாதவிடாயை மட்டும் பெரிதாகப் பொருட்படுத்துகிறீர்களே அது ஏன்?*

✪ *அந்த 3 நாட்களில் இரத்தம் சுத்தம் செய்யப்படுகிறது. தூய்மை என்பதுதான் தூமை என்றானது. இரத்தம் வேறு - பிரியட் அன்று வரும் இரத்தம் வேறு அல்ல. அப்படிப் பார்த்தால் பிரசவ காலமும் தீட்டுக் காலம்தான். ஆனால் அந்த சீம்பால் குழந்தைக்குக் கொடுக்கிறோமே. அது தீட்டாகுமா?*

## 320. மாணா மனநிலை

✵ அனுபவ நினைவுகளும், தெளிவும், நல்முடிவும் கொண்டு உணர்ச்சிகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் திறனே அறிவு எனப்படும். அறிவு மயங்கி உணர்ச்சிமயமான நிலைதான் மரண மனநிலை எனக்குறிக்கப் பெறுகின்றது. மனித வாழ்வில் நிகழ்ந்த கொடுமைகள், போர்கள், துன்பங்கள் அத்தனையும் இம்மாணா மனநிலைகளால்தான் நிகழ்ந்துள்ளன. நிகழ்ந்தும் கொண்டு இருக்கின்றன.

## 321. மாயத்துணைவன்

❀ சீவகாந்தக் கருமையம் மனித மணவாழ்க்கையின் கருவூலம். செயலுக்குத்தக்க விளைவைத் தரும் தெய்வீக நீதிமன்றம். பிறப்பிற்கும் இறப்பிற்கும் - தொடர் பிறப்புகள் பலவற்றுக்கு மிடையே வினைப் பதிவு பெட்டகமாகத் தொடர்ந்து வரும் மாயத் துணைவன். தெய்வத்தையும் மனிதனையும் இணைத்துக் காட்டும் அறிவின் பேரின்பக்களம்.

## 322. மாயை

✻ வேதாந்தத்தில் மாயை என்றொரு வார்த்தையை அடிக்கடி சொல்வதுண்டு. மாயை என்றால் என்ன? மயக்கம் என்று சாதாரணமாகப் பொருள் கொள்ளலாம். உள்ளதை சாதாரணமாகத் தெரிந்து கொள்ளாத கற்பனையிலேயே இருப்பது மாயை.

✻ பிறப்பு, இறப்பு நடுவே இவ்வுலக வாழ்வு. இதை பிறப்பு நிலையில் உள்ள மதியின் போக்கே மாயை.

✻ கற்பனை வேகத்தால் இயற்கையை மறந்து, சமூகத்தின் அமைப்பையும், மக்களின் எண்ணம் - செயல்களால் விளைந்து வரும், விளையப் போகும் நிகழ்ச்சிகளையும் மறந்த - உடலளவில்

தேவையையும் - அறிவுக்கு அந்த சமயப் பொருத்தத்தையும் ஞாபகத்தில் கொண்டு - புலனறிவின் எல்லையிலேயே மட்டும் விரிந்து - மயக்க நிலையில் எண்ணிச் செயலாற்றுவது மாயை என்பதாகும்.

* இந்தக் கையை, காலையெல்லாம் வைத்துக்கொண்டு, காரியங்கள் செய்கிறோம் என்று நினைக்கிறோம் பாருங்கள், அதைத்தான் மாயை என்றும் சொல்கிறோம்.

* தன்னிலை விளக்கம் அறிந்த, தானே தன்னை விடுவித்துக் கொள்ள முடியாத மயக்க நிலையை, மாயை என்று சொல்லுகிறோம்.

* செய்ததையே மீண்டும் மீண்டும் செய்துகொண்டு விளக்கம் இல்லாமல் அந்த இருட்டிலேயே மனிதன் நடக்கிறபோது, நல்லது கெட்டது தெரியாமல் மேலும் மேலும் அவன் துன்பத்திற்கு ஆளாகும் நிலையை 'மயக்கம்' 'மாயை' என்று சொல்கின்றார்கள்.

## 323. மரணம்

➢ ஒருவன் கொலை செய்தான். அதனால் மற்றொருவன் மடிந்தான். நீதிபதியின் தீர்ப்பால் கொலை செய்தவன் மடிந்தான். கொலைக்குக் கொலை என்பது நேர்மையான நீதியா? எனவே மரணதண்டனை வேண்டாம்.

## 324. மான உவகை

❖ பிறர் உள்ளம் புண்படத் தன் உளம் மகிழும் பிழைசெயல் மான உவகை எனப்படும்.

## 325. மாணவர்கள்

▲ மாணவர்கள் தங்கள் கவனம் முழுவதையும் படிப்பிலேயே செலுத்த வேண்டும். வேறு விஷயங்களில் சிதறவிடக் கூடாது. மாணவப் பருவம்தான் அறிவை வளர்த்துக் கொள்வதற்கும் - குணத்தை வகுத்துக் கொள்வதற்கும் உரிய பருவம். இந்த வகையில் நமது மனவளக்கலை அவர்களுக்குப் பேருதவியாக இருக்கும்.

▲ மாணவப் பருவத்தில் அகத்தவம் பயின்று மனத்தூய்மையும், வினைத்தூய்மையும் பெறும்போது கல்வி நிலையங்களில்

எவ்வகைக் குழப்பங்களும் ஏற்படாது. இதன் விளைவாகத் தொழிற்சாலைகளிலும், அலுவல்களிலும் திறமை மிகும். அமைதி நிலவும். சமுதாயத்தில் பெரும்பாலான மக்கள் இவ்வாறு வாழ்வின் நெறியுணர்ந்து வாழ்ந்தால் சமுதாயத்தில் அரசியல் சிறப்புறும். பொருளாதாரம் வளம் பெறும்.

▲ மாணவர்கள் நன்கு கல்வி பயில வேண்டும். கேளிக்கைகளிலும் வேறு நடவடிக்கைகளிலும் கவனத்தைச் சிதற அடித்துக் கொள்ளாமல் இருக்க வேண்டும். வாழ்க்கையைக் கற்றுக்கொள்ள வேண்டிய பருவம் இது. கல்விக்கே உரிய பருவம் இது.

▲ குணநலன்களை ஏற்றுப் பதிய வைத்துக் கொள்ள வேண்டிய பருவம் இது. இப்போது அவர்கள் கல்வியில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும்.

▲ நமது மனவளக் கலையானது கல்வி கற்கும் திறனை உயர்த்து மாதலாலும், இதுவே உண்மையான, சிறந்ததான வாழ்க்கைக் கல்வியாதலாலும் மாணவர்கள் மனவளக்கலையிலும் ஈடுபட வேண்டும். மனவளக்கலை அவர்களின் மாணவப் பருவத்தில் பேருதவியாக இருப்பதோடு அவர்களது வாழ்க்கை நெடுகிலும் நன்மை செய்யும்.

▲ மாணவர்களுக்குப் படிப்பில் மனம் நிலைக்க, ஒவ்வொரு துறையில் ஆழ்ந்து பொருள் உணர, அவற்றை நினைவிலே வைத்துக்கொள்ள, போதிய மனவலிவு, கூர்மை, நுண்மை ஆகிய இவை அகத்தவம் (தியானம்) என்ற உளப் பயிற்சியினால்தான் கிடைக்கிறது. மாணவப் பருவத்தில் அகத்தவம் பயின்று மனத்தூய்மையும், வினைத் தூய்மையும் பெறும்போது கல்வி நிலையங்களில் எவ்வகைக் குழப்பங்களும் ஏற்படாது. இதன் தொடர் விளைவாகத் தொழிற்சாலைகளிலும், அலுவலகங்களிலும் திறமை மிகும். அமைதி நிலவும். சமுதாயத்தில் பெரும்பாலான மக்கள் இவ்வாறு வாழ்வில் நெறியுணர்ந்து வாழ்ந்தால் சமுதாயத்தில் அரசியல் சிறப்புறும். பொருளாதாரம் வளம் பெறும்.

▲ மாணவர்களே! இப்பொழுது கல்விக் காலத்தில் உங்களை நீங்கள் எந்த வகையிலே தயார் செய்து கொள்கின்றீர்களோ, அதுதான் எதிர்கால வாழ்விலே நீங்கள் அடையப் போகும் வெற்றி, புகழ், மகிழ்ச்சி எல்லாவற்றிற்கும் அடிப்படையாகும்.

▲ உங்களுக்கென்று இந்த காலமே ஒதுக்கப்பட்டு உள்ளது. இந்தக் கல்வியினை முறையோடு, ஊக்கத்தோடு கற்று ஆக்கத்துறையிலே வாழ வேண்டும். செயலாற்ற வேண்டும். கல்விக் காலத்தைப் பாழாக்கக் கூடாது. கல்விக் காலத்தை முழுமையாகப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.

## 326. மாமியார் – மருமகள்

⁕ மாமியார் - மருமகள் இடையே துன்பமேயில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த உலகம் முழுவதும் இது பெரிய பிரச்சனை. தங்கள் மாமியார் என்னென்ன கஷ்டம் கொடுத்தார்களோ, அதையெல்லாம் மூட்டை கட்டி வைத்திருந்து மருமகள் வந்தால் அவள் தலையில் போடுபவள்தான் மாமியார் என்பது மாற வேண்டும்.

⁕ திருமணமான மறுநாளைக்கே தனிக்குடித்தனம், உத்யோகம் காரணமாக வேறு ஊருக்கு மகனும், மருமகளும் போய் விடு கிறார்கள். அங்கே மாமியார் போகிறார்கள். மருமகள் தாக்குகிறாள். இந்த இரண்டும் இருக்கக் கூடாது. இதற்கு மத்தியில் அந்தப் பெண்ணின் கணவன் படும்பாடு கொஞ்சம் நஞ்சமல்ல. அந்த இடத்தில் சமாதானம் வந்தால் எல்லாக் குடும்பங்களுக்கும் நல்லது.

⁕ மருமகள் என்றால் என்ன அர்த்தம் தெரியுமா? மருவி வந்த, சுற்று வழியில் வந்த மகள். அதாவது தன் வயிற்றில் பிறக்காமல், தன் வயிற்றில் பிறந்த மகனின் கையைப் பிடித்துக் கொண்டு வந்தவள். ஆகவே அவளும் ஒரு வழியில் மகள் மாதிரிதான்.

## 327. மிலிட்டரி ஓட்டல்

✪ அசைவ உணவு விடுதிகளுக்கு பெயர், மிலிட்டரி ஓட்டல். எப்படி இந்த பெயர் வந்தது? மிலிட்டரியில் அசைவ உணவும், மதுவும்தான் பிரதானம். ஏன்? அசைவ உணவை உண்டால்தான் சுடு என்றவுடன் ஏன்? எதற்கு? என்று கேள்வி கேட்காமல் மனிதனைச் சுட முடியும்.

## 328. முகப்பொலிவு

✤ சினம் எழாத மனம் பிரகாசமாக இருக்கும். முகம் பொலிவாகக் காணப்படும்.

## 329. முக்தி

- அறிவை அறிவால் அறிந்த நிலையே முக்தி. அறிவை அறிந்தோர் அன்பின் அறமே ஞானம்.
- மனம் காலியாக இருந்தால் அதுவே முக்தி.
- எள்ளுக்குள் எண்ணெயைப் போன்று பிரபஞ்சம் எங்கும் - எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்து நின்று இயங்கும் ஆன்மா - ஜீவன் - கடவுள் - இயற்கை - சக்தி - என்று பலவாறாகச் சொல்லப்படும் அரூப சக்தி நிலையை அறிவால் அறிந்து - வாழ்வில் அமைதி பெறுவதே முக்தி.
- முக்தியை அடைந்த அளவே நமது வாழ்க்கையில் வெற்றி.
- அவனை மறந்தால் நீ சிறியோன் அவனை அறிந்தால் நீ பெரியோன் அவன் நீ ஒன்றாய் அறிந்த இடம் அறிவு முழுமை அது முக்தி.

## 330. முதல் நூல்

- எண்ணம் என்பது தத்துவம் ‘தத்’ என்றால் இயற்கை எண்ணமே இயற்கையின் சிகரமாகும். இயற்கையே எண்ணத்தில் அடங்கி நிற்கும். அந்த இயற்கையை அணுகி உணர்ந்து அதன் மூலத்தை உள்ளவாறு விரித்துரைக்கின்ற நூல்கள் ‘முதல் நூல்கள்’ எனப்படும். இவையே தத்துவம் அல்லது மெய்யறிவாகும். இவையே உலகின் அத்தனை நூல்களுக்கும் அடிப்படையாகும்.

## 331. முதலாளித்துவம்

- மக்களின் எண்ணிக்கையும், விஞ்ஞான இயந்திரங்களும் பெருகிக் கொண்டே வருகின்ற இக்காலத்திற்கு முதலாளித்துவ முறையே நீடித்து உலகில் இருக்குமென்றோ எண்ணுவது தவறாகும்.

## 332. முதுமை

- இறைவெளியின் இறுக்க ஆற்றலால் செல்கள் கீழ்நோக்கித் தள்ளப்படுகின்றன. தசைகள் கீழே இறங்குகின்றன. நரம்புகள் பாதிக்கப்பட்டு, தளர்வடைகின்றன. நரம்புகள் வலு இழப்பதால் எலும்புக்கும், தசைகளுக்கும் உள்ள பிடிப்பு குறைகிறது. தசைகள்

இறுக்கம் குறைந்து, உடல் தளர்ந்து போகிறது. இந்தத் தளர்வைத்தான் ‘முதுமை’ என்கிறோம்.

## 333. முதுமை வாழ்வு

* வாழ்வின் நோக்கம் தேவைகள் விருப்பங்கள் இவற்றை மதிப் பிட்டுக் கொள்ள வேண்டும். இவை ஒன்றுக்கொன்று முரண் படாமலும் அமைத்துக் கொள்ள வேண்டும்.
* தனக்கு அமைந்துள்ள சூழ்நிலைகளையும் வாய்ப்புகளையும் கணித்துக் கொள்ள வேண்டும்.
* இயற்கையின் ஒழுங்கமைப்பையும் அதன் ஆற்றலின் விளைவான தவறற்ற காரண - விளைவு விதியையும் உணர்ந்து கொண்டும் மதித்தும் நடக்க வேண்டும்.
* வாழவேண்டிய முறையையும் ஆற்ற வேண்டிய செயல்களையும் வரிசையாகத் தொகுத்துக் கொள்ள வேண்டும்.
* இத்தகைய வாழ்வுக்குத் தன்னை தகுதியாக்கிக் கொள்ள உடல் வலிமையும், திறமையும், அறிவையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றிற்கு முறையான உடற்பயிற்சி, உளப்பயிற்சி, சிந்தனை இவற்றைப் பயன்படுத்த வேண்டும்.
* அவ்வப்போது ஏற்படும் தவறுகளை அகத்தாய்வு செயல் திருத்தம் என்ற இரண்டு வழிகளாலும் திருத்தித் தன்னை தூய்மை யாக்கிக் கொண்டே இருக்க வேண்டும்.

## 334. முழுமைப்பேறு

➢ மனம் தூய்மையில் பூரணத்தை அடைந்து அமைதியாக இருப்பதே முழுமைப்பேறு.

➢ தவத்தாலும் தற்சோதனையாலும் கிடைக்கும் குணநலப் பேற்றின் இறுதிப்படிதான் முழுமைப்பேறாகும்.

## 335. முனிவன்

❖ தன்முனைப்பு அற்றவன், கோபமற்றவன், பற்றை விட்டவன், முனிவன்.

## 336. முப்பாழ்

▲ ஆதியாக இருந்த பரவெளி ஒன்று. இரண்டு அணுக்களைத் தள்ளி நிறுத்தும்போது அங்கே இருக்கும் வெளி ஒன்று. இந்த வெளி பிரபஞ்சம் முழுவதும் இருக்கிறது. ஒவ்வொரு அணுவும் இயங்கும்போது மையத்தில் இருக்கக்கூடிய பரவெளி ஒன்று. ஆதியான பரவெளியை சதாசிவம் என்றும், அணுக்களுக்கிடையில் உள்ள வெளியைச் சிவம் என்றும், அணுவின் மையத்தில் உள்ள வெளியை சக்தி சிவம் என்றும் பெயர்வைத்தார்கள். இம்மூன்றையும் முப்பாழ் என்று சொல்வார்கள். முப்பாழையும் இணைக்கும்போது அறிவு செயல்படுகிறது. பிரபஞ்சத்தைக் கடந்து அதுவாகவே நிற்கிறபோது அறிவு செயல்படாமல் நிலைக்கிறது.

## 337. முறையற்ற பால்கவர்ச்சி

⁜ பொருள்மேல் ஆசைப்பட்டதுபோல, மறுபால் நபரிடம் ஆசைப் படுவது பால்கவர்ச்சி. பிறர் உள்ளம் ஒத்துக்கொண்டாலும் ஒத்துக்கொள்ளாவிட்டாலும் தன்னுடைய எண்ணம் பூர்த்தியாக வேண்டும் என்ற அளவுக்கு, இவனுடைய இச்சையைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு, வரம்பு கடந்து செய்யும் முயற்சியும், செயலும் எதுவோ, அதுதான் முறையற்ற பால்கவர்ச்சியாக வருகிறது.

## 338. மூடப்பழக்கம்

✵ காரணத்தையும், விளைவுகளையும் அறியாமல் பின்பற்றப்படுகின்ற ஒரு சடங்கு அல்லது பழக்கம் மூடப்பழக்கம் ஆகும்.

## 339. மூடநிலை

✤ மனிதனிடம் பேராற்றல் இருந்தும், அவன் அதை மறந்து இருக் கிறான். அதனால் இப்பேராற்றல் அவனிடம் இயக்கம் பெறாமல் பலம் குன்றி இருக்கிறது. இதை மூடநிலை என்பார்கள்.

## 340. மூவாசை

➯ மண்மீது பெண் துணையால் பொன் கொண்டே வாழ்கின்றோம். மாற்றுவதேன் மூவாசை.

## 341. மூளை வளர்ச்சியற்ற குழந்தைகள்

✪ பால்வினை நிலைகளைக் கொண்ட காமசூத்திரம் என்ற நூலை தொகுப்பதற்கு முன்பாக ஒரிஸ்ஸாவில் உள்ள பூரியில் பலவிதமான செயற்கை நிலைகளை (POSTURE) கண்டுபிடித்து அவற்றைச் சிலைகளாக வடித்து வைத்துள்ளார்கள். ஆதி காலத்திலிருந்து ஆண் பெண் என்னென்ன நிலைகளை எல்லாம் பயன்படுத்தி வந்தனர் என்பதெல்லாம் சிலை வடிவில் உள்ளது. இது எல்லாம் இன்பம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டது. அதனால் என்னென்ன விளைவு வரும் என்பது தெரிந்ததில்லை. நேரானதான நிலை தவிர மற்றது எல்லாம் கருப்பையையும் கருவையும் பாதிக்கும் என்பது தெரிந்த தில்லை. நேரானதான நிலை தவிர எந்த முரண்பட்ட நிலை யானாலும் அதற்குத் தக்கவாறு கருவுக்கு இடையூறு உண்டா கிறது. அதுதான் இன்றைக்கு உலகில் உள்ள ஊனமுற்ற குழந்தைகளும் - மூளை வளர்ச்சியற்ற குழந்தைகளும் பிறப்பதற்குக் காரணமாகிறது.

## 342. மூளை வியாதி

✵ பயத்தினாலும், ஏதேனும் தாங்க முடியாத மனஅதிர்ச்சியாலும், பருவகால உணர்ச்சியாகிய விந்துநாதக் கழிவு வேகம் தடைபடுவ தாலும், ஒரு சிலருக்கு உடலிலுள்ள மின்சாரம் அளவுக்கு மேல் மூளையைத்தாக்க, இதைத் தொடர்ந்து அது ஒரு மூளை வியாதியாகி விடுகின்றது.

## 343. மூலம்

❀ ஒலிக்கெல்லாம் மூலம் ஓங்காரம். காணும் ஒலிக்கெல்லாம் மூலம் இருள்.

## 344. மூலகங்கள்

✻ மூலகங்களின் எண்ணிக்கை 109 வரையில் இருப்பதற்கு அணுக் களின் இடையே உள்ள தொலைவு துல்லியமான கணக்குக்கு உட்பட்டுள்ள நிலையே காரணம்.

## 345. மௌனம்

- மௌனம் என்பது வாய்மூடல் அல்ல. பெரிய மறைபொருள். மனதை அறியும் வாய்ப்பு.
- வாய் பேசாதபோது மனம் பேசுகிறது! மனம் பேசாதபோது இறைநிலை பேசுகிறது.
- **மௌனத்தில்தான் நாம் இறைவனோடு பேசிக் கொண்டிருக்கிறோம், அல்லது இறைவன் நம்மோடு பேசிக் கொண்டிருக்கிறான்.**
- மௌன சாதனைகளிலேயே சிறந்த பயனளிக்கும் பயிற்சி முறை மௌன நோன்பு ஆகும். வாய்ப்பேச்சு இல்லாதிருத்தல் பேசா நோன்பு மனம் அடக்கப் பயிற்சி அல்லது மனத்தைச் சீரமைத்துக் கொள்ளும் பயிற்சி. மனத்தைச் சீரமைக்கும் சாதனைக்கு வாய் பேசாதிருத்தல் ஒரு புறச்சடங்கு ஆகும்.
- மௌனத்தின் முழுநோக்கம், மனமடக்கம் அதற்குரிய சடங்குதான் வாய் திறந்து பேசாமை.
- நீ பேசாது இருக்கும்போது இறைவன் பேசிக் கொண்டிருக்கிறான். இறைவன் உள்ளேதான் இருக்கிறான். நீ உன் பேச்சிலேயே நினைவை வைக்கும்போது, அவன் பேசுவதைக் கேட்க முடியாது. உன்னுடைய பேச்சை நிறுத்து.
- மௌனம்தான் ஒலிக்கு எல்லாம் அடிப்படையாக இருக்கிறது. இருள்தான் ஒலிக்கெல்லாம் மூலமாக இருக்கிறது.
- மௌனத்தில் தவமும் தற்சோதனையும் செய்வதால் கரு மையம் தூய்மை அடைகிறது.
- மௌனமே சப்தமாய் எண்ணமே இயல்பாய் மாறியது அறிவீர்.
- அறிவின் உச்சம் மௌனம்.
- உலகில் பொது மொழிகள் இரண்டு மட்டுமே. ஒன்று மௌனம். மற்றது மழலை.

## 346. மெய்ப்பொருள்

- உடலுக்குள் உயிர், உயிருக்குள் அறிவு, அறிவுக்குள் அருட் பேராற்றலின் இயற்கை மெய்ப்பொருள்.

- ❖ மெய்ப்பொருள் இறைவெளியானது ஒரு புனிதமான அப்பழுக் கற்ற ஒளி ஊடுருவும் சர்வ வல்லமையுள்ள வெள்ளம்.
- ❖ மெய்ப்பொருள் விளக்கத்தை விளங்கிக் கொண்டவன் வெளியில் சொல்வதற்குப் பயந்த காலம் ஒன்று உண்டு.
- ❖ இப்போது உலகம் சிந்திக்க ஆரம்பித்து விட்டது. சிந்தனை உள்ளவர்கள் இன்று அதிகம். சிந்தனை உள்ள இளைஞர்கள் வந்துவிட்டார்கள். இனி ஒருவரையும் மெய்ப்பொருள் விளக்கம் கொடுத்ததற்காக உலகம் மாய்க்க முடியாது.
- ❖ மெய்ப்பொருள் எங்கும் உள்ளது. இது இல்லாத இடம் இல்லை. இது நம் பிரபஞ்சத்தைச் சூழ்ந்துள்ளது. பிரபஞ்சத்திற்கு அப்பாலுக்கும் அப்பாலாய முடிவில்லாத தூரம் வரை அது வியாபித்திருக்கிறது.
- ❖ இந்த பிரபஞ்சத்திற்குள்ளும் மெய்ப்பொருள் இருக்கிறது. இந்தப் பிரபஞ்சமாகவே அதுதான் இருக்கிறது. அருவம் அல்லது அரூபம் என்று இதைச் சொல்லுவார்கள். இதன் உருவமற்ற தன்மையால்.
- ❖ இயக்கம் அற்றிருப்பது பிரம்மம். அதுவேதான் தனது சுற்றமுழுத் தத்தின் காரணமாக சுழலத் தொடங்கியபின், அகண்டமாயிருந்த பிரம்மம் தன் இயக்கத்தால் பின்னமான பின், அதுவே மெய்ப் பொருளே பரமாணு ஆயிற்று.

## 347. மெய் உணர்தல்

- ▲ உயிர் என்ற மூலசக்தியே எல்லா இயக்கங்களுக்கும் பேராதாரமாக உள்ளது. இது பூரணமானது. எங்கும் என்றும் எப்போதும் எந்த வகையிலும் மாறுபடாமல் நித்தியமாய் சத்தியமாய் இருப்பதால் இதை மெய் என்றும், இந்நிலையை அறியும் அறிவின் செயலை மெய்யுணர்தல் என்றும் சொல்லப்படுகிறது.
- ▲ மெய்நிலையை அறியும் ஆற்றல், மெய்யறிவு எனப்படுகிறது. மெய் நிலையறியும் செயலை மெய்யுணர்தல் என்று சொல்கிறோம்.
- ▲ மெய்யுணர்வோடு இணைந்து இயங்காத எந்த ஆசையும் பேராசையாகத்தான் முடியும்.

## 348. மெய்யறிவு

- விஞ்ஞானத்திலுள்ள புதிர்களை எல்லாம் தீர்த்து வைத்து மெய்யறிவை நாடி மனிதகுலம் முன்னேற்றத்தை நோக்கிச் செல்ல வேண்டும்.

## 349. மெய்ஞ்ஞானம்

- ஞாலத்தை அறிவது விஞ்ஞானம் மூலத்தை உணர்வது மெய்ஞ்ஞானம்.
- பிறப்பைப் பற்றி, அதாவது மூல ஆற்றலைப் பற்றி உணர்ந்தால், அது மெய்ஞ்ஞானம்.

## 350. மொட்டை

- பக்கத்து வீட்டுப் பெண்ணுக்குத் தலைமுடி நீளமாக இருந்தது. தனக்கு அப்படியில்லையே என்று பொறாமை, ஏமாற்றம், ஒருமுறை பக்கத்து வீட்டுப் பெண்ணுக்கு கடுமையான காய்ச்சல் வந்து கஷ்டப்பட்டாள். இவள் 'இதுதான் சரியான வாய்ப்பு என்று முடிவு செய்து' பக்கத்து வீட்டுக்காரிக்கு காய்ச்சல் விட்டதும் கோயிலுக்கு சென்று மொட்டை போட்டுக் கொள்வாள் என்று அவள் சார்பாக இவள் நேர்த்திக்கடன் போட்டாள். அவளுக்குக் காய்ச்சல் விட்டது. தவிர்க்க முடியவில்லை. தெய்வ குற்றம் நேர்ந்து விடுமோ என்று பயந்து மொட்டை போட்டுக் கொண்டாள். இவளுக்கோ சந்தோஷம்.

## 351. மேகநோய்

- உடலுறவு இன்பத்தின் அணுபோகத்தில் அளவு மீறியதும், முறை மாறியதுமான ஒழுக்கத்திலிருந்து மேகநோய் தோன்றுகின்றது.
- வித்து போதுமான முதிர்ச்சி பெற்றபின், அறியாமையாலோ, வசதியின்மையாலோ நீண்ட காலத்திற்கு அதை வெளியேற்றா திருத்தல் மேகநோய்க்கு ஒரு காரணம்.
- மேகநோய் ஒரு தடவை வந்துவிட்டால், மருந்தினாலோ, சாதாரண உடற்பயிற்சியினாலோ, பத்தியத்தாலோ போக்கிக் கொள்வது கடினம்.

## 352. மோதுதல்

- எப்போதுமே இரண்டு அணுக்கள் மோதுவது இல்லை. அணுக்கள் நெருங்கி இயங்கும்போது அலைகள் மோதுகிறதே தவிர - அணுக்கள் மோதுவது இல்லை. எல்லா அணுக்களும் சுழன்று கொண்டிருப் பதனால் - விரைவான சுழற்சியில் மோதுதல் வரமுடியாது. ஒவ்வொரு அணுவுக்கும் விரைவிலான விரிவலை இருப்பதனால் அந்தந்த அளவில் அணுக்களைத் தள்ளிவிடுகிறது.

❀ ❀ ❀

# பொன்மொழிகளின் பொற்குவியல்கள்

‘என் சிந்தை கோயிலென வாழும் குரு’ என்ற தாயுமானவரின் வாக்கின்படி மானுடத்தின் சிந்தைகளில் வாழுகின்ற ஞானகுரு வேதாத்திரி மகரிஷி. அறிவார்ந்த பெருங்கருணையும் தவஞ்சான்ற நல்லமைதியும் ஒன்றாகக் கலந்து இயங்கும் பெருங்கடல். உலக அமைதியை நாடுகின்ற நமது குரு. அறிவியல் ஆன்மீக சித்தராகவும் சிறந்த மகானாகவும் அருள் வள்ளலாகவும், பிரம்ம ரிஷியாகவும் தத்துவ ஞானியாகவும் வாழ்ந்தவர்.

தத்துவம், விஞ்ஞானம், வாழ்க்கை நெறி என்ற சமுதாயத்தின் மூன்று அம்சங்களையும் பாமரரும் புரியும் வண்ணம் மகரிஷியின் எழுத்துக்களில் இருப்பது எல்லாமே பொன்மொழிகளாகும். இந்தப் பொன்மொழிகளைப் படித்து பரவசமடைந்திருப்பீர்கள்! பொன்மொழிகள் ஒவ்வொன்றிலும் உயிர்த்துடிப்பின் சீரான ஒலியைக் கேட்டுக்கொண்டே இருப்பீர்கள்.

குருவின் மூளைக்குள்ளேதான் எத்தனை ஆயிரம் விருட்சங்களின் விதைகள். இந்த விதைகள் - உலகெங்கும் உள்ள மானுடத்தின் மீது - இந்தப் பொன்மொழிகள் மூலம் விதைக்கப்பட்டுள்ளன. திறந்து கிடக்கும் ஞான இரகசியங்களை இனி எளிமையாக ஊடுருவிப் பார்க்க முடியும்.


குருவின் நூற்றாண்டில் இந்தப் பொன்மொழித் தொகுப்புகளை குருவுக்கே அர்ப்பணித்து மகிழ்கிறோம்.

குருவின் தொண்டில்
**பானுகுமார்.**

செங்கற்பட்டு,
*10.07.2010*

# துணை நின்றவை

- அறிவுத் திருக்கோயில் மலர்கள்.
- அருள்தந்தையிடம் நேரிடையாக கேட்ட உபதேசங்கள்.
- அருள்தந்தையின் பயிற்சிகளிலும் விழாக்களிலும் கருத்தரங்கு களிலும் சேகரித்த விபரங்கள்.
- அருள்தந்தையிடம் நெருக்கமாக இருந்தவர்களிடம் நேரிடையாக எடுத்த பேட்டிகள்.



# ஆசிரியரின் படைப்புகள்

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 பாகம் I & பாகம் II
4. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
5. மாவீரன் நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
6. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
7. தியானம் பழக 100 நற்சிந்தனைகள்
8. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
9. நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்
10. பாரதியாரின் 100 பதில்கள்
11. தன்னம்பிக்கை மலர்கள் (நாளொரு நற்சிந்தனைகள்)
12. ஞாபகம் வருதே ஞாபகம் வருதே...
13. மன்னார்குடி வரலாறு
14. ஓய்வுகால வாழ்க்கை
15. செயலே விளைவு (சிறுகதைத் தொகுதி)
16. தவம் (சிறுகதைத் தொகுதி)
17. டென்ஷனை வெல்வது எப்படி?
18. காலமே உன் உயிர்
19. இடைக்காட்டுச் சித்தர்
20. ஏழு ஆலயங்கள்
21. சிம்லாவில் ஐந்து நாட்கள்
22. உடம்பின் உன்னதங்கள்
23. அறிவறிந்த மக்கட்பேறு
24. நினைவாற்றல் கலை
25. தித்திக்கும் திருவாரூர் (அரிய செய்திகள் ஆயிரம்)